பக்கங்கள் : 18+VIII=26
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 10.00
www.uthayan.com
சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 20 ஞாயிற்றுக்கிழமை (05.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 09

வரட்டுக் கௌரவம் பார்க்காமல்

# புலிகளின் யோசனைப்படி பேச்சு நடத்துவதே வழி!

## நாடாளுமன்றத்துக்கு வந்த திருமாவளவன் அங்கு பேட்டி



கொழும்பு,டிசெம்பர்5

**இலங்கையில் ஆட்சிபுரியும் அரசுக்கு இணையான வகையில் தமிழீழத் தனியரசு ஒன்றைப் புலிகள் பேணி வருகின்றனர். யதார்த்த நிலைமை இப்படி இருக்கையில், புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை. புலிகளின் யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதே இந்த மண்ணில் சமாதானம் நிலைபெற ஒரே வழி.**

**- இப்படி வலியுறுத்திக் கூறுகின்றார் தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன்.**

யாரும் எதிர்பார்த்திராத வகையில் திருமாவளவன் நேற்று நாடாளுமன்றத்துக்குத் திடீரென வருகைதந்தார். அங்கு அவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமோக வரவேற்பளித்தனர்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் சந்தித்தார். அச்சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கூடியிருந்த செய்தியாளர்களோடும் அவர் உரையாடினார்.

தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகள் மற்றும் உத்தேச இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகிய விடயங்கள் தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் நிலைப்பாட்டை அவர் விளக்கினார்.

அவர் தெரிவித்ததாவது:-

நான் கடந்த 26ஆம் திகதி முதல் தமிழீழத்தில் தங்கி இருந்தேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களைச் சந்தித்த போதும் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க முடியவில்லை. புலிகளால் நடத்தப்படும் அறிவுச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய உடன்படிக்கையை எதிர்த்து தமிழகத்தில் மக்கள் போராட்டம்!

### திருமாவளவன் தகவல்

கொழும்பு,டிசெ.5

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கைச்சாத்திடப்படவிருக்கும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையைக் கைவிடுமாறு கோரி தமிழகத்தில் விரைவில் மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு திருமாவளவன் பதிலளித்தார்.

இந்தியாவில் தமிழீழப் போராட்டத்துக்கு மக்களின் ஆதரவு உண்டு. தற்போது தடா சட்டம் நீக்கப்பட்டுள்ளபோதிலும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து வெளிப்படையாக ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் சிறு தயக்கம் காணப்படுகிறது. என்றாலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்யக்கூடாது என்று கேட்டு அறவழிப் போராட்டம் ஒன்றை நடத்தி எமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளோம் - என்று திருமாவளவன் தெரிவித்தார். (ஜ-3)

## மட்டுவிலில் விபத்து இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ.5

சாவகச்சேரி, மட்டுவில் கல்வயல் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டியான இளைஞன் மரணமானார்.

மட்டுவில் சிவன் கோயிலடியைச் சேர்ந்த வி.றொபின்சன் (வயது - 27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இறந்தவரின் சடலம் மரணவிசாரணைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப லொறியின் சாரதி மதுபோதையில் இருந்தார் என வைத்திய பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது என சாவகச்சேரிப் பொலீஸார் கூறினர். (3-13)

## குடாநாடெங்கும் கனமழை பொழிவு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் 24 மணித்தியாலங்களுக்கும் கூடிய நேரமாகத் தொடர்ந்து பெய்துவரும் கனமழையினால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில இடங்களில் மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு முதல் ஆரம்பித்த கன மழை நேற்றுப் பகல் முழுவதும் விடாது தொடர்ந்தது; இரவிரவாகவும் பெய்தது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் மற்றும் யாழ். நகரப் பிரதேசங்களில் மழையினால் நேற்று முழுநாளும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதாகப் பிரதேச செய்தியாளர் கள் அறிவிக்கின்றனர்.

யாழ். நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் வீதிகள், பொது இடங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

தொடரும் மழையினால் பிரதான வீதிகள் கூட பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. பல இடங்களில் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்தது.

நகரப் பகுதியில் உள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. நகரின் கரையோரப் பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கு குடிசை வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சில பகுதிகளில் இருந்து குடும்பங்கள் தற்காலிக இடங்களுக்கு நகரவேண்டி ஏற்பட்டிருக்கிறது. எத்தனை குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்ற விவரங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நேற்று பாடசாலை விடுமுறை நாளாக இருந்தபோதிலும் தனியார் கல்வி நிலையங்களில் மாணவர் வரவு குறைந்திருந்தது. அரச அலுவலகங்களிலும் பணியாளர் வருகை மந்தமாகவே காணப்பட்டது.

அடைமழை இன்றும் தொடரக்கூடிய கால நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-6-7-15-17-117-173-135)

## நேற்று அதிகூடிய மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.5

குடாநாட்டில் நேற்றுக் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை 101.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று யாழ். வளிமண்டல அலுவலகம் தெரிவித்தது.

இந்த வருடத்தில் இதுதான் ஆகக்கூடுதலான மழை வீழ்ச்சி என்றும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் 64.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது என்றும் வளிமண்டல நிலையம் தெரிவித்தது.

காலநிலை மாற்றம் குறித்து தமக்குத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் - கொழும்பு அலுவலகமே அது தொடர்பான விவரங்களை வெளியிடும் என்றும் - அந்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (3-6)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு ஒரு வருடம் கழிந்தும் இல்லை

### மக்கள் ஏமாற்றம் என்கிறார் அரச அதிபர்

திருகோணமலை,டிசெ.5

குடாநாட்டில் மீளக் குடியமர்ந்தவர்களில் 8 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறுவதற்கான வவுச்சர்களில் கையொப்பம் இட்டு ஒருவருட காலம் கடந்த போதும் இன்னமும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதனால் ஏமாற்றமடைந்துள்ள மக்கள் மாகாணசபை மீதும் அரசின் மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இப்படிக் கூறியுள்ளார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே அரச அதிபர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதில், இக்கொடுப்பனவுக்குப் பொறுப்பான நிக்கொட் பணிப்பாளர் பாரபட்சமாகச் செயற்படுகின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே சூரியகாந்தியில்

★ போர் வெடிக்குமா?
- அரசியல் கட்டுரை...
★ இயக்குநர் பாரதிராஜாவின் சிறப்புச் செவ்வி...
★ அமெரிக்கா நோக்கிய ஆன்மீகப் பயணம்...
யாரொடு நோவோம்..., நினைக்க சிரிக்க.. சிந்திக்க..., கடுக்கதை..., கவிதைகள்..., யாழ். பாணம்.

## திருமாவளவனுக்கு பொன்னாடை

கொழும்பு,டிசெ.5

நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலாளர் திருமாவளவனுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர்

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழ் இதழியல் கல்லூரிக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்துகொள்வதற்காக திருமாவளவன் வன்னிக்கு வந்திருந்தார். அவர் அங்கு பல பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார். (ஜ-3)

## வெடி விபத்தில் போராளி சாவு!

கிளிநொச்சி,டிசெ.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வெள்ளியன்று தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் என 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

வீரவேங்கை நிசாந்தன் (தெய்வநாயகம் ஜெயசீலன், உன்னிச்சை, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். (3-12)

## மெல்போர்ணில் மாவீரர் நினைவு

மெல்போர்ண்,டிசெ.5

ஆஸ்திரேலிய நகரங்களில் ஒன்றான மெல்போர்ணில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று எழுச்சியாக இடம்பெற்றன.

பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தமிழக எழுத்தாளர் புகழேந்தி கலந்து சிறப்புரை நிகழ்த்தினார்.(3)

# பிரதான கட்சிகள் பிரிந்து நிற்பதாலேயே புலிகளின் தாளத்துக்கு ஆடுகின்ற நிலை

## மொனராகலையில் ஜனாதிபதி



பதுளை,டிசெ.5

பிரதான கட்சிகளுக்கு இடையே பிளவு இருப்பதனால்தான் பிரபாகரனின் ஆட்டத்திற்கு நாம் தாளம் போடவேண்டியேற்பட்டுள்ளது. இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால், பிரபாகரனால் எம்மை எதுவும் செய்யமுடியாது. நாட்டின் பிரச்சினைக்கும் காலக்கெடுவுக்குள் இல்லாத தீர்வை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையும் தென்படும்.

- இப்படிக் கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மொனராகலை நகர மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே இப்படிக் கூறினார்.

'அபிவிருத்திப் புரட்சி' நிகழ்ச்சியை மொனராகலையில் ஆரம்பித்து வைப்பதற்காக இந்த வைபவம் ஏற்பாடாகியிருந்தது.

சமூக சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சரான சுமேத ஜயசேன தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் ஜனாதிபதி பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தம் நாட்டின் ஒன்றையாட்சிக்குப் பாதகமாக இருந்தபோதிலும், தற்காலிக யுத்தநிறுத்தம் ஏற்பட்டிருப்பதில் நிம்மதியான சூழல் உருவாகியிருக்கின்றது. இந்த யுத்தநிறுத்தம் தொடர்ந்து நீடிக்கும் வகையில் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு சிறு பிரச்சினைகளை ஏற்படுத்தி யுத்த நிறுத்தத்தை மீறி வருகின்றனர். பாரிய பிரச்சினைகள் எதிலும் அவர்கள் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர். அவர்களின் நிலைப்பாடுகளை அவதானிக்கையில், அரசுடன் சமாதானப் பேச்சை நடத்த முன்வரும் சாதகத் தன்மைகளைக் காண முடிகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சை முன்னெடுக்கத் தயாராகவே இருந்து வருகின்றது. இது விடயத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் இருந்து வருகின்றேன்.

சமாதானம் என்பது ஓரிரு தினங்களில் ஏற்படுத்தக்கூடியதொன்றல்ல. குறிப்பிட்ட சிலரே சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுகின்றனர். எத்தகைய தடைகள் ஏற்பட்டபோதிலும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தியே தீருவேன்.


பலஸ்தீனத்திலும் இஸ்ரேலிலும் 56 வருடகாலமாக ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியாதிருக்கிறது. சமாதானம் என்பது எட்டாக்கனியாக மாறியுள்ளது. அயர்லாந்தில் பல்லாண்டு காலமாகவே பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு ஏற்படாமலிருந்து வருகின்றது. ஆகையினால், எமது நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிறிது காலம் எடுக்கவே செய்யும்.


எமது நாட்டின் 80 வீதமான மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். 20 வீதமான மக்களே சமாதானத்தை எதிர்த்துவருகின்றனர். ஆனால், எனது இலக்கு நிரந்தர சமாதானத்தை அடைவதேயாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று வங்குறோத்து நிலையை அடைந்துள்ளது. அக்கட்சியினர் ஒவ்வொருவராக அரசு பக்கம் ஆதரவு வழங்கும் நிலையில் இருந்து வருகின்றனர். நாட்டின் வரவு - செலவுத் திட்டம் என்பது நாட்டின் தலைவிதியை நிர்ணயம் செய்யும் பாரிய செயற்பாடாகும். அது சம்பந்தப்பட்ட விவாதத்தின்போதும் எதிர்க்கட்சித் தலைவர் எத்தகைய கருத்தையும் தெரிவிக்காமல் விட்டிருக்கின்றார்.

ஆளும் கட்சி சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் எதுவும் பேசாமலிருந்த நிலை எமது நாட்டில் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. அத்துடன், எதிர்க்கட்சித் தலைவருக்கே தெரியாமல் அவரது கட்சி உறுப்பினர்கள் 12 பேர் முதலிரு வாக்கெடுப்பின்போது அரசுக்குச் சாதகமாக வாக்களித்துள்ளனர். இத்துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உடன் தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும். எனது தலைமையிலான கட்சியின் அந்நிலை ஏற்பட்டிருந்தால் நான் உடனடியாக இராஜினாமாச் செய்திருப்பேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ-3)

## நகரப் பகுதியில் வெள்ளக் காட்சிகள்....







யாழ். நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை நேற்றுப் பிற்பகல் சுற்றிப் பார்த்த உதயன் படப்பிடிப்பாளரின் கமெராவிலிருந்து....
படங்கள் : பார்த்தீபன்









# சங்கானை கரைச்சி மயானம்: கடைசிவரை (கவனிப்பார்) யாரோ?

இடுகாடு, சுடுகாடு, மயானம், சுடலை என்பதெல்லாம் இறு மாறி 'துயிலும் இல்லம்' என மாற்றமடைந்து வருகின்ற காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். ஒவ்வொரு மனிதனும் தன் குடும்பத்துடன் வாழ தன இல்லத்தை எவ்வளவு தூய்மையாகவும், சுத்தமாகவும் பேணி வருகின்றானோ, அதே ரேல் தனது இறுதிமூச்சு நின்றவுடன் செல்லும் இடமும் இக்கவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொள்ள வேண்டு அப்படி தூய்மையாக, சுத்தமாக இருக்கவேண்டிய இடம் இறு பற்றைக்காடாக, குப்பை மேடாகக் காட்சியளிக்கும் மானம் பற்றிய ஓர் ஆய்வு.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் யா-178 சகானை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 'கரைச்சி மானம்' எனப் பெயருடன் விளங்கிவரும் மயானத்தின் இன்ய நிலைபற்றி, எவருமே கவனிக்காத நிலைபற்றி எடுத்திய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.


மூன்று கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சுமார் 1000 மும்பங்கட்கு மேல் தமது இறுதிக்கடனை நிறைவேற்ற ள்ள ஒரேயொரு மயானம் இதுவாகும்.

கடந்த பல வருடங்களுக்கு மேலாக இம்மயானம் எதுவித மரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் பற்றைக் டாகத் தோற்றமளிக்கின்றது. இம்மயானம் இந்துமத, கிஸ்தவமத மக்களின் பாவனைக்குரிய மயானம் ஆகும். ார் 20 பரப்பு விஸ்தீரணம் உடையது. இம்மயானத்தின் ாமரிப்பு வலி. மேற்குப் பிரதேச சபைக்கு உரியது.

**பொதுமக்கள் தங்கும் கட்டடம் (மடம்)**

இங்கு காணப்படும் இக்கட்டடம் பல வருடங்களுக்கு லாக எதுவித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படாமல்

தங்குமடத்தின் இன்றைய தோற்றம்.



சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக்கட்டடத்திற்குப் போடப்பட்டிருந்த சிமெந்தினாலான கொங்கிறீட் பிளேட் உடைந்து கீழ்தரையும் சேதமாகியுள்ள நிலையில் நீண்டகாலமாக இருந்து வந்தது. இதனைத் திருத்தி அமைப்பதற்கு யாருமே எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. இதனால, சங்கானை தெற்குக் கிராம சேவையாளர் பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இக்கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யமுன்வந்தனர். இதற்காக ஒரு லட்சம் ரூபா நிதியை முன்னாள் இந்து கலாசார அமைச்சரான தி.மகேஸ்வரன் மூலம் பெற்றுக்கொண்டு, திருத்த வேலைகளை மேற்கொண்டனர். மேலே கொங்கிறீட்சீற் போடும் வகையில் ஒன்பது தூண்கள் நிறுவப்பட்டன. மடத்தினுள்ளே மக்கள் அமரக்கூடிய வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டன. தரை ஒப்புரவாக்கப்பட்டது.

சேறும் சகதியுமாகவுள்ள மயானத்திற்குச் செல்லும் பாதை.



பக்கத்துச் சுவர்களும் புதிதாகக்கட்டப்பட்டன. இந்நிலையில் நிதி பற்றாக்குறை ஏற்பட்டது. ஐந்து லட்சம் ரூபா நிதி தரலாம் என எழுத்து மூலமாக அறிவித்தே முதற்பகுதியாக ரூபா ஒரு லட்சம் அமைச்சர் வழங்கி இருந்தார். மிகுதி நிதியைப் பெற்று, முழுவேலைகளையும் பூர்த்தி செய்யலாம் என அவரிடம் சென்றபோது, இவ்வூர் 'கௌரவம் காக்கும் சமாதான நீதிவான்' ஒருவரின் தவறான பிரசாரத்தால், இந்நிதியைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் பல ஏற்பட்டதோடு நிதியைப் பெறமுடியாமலும் போய்விட்டது.

இக்கிராம அபிவிருத்திச் சங்கம் இவற்றைச் சங்கானைப் பிரதேச செயலக மற்றும் வலி. மேற்குப் பிரதேச சபை அதிகாரிகளின் மேற்பார்வையுடனும், தொழில்நுட்ப அலுவலரின் மதிப்பீட்டினையும் பெற்றே செய்தமை குறிப்பிடத்தக்கது.

**செய்திக் கட்டுரை**

தேவையற்ற பிரச்சினைகளால் அமைச்சரின் நிதியைப் பெறுவதில் தடங்கல் ஏற்பட்டதோடு, அரசும் மாறியதால் ஒன்றுமே இச்சங்கத்தினால் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டது.

தற்போது அரைகுறையான நிலையில் கட்டடம் உள்ளது. மழைகாலம் என்றாலும் சரி, கோடைகாலம் என்றாலும் சரி யாருமே சிறிது நேரம் தங்கமுடியாத நிலையில் கட்டடம் உள்ளது.

**மயானப் பாதை**

சங்கானை தேவாலய வீதியால் இம்மயானத்திற்குச் செல்லும் பாதை செல்கின்றது. கல்போட்டுத் தார் ஊற்றப்படாத மண் பாதை. மழைகாலத்தில் யாரும் அப்பாதையால் நடநது செல்வதே சிரமம். இந்நிலையில் பாடையில் பிரேதத்தைக் கொண்டுபோகவோ அல்லது வாகனத்தில் கொண்டு செல்லவோ பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. குண்டும் குழியும், சேறும் சகதியுமாகப் பாதை காட்சியளிக்கின்றது. பாதையின் இருமருங்கும் பற்றைகள், கழிவுக் குப்பைகள், பழைய இரும்பு, போத்தல், பீங்கான் ஓடுகள், சிகை அலங்கரிப்பாளர்களால் கொட்டப்படும் கழிவுத் தலைமயிர்கள் எனப் பாதையைப் பாவனை செய்யமுடியாத நிலையில் காட்சியளிக்கின்றது.

**மயானக் கிணறும் / பிரதேச சபையின் கொல்களமும்**

தகனக்கிரியைக்காக இங்கு செல்வோர் பாவனைக்கென ஒரு கிணறு வலி.மேற்குப் பிரதேச சபையினால் கட்டப்பட்டு இம்மயானக் காணியில் உள்ளது. நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த இக்கிணறு தற்போது திருத்தியமைக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஆனால், இக்கிணற்றைப் பாவனை செய்ய முடியாதநிலை இருக்கின்றது. காரணம் இதற்கு அண்மையில் குறுகிய தூரத்தில் ஒரு கொல்களம் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு அங்கே மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு, இக்கிணற்றுநீரின் மூலம் சுத்தமாக்கப்பட்டு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இம்மாடுகளை வெட்டும்போது வரும் எச்சங்கள், எலும்புகள் யாவும் உரிய

**மு.சந்திரகுமார்**
**சங்கானைச் செய்தியாளர்**

முறையில் வெட்டிப் புதைக்கப்படவேண்டும். ஏதோ கடமைக்குப் புதைத்துவிட்டுச் சம்பந்தப்பட்டவர்கள் சென்றுவிடுவார்கள். அவற்றை நரிகள், நாய்கள் கிளறுவதோடு, இக்கிணற்றுக்குள்ளும் போட்டுத் தண்ணீரை அசுத்தமாக்குகின்றன. இக்கொல்களத்திற்கு அருகிலுள்ள வெளியில் எலும்புகளும் எச்சங்களும்

அருகருகே அமைந்துள்ள பிரதான கொல்களமும், கிணறும்.



நிறைந்திருப்பதைத் தினமும் அவதானிக்கலாம். இதனால், கிரியைக்கான தண்ணீரை இம்மயானத்தில் பெறமுடியாத நிலையில் வீட்டில் இருந்தே தண்ணீரைக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. இவற்றை யார் செய்யவேண்டும்? சம்பந்தப்பட்ட பிரதேச சபை இதுவரை காலமும் எதுவித அக்கறையுமின்றி இருப்பதால் பொதுமக்கள் படும் சிரமங்களை யார் கவனிப்பது? ஆறடி நிலமே போதுமென்று அமைதியைத் தேடும் மயானத்தின் நிலையைச் சீர்செய்ய வேண்டாமா?

சம்[illegible]பட்டவர்கள் இனிமேலாவது இதில் கவனம் செலுத்துவா[illegible]

*

# நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 லட்சம் ரூபா செலவில் திட்டங்கள்

## சன சமூக அமைப்புகளுக்கு பல உதவிகள்

வலி.கிழக்கு,டிசெ.5

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 15 லட்சம் ரூபா செலவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி மூலம் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி, கலாசாலை வீதி, மங்கையர்க்கரசி சனசமூக நிலையம் புனரமைப்பு, கல்வியங்காடு இலங்கைநாயகி சனசமூக நிலையம் புனரமைப்பு, முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலையம் புனரமைப்பு, நல்லூர் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு, நல்லூர் ஏழு நட்சத்திர விளையாட்டுக் கழக உடற்பயிற்சி வலுவூட்டல், சாதனங்கள் கொள்வனவு, நல்லூர் நாராயணா சனசமூக நிலைய முன்பள்ளி புனரமைப்பு, நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்துக்குத் தளபாடம் கொள்வனவு, அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் புனரமைப்பு, நல்லூர் மகாத்மா சனசமூக நிலையம் தளபாடம் கொள்வனவு, கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகம் புனரமைப்பு, அரசசாலை அருணோதய சனசமூக நிலைய புனரமைப்பு, கோண்டாவில் வேதபாராயண முன்பள்ளி அபிவிருத்தி, கொக்குவில் பிரம்படி பெண்கள் அமைப்புக்கு தளபாடம் கொள்வனவு, திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்துக்கு புத்தகம் கொள்வனவு, நல்லூர் சங்கிலியன் பெண்கள் அமைப்புக்குத் தளபாடம் கொள்வனவு, கந்தர்மடம் ஞானசோதி சனசமூக நிலையத்துக்குத் தளபாடம் கொள்வனவு, அரசடி ஞான சக்தி சனசமூக நிலையத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, கொக்குவில் பொதுமக்கள் நலன்புரி நிலையத்துக்கு கல்விப் பயிற்சி ஊக்குவித்தல், திருநெல்வேலி சிவ சக்தி சனசமூக நிலையத்துக்குக் கட்டடப் பொருள்கள் வழங்கல், திருநெல்வேலி கலைச்சுடர் சனசமூக நிலையத்துக்குத் தளபாடம் கொள்வனவு, நல்லூர் செட்டித்தெரு வேல் முருகன் சனசமூக நிலையத்துக்குத் தளபாடம் கொள்வனவு, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்துக்குத் தளபாடம் கொள்வனவு ஆகிய திட்டங்களுக்கே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-180)

# காய்ச்சல் பீடித்த பெண் மரணம்!

காய்ச்சல் பீடிக்கப்பட்ட குடும்பப் பெண் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த மகாலிங்கம் காந்தமலர் (வயது - 54) என்பவரே மரணமானவராவார்.

காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு கடந்த 28 ஆம் திகதி மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்திய சில மணி நேரத்தில் நேற்று முன்தினம் அங்கு மரணமானார். சடலம் மரண விசாரணையின் பின் கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)




யாழ். மத்திய கல்லூரியின் பரியோவான் முதலுதவிப் படையணியின் 25ஆம் வருட நினைவு தினமும் வெள்ளிவிழா மலர் வெளியீடும் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

வைபவத்தில் கல்லூரி முதலுதவிப் பொறுப்பாசிரியர் எஸ்.உதயகுமார், கல்லூரியின் உப அதிபர் எஸ்.பத்மநாதன், கல்லூரி அதிபர் க.இராசதுரை, யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கல்லூரியின் பழைய மாணவன் த.கலாறெஜி ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# மலரப்போகும்
# புத்தாண்டில் புதிய சவால்!
# எம்முடன் இணைய நீங்கள் ரெடியா!

## விரைவில்
## அறிமுகப்படுத்துகிறோம்

NEW DIGITAL MINILAB
Frontier 570

01.01.2005
தொடக்கம்
எமது நிரந்தர
வாடிக்கையாளர்களுக்கு
விஷேட விலைக்கழிவுகள்

**4R 10/=**




**வியாபார நோக்கில் டிசைனிங் செய்து**
**CD மூலம் பிறிண்டிங் செய்பவர்களுக்கு**
## அதிரடி விலைக்கழிவுகள்.

இதுமட்டுமா? Noritisu - QSS3201 மூலம், Digital Image Software ஐயும் அறிமுகப் படுத்தியுள்ளோம். இதன் மூலம் மிகத் துல்லிய மான பளிச்சிடும் வர்ணப்படங்களை பெற்றுக் கொள்ளலாம்

ஒரே தடவையில்
5 அல்லது அதற்கு மேற்பட்ட
றோல்களை பிரதியாக்கம்
செய்பவர்களுக்கு CD யில் இலவசமாக
பதிவு செய்து தருகின்றோம்.

உங்கள் ஆதரவுடன் எங்கள் சேவை

# Moorthy Lazer Digital Colour Lab

யாழ். வீதி, மானிப்பாய். தொ.பே. 021 222 2884 Email: moorthylazer@yahoo.com

உதயன்

## போராட்டம் இனி எவ்வழியில்?

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்து சுமார் மூன்று ஆண்டுகள் ஆகப் போகின்றன.

யுத்தம் ஓய்ந்துள்ள போதிலும் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுவிடவில்லை. யுத்தமும் இல்லை. சமாதானமும் இல்லை என்ற இக்கட்டான நிலைமை தொடர்கின்றது.

தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியது போன்று போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுகளுமின்றி இன்ப்பிரச்சினைக்கு ஒரு முடிவுமின்றி ஓர் அரசியல் வெறுமைநிலை நீடிக்கின்றது.

கனன்று கொண்டிருந்த போர் ஆயுதங்களுக்கு ஓய்வுகொடுத்ததால் - யுத்தநிறுத்தம் செய்ததால் - ஏற்பட்ட நன்மை ஏதும் ஈழத்தமிழருக்குக் கிடைக்கவில்லை. தென்னிலங்கைக்கே கிடைத்திருக்கின்றது.

அதனால்தான் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை அவசரமாகவும் அவசியமாகவும் வலியுறுத்தி நிற்கின்றது தமிழர் தரப்பு.

இதுதொடர்பாக பொறுமையின் எல்லைக் கோட்டில் நின்று தமிழர்களின் தலைமை முன்வைத்த கோரிக்கையை, சிங்கள அரசு உத்தியோகபூர்வமாகவே நிராகரித்துவிட்டது. அது மட்டுமல்ல, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது அரசின் முடிவை நாடாளுமன்றத்தில் மீளவும் உறுதிப்படுத்தியும் விட்டார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே பேசவேண்டும் என்றால் அதற்கு அரசு ஒருபோதும் இணங்காது. இடைக்கால ஏற்பாடு, இறுதித்தீர்வு ஆகிய இரண்டும் குறித்து ஒரே சமயத்தில் பேசலாம் என்றால் அதற்கு அரசு தயார் - என நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார் கதிர்காமர்.

ஆக, ஈழத்தமிழரின் மேற்படி அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து ஈழத்தமிழரின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு தீர்மானித்துவிட்டது.

அப்படிச் செய்தால் தமிழர் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர, தமிழினத்துக்கு வேறுவழியில்லை என்ற தலைவர் பிரபாகரனின் அறிவிப்பு தானாகவே செயற்பாட்டுக்கு வருவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாமற் போகிறது.

சரி, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றால் மீண்டும் யுத்தமா என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒரு துப்பாக்கியுடன் , பொறுப்பேற்று, முன்நகர்த்தத் துணிந்த தலைவர் பிரபாகரன், இன்று பெரும் மரபுவழி இராணுவக் கட்டமைப்பையே நிறுவி, தமிழருக்கென்ற தேச நிர்மாணத்துக்குரிய கட்டுமானங்களையும் அமைத்துள்ளார்.

இராணுவப் பலத்திலும், படை வலிமையிலும் இன்று தமிழினம் வீறுகொண்டு பெரும் தைரியத்தோடு நிற்கின்றது.

ஆனாலும், தமிழினம் போர்வெறி கொண்டதல்ல; சமாதானத் தீர்வில் ஆறாத காதலும் மாறாத விருப்பமும் கொண்ட - அமைதியையே எப்போதும் நாடுகின்ற - ஒரு மக்கள் கூட்டம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு இடித்துக் காட்டச் செய்கின்ற வகையில் தமிழினத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்பு இனத்தின் தலைமைக்கு உள்ளது.

எனவே, சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறுமார்க்கமில்லை என்று குறிப்பிட்ட தலைவர், அந்தச் சுதந்திரப் போராட்டத்தை எப்படி முன்னெடுக்கப் போகிறார் என்ற கேள்வி எழுகின்றது.

எடுத்ததும் போருக்கு - தொட்டதும் ஆயுதத்துக்கு அவர் செல்வார் எனக் கருதத் தேவையில்லை.

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தமிழ் இனத்துக்குத் தலைமை வகித்து வழி நடத்தும் தலைவரின் முன்னால் பல தெரிவுகளுள்ளன.

ஜனநாயக வழியில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், வழி மறிப்புகள், சட்ட மறுப்பு நடவடிக்கைகள், சிவில் நிர்வாகத்தை முடங்கச் செய்யும் மக்கள் கிளர்ச்சிகள் என்று கடைசியாக ஆயுத வழிப் போராட்டம் வரை பல வழிகள், வாய்ப்புகள் நம்மிடம் உள்ளன.

தலைவர் பிரபாகரன் எவ்வழியைத் தேர்ந்தெடுப்பார்? ஜனநாயக வழியில் ஒன்றையா? அல்லது இராணுவ மார்க்கத்தையா? அல்லது இரண்டையுமா? அடுத்துவரும் நாள்களில் அல்லது வாரங்களில் அது தெளிவாகும் என நம்பலாம்.

# மருத்துவபீடத்தில் பட்டம் பெற்றோரில் ஒருவர் கூட இங்கு நியமனம் இல்லை

## கவலை தெரிவிக்கிறார் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்

வலி.தென்மேற்கு.டிசெ.5

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து அண்மையில் டாக்டர்களாகப் பட்டம் பெற்று வெளியேறிய 62 பேரில் ஒருவர்கூட யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நியமனம் பெறவில்லை. இவர்கள் பல்வேறு சாட்டுப் போக்குகளைக் கூறி தென்னிலங்கை வைத்தியசாலைகளில் நியமனம் பெற்றுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். டாக்டர்களுக்கான வெற்றிடங்கள் பல இங்கு நிரப்பப்படாமல் இருந்து வருகின்றது. இதே வேளை, பங்களாதேஷ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டம் பெற்ற ஐந்து சிங்கள டாக்டர்கள் இங்குள்ள வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் மாகாண சுகாதார சேவை அலுவலகத்தின் பிரதி மாகாணப் பணிப்பாளர் இ.தெய்வேந்திரன்.

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையில் புதிதாக நிறுவப்பட்ட பிரசவ விடுதி (மகப்பேற்று நிலையம்) திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.செல்வநாயகம் தலைமையில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் டாக்டர் தெய்வேந்திரன் பிரசவவிடுதியைச் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அவர் அங்குதொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வைத்தியசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகின்றபோதிலும், கடமையிலுள்ள ஊழியர்களின் ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்கான வைத்திய மற்றும் சுகாதார சேவைகள் பாதிக்கப்படாமல் தொடர்வதற்கு எமது திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது. இதேசமயம், வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு உதவுவதுடன், அவற்றைத் தங்கள் சொத்தாக நினைத்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அந்தந்தப் பகுதி பொதுமக்களையே சார்ந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இங்கு நிறுவப்பட்ட இப்புதிய பிரசவ விடுதியும் பிரசவ அறையும் மிகவும் நவீன முறையில் நிறுவப்பட்டுள்ளன. நவீன புதிய வகைத் தளபாடங்களும் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஒரு முன்மாதிரியான பிரசவ விடுதியாக இக்கட்டடம் உள்ளது. இப்பிரதேசத்தில் நவீன முறையில் உள்ள இப்பிரசவ விடுதியை இப்பகுதி மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இங்கு குடும்ப நலசேவை அலுவலருக்கென விடுதி ஒன்றையும் புதிதாக அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

தமிழீழ சுகாதார சேவைகள் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் உரையாற்றுகையில்:-

'இப்பிரசவ விடுதி மற்றும் வார்டுக்கள் கட்டி முடிக்கப்பட்டு பல வருடமாகியும் திறக்கப்படாமல் இருந்ததாக அறிகின்றேன். சிங்கள மக்களின் பிரதேசத்தில் - தென்னிலங்கையில் - இவ்வாறு ஒருநிலை இருக்குமானால், அவர்கள் விடமாட்டார்கள். உடனே திறக்கும்படி அழுத்தம் கொடுத்து போராட்டம் நடத்துவார்கள். எமது பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு, அவற்றை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். இப்பிரதேசத்திலுள்ள தேசிய எழுச்சிப் பேரவையின் உதவியைப் பெற்று இங்கு சிரமதானம் மூலம் பல பணிகளை மேற்கொள்ள முடியும்' - என்றார்.

இவ்விழாவில் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா, வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் பி.விக்டர், சித்தன்கேணி மின்சாரசபை அலுவலக மின் அத்தியட்சகர் என்.சண்முகானந்தசிவம், பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் சு.வைரவநாதர், பண்டத்தரிப்பு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானானந்தன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

(8-135)

## ஜி.சீ.ஈ. மாணவர்களுக்கு இறுவட்டுக்கள் வெளியீடு

கோப்பாய்.டிசெ.5

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவினால் ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கான கற்றலுக்குரிய இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்ப நடவடிக்கையாக விஞ்ஞானம், கணிதம், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான இறுவட்டுக்கள் வெளிவந்துள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் 5 இறுவட்டுக்களும் கணித பாடத்தில் 18 இறுவட்டுக்களும் உயர்தரத்தில் உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு 5 இறுவட்டுக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

(ஜ-203-72)

## ஆசிரியர்களுக்கான தொடருறு செயலமர்வு

தென்மராட்சி.டிசெ.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தொடருறு கல்விச் செயலமர்வுகள் நாளை தொடக்கம் தொடர்ந்து 4 தினங்களுக்கு வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை 'நடத்தை முகாமைத்துவம்' என்னும் தலைப்பிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 'ஆசிரியர் செயற்பாட் டில் மேற்பார்வை' என்னும் தலைப்பிலும் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை 'மாணவரை ஊக்குவித்தல்' என்னும் தலைப்பிலும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை 'குழுமுறைக் கற்றல்' என்னும் தலைப்பிலும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

பொருத்தமான ஆசிரியர்களை இச் செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஜ-117-202)

## இளம் சாதனையாளர் போட்டியில் ஐந்து யாழ்.மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்.டிசெ.5

மக்கள் வங்கியினால் நடத்தப்பட்ட இளம் சாதனையாளர் தெரிவுப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐந்து மா[illegible]ர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களான குமாரவடிவேல் குருபரன், கதிரேசபிள்ளை தர்சனன், விக்ரோரியாக் கல்லூரி மாணவி சுகன்யா சந்திரபாலன், யூனியன் கல்லூரி மாணவி ஜீவிகா விவேகானந்தன், சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் யேசுதாசன் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களாவர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விரைவில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிக்கு இந்த மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(8-6)

# சபரிமலை செல்லும் யாத்திரிகர் நலன் கருதி விசேட ஏற்பாடுகள்

## இந்து கலாசார அமைச்சு மேற்கொண்டுள்ளது

யாழ்ப்பாணம்.டிசெ.5

சபரிமலை யாத்திரிகர்களின் வசதி கருதி இந்து சமய கலாசார அமைச்சினால் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையிலிருந்து சபரிமலை யாத்திரையை மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் இல்லத்தில் கடந்த 2 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலிலேயே சபரிமலை யாத்திரிகர்களின் வசதிகருதி விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவை வருமாறு:-

★ இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாகச் சபரிமலை யாத்திரிகர்களுக்கு விசேட அடையாள அட்டை விரைவாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ இந்தியத் தூதரகத்தில் சபரிமலை யாத்திரிகர்களுக்காக விசேட கருமபீடம் ஒன்று இம்மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

★ யாத்திரிகர்களுக்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானக் கட்டணத்தில் 7 வீதமான கழிவு பெற்றுக்கொடுத்தல்.

★ வசதியாக விமானப் பயணம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

★ யாத்திரிகர்கள் பயணம் மேற்கொள்ளும் காலப்பகுதியில் இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வமைச்சின் அதிகாரிகள் நியமிக்கப்படுவதோடு தனியான கருமபீடம் ஒன்றையும் அமைக்கவும் ஏற்பாடு செய்தல்.

★ ஐயப்ப பக்தர்கள் யாத்திரைக்குப் புறப்பட முன்பு விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்ளல். (8-204)

### உதயவாக்கு

வாழ்வில் நாங்கள் இழந்த நாள்கள் சிரிக்காத நாள்களே...

### நாளை

கார்த்திகை 21
திங்கட்கிழமை
(06.12.2004)
திதி: நவமி
பிற்பகல் 03.16
நட்சத்திரம்: உத்தரம்
மாலை 06.01
சுபநேரம்: 12.17 - 01.47
ராகுகாலம்: 07.47 - 09.17
(பழையநேரப்படி)

## தூவல் நீர்ப்பாசன முறையை அறிமுகம் செய்யத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.5

புலோலி, உரும்பிராய், புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் விவசாயப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு முதல் முறையாகத் தூவல் நீர்ப்பாசனம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

குடாநாட்டில் தூவல் நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் செலான் வங்கியின் ஆலோசகர் லயனல் பெர்னாண்டோ மற்றும் அதன் முகாமையாளர், யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி இடங்களில் இந்த நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ஏனைய விவசாயப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டது. (8-6)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




2ஆம் குறுக்கு வீதி, கச்சாய் றோட்,
சாவகச்சேரியைச் சேர்ந்த
திரு.திருமதி சிறிராஜன் - ஜனோபா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

## லக்ஷ்மிதா (Luxmitha)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை சுவிற்சர்லாந்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். செல்வி லக்ஷ்மிதாவை அன்புள்ள அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமிமார், அத்தை, மாமாமார், மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் சங்கத்தானை மீனாட்சி அம்பாளின் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் சீரோடுஞ் சிறப்போடும் வாழ்க என உளமார வாழ்த்துகின்றார்கள்.

2ஆம் குறுக்கு வீதி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தகவல்:
க.பாலசுந்தரம் (அம்மப்பா).

(39175) (24-11-17)



# UK இல் கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு

கொழும்பிலுள்ள அங்கீகாரம் பெற்ற **Hightech International Computer College** ஆனது **UK** இல் உள்ள முன்னணி **Consultant & Recruitment** நிறுவனத்துடன் இணைந்து இலங்கைவாழ் மாணவர்களுக்கு உயர்கல்வியை பிரபல்யமான **3** பல்கலைக்கழகங்களிலும் **10** கல்லூரிகளிலும் பயில்வதற்கான விசாக்களையும் அத்துடன் **2** வருடங்களிற்கு **UK**இல் தொழில்புரிவதற்கான விசாக்களும் (**Holiday working Permit for 2 years in UK**), **UK**இல் தொழில்வாய்ப்புக்களும் பெற்றுத்தரப்படுகின்றன. விசா பெறுவதற்கான **100%** உத்தரவாதமளிப்பதுடன் அதற்கான **Sponsor** முதல் சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும். இதனை முன்னிட்டு **Hightech** நிறுவன அதிபர் அவர்கள் நீங்கள் **UK** செல்வதற்கான வழிமுறைகளைப் பற்றி ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக ஆலோசிப்பதற்காக **December 9** முதல் **15** வரை யாழ்ப்பாணத்தில் பல பாகங்களுக்கும் வருகைத்தரவுள்ளார்.

அவரை சந்திப்பதற்காக 8ம் திகதிக்கு
முன்பதாக 077 3086962 (பிரதீப்)
உடன் Call அல்லது SMS ஊடாக தொடர்பு கொண்டு
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



# YEAR 1.2.3 ENGLISH MEDIUM

## SATURDAY CLASSES

அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க ஆண்டு 1, 2, 3 பாடநெறிகளை ஆங்கில மொழிமூலம் சனிக்கிழமைகளில் 2005 ஜனவரியில் இருந்து ஆரம்பிக்கின்றோம்.

Day : Saturdays
Time: 8.30 a.m to 4.00 p.m

**Subjects**
English, Mathematics
Environmental Studies
Elocution

## பாலர் பாடசாலை
English Medium

### WEEKDAYS
- Play Group 2+ to 3+ வரை
- Montessori 3+ to 4+ வரை
- Pre School 4+ to 5+ வரை

### விசேட அம்சங்கள்
- ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல் முறை
- தமிழ் ஒரு கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படும்
- சிறார்கள் English Concert கலை விழா, Christmas Carols போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுவார்கள்

## BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First



# ACCA PROFESSIONAL EXAMINATION

மற்றவர்களை விட தனித்துவமானவராக விரும்பினால்....
UNIVENTURES உங்கள் சரியான தெரிவாக இருக்கட்டும்

### ஏன் ACCA
- ★ ACCA கற்பதன் மூலம் தொழில் சார் தகைமையையும் பட்டத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்
- ★ ACCA தொடங்கப்பட்டு 100 வருடங்கள் ஆகின்றன.
- ★ 320000 மாணவர்கள் ACC ஐ கற்கிறார்கள்.
- ★ உலகில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கணக்கியல் துறை இதுவாகும்



Batch : 01 — 02 December 04

| | | |
|---|---|---|
| THU | 10.00 - 12.00 | Preparing Financial Statements |
| THU | 12.00 - 2.00 | Managing People |
| FRI | 10.00 - 12.00 | Financial Information for Management |

Batch : 02 — 03 December 04

| | | |
|---|---|---|
| MON | 5.00 - 7.00 | Preparing Financial Statements |
| WED | 5.00 - 7.00 | Managing People |
| FRI | 5.00 - 7.00 | Financial Information for Management |

Batch : 03 — 04 December 04

| | | |
|---|---|---|
| SAT | 10.00 - 12.00 | Managing People |
| SAT | 12.00 - 2.00 | Preparing Financial Statements |
| SAT | 4.00 - 6.00 | [illegible] |

Exemptions available for Degree holders in BBA, CIMA, CHARTERED ACCOUNTANTS

### ஏன் ACCA வித்தியாசமானது:
2-3 வருடங்களில் தொழில் சார் தகைமையையும் பட்டத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.
படிப்பதன் மூலம் வித்தியாசமான நபராக கருதப்படுவீர்கள்.
தொழில்சார் கணக்கியலில் வேலை கிட்டும்.



# BCS PROFESSIONAL EXAMINATION

THE BRITISH COMPUTER SOCIETY

உத்தியோக பூர்வமான கல்விகள்
உத்தியோக வாய்ப்புக்களை உங்கள்
வாசல் படிக்கே கொண்டு வருகிறது.

OCTOBER 2005

## BCS Certificate Level

Batch 01 — 06 January 05

| | | |
|---|---|---|
| Monday | 1.30 - 5.00 | TECH |
| Wednesday | 1.30 - 5.00 | Info Sys |
| Friday | 1.30 - 5.00 | Soft Dev |

Batch 02 — 06 January 05

| | | |
|---|---|---|
| Monday | 5.45 - 7.45 | TECH |
| Wednesday | 5.45 - 7.45 | Info Sys |
| Friday | 5.45 - 7.45 | Soft Dev |

Batch 03 — 08 January 05

| | | |
|---|---|---|
| Saturday | 8.30 - 10.00 | Info Sys |
| Saturday | 10.15 - 11.45 | Soft Dev |
| Saturday | 12.00 - 1.30 | TECH |

The British Computer Society Professional Examination is the essential qualification for a career in computing and information technology gives greater job recognition, promotion or a new career direction through as qualification that is internationally recognised, flexible and suited to the needs of the IT industry.

விண்ணப்பதாரிகளுக்கான நன்மைகள் :
- ★ எல்லோராலும் வரவேற்கப்படுகிறது.
- ★ அனுமதி சகலருக்கும் எவ்வித தடையுமின்றி வழங்கப்படுகிறது.
- ★ ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும்.

### ஏன் BCS
1. எல்லோராலும் வரவேற்கப்படுகிறது.
2. ஏற்றபடி மாற்றி அமைக்க கூடிய பகுதி அமைப்பு.
3. எதிர்கால முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானது.
4. நேரான நிர்வாகத்துவ பாட அமைப்புக்கள்.
5. எல்லோராலும் முழுவதுமாக ஆதரிக்கப்படுகிறது.

## BCS Diploma Level

| | | |
|---|---|---|
| SUN | 8.30 - 10.00 | SA |
| SUN | 10.15 - 11.45 | DBMS |
| SUN | 12.00 - 1.30 | CORE |
| SUN | 1.45 - 4.45 | OOP/SM |
| SUN | 4.30 - 6.30 | CN/MIS |
| THU | 5.45 - 7.30 | PM |

Please visit our office for Diploma Module Selection

UNIVENTURES Institute of Business Management
55, Martin Road, Jaffna
Tel : 0777 - 918280


## பாதிக்கப்பட்டோரின் விவரம் சேரிக்கப் பணிப்பு

செம்பியன்பற்று,டிசெ.5

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் தற்போது பெய்துவரும் கடும் மழை, காற்று என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் பெயர் விவரங்களைத் திரட்டுமாறு உதவி அரச அதிபர் ரி.சத்தியசீலன் கிராம அலுவலர்களுக்குப் பணிப்புரைவிடுத்துள்ளார்.

தற்போது மீளக்குடியமர்ந்து தற்காலிக வீடுகளில் வாழும் இப்பகுதி மக்கள் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைக் கருத்திற்கொண்டே கடந்த புதன்கிழமை நடைபெற்ற கிராம அலுவலர்களின் கலந்துரையாடலின்போதே உதவி அரச அதிபர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார். (8-36)

## கடற்றொழிலாளர் சமாசத்தின் உபஅலுவலகம்

செம்பியன்பற்று,டிசெ.5

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உபஅலுவலகம் ஒன்று பொற்பதி கிராமத்தில் இயங்கி வருகிறது.

வடமராட்சி கிழக்கு சமாச அங்கத்துவம் பெற்ற நாகர்கோவில், குடத்தனை, பொற்பதி, மணற்காடு கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த உபஅலுவலகம் இயங்கிவருகிறது.

முன்னதாகப் பொதுமக்கள் சிரமங்களின் மத்தியில் முகமாலை ஊடாகத் தாளையடியில் உள்ள தலைமைக் காரியாலயத்துக்குச் செல்லவேண்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-36)

## பஸ் கட்டணம் அதிகரிப்பு

செம்பியன்பற்று,டிசெ.5

பருத்தித்துறை - மருதங்கேணி பஸ் கட்டணம் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து முகமாலை ஊடாக மருதங்கேணி செல்வதற்கு ஒரு வழிக் கட்டணம் 25 ரூபாவாக இருந்து வந்தபோதிலும் கடந்த மாதமளவில் இது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து மருதங்கேணிக்குச் செல்லும் அரச ஊழியர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (8-36)

## வருடாந்த வரி மதிப்பீடு

தென்மராட்சி,டிசெ.5

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வியாபார, வர்த்தக, தொழில் நிலையங்களுக்கான வருடாந்த வரி மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட வரி மதிப்பீடு அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் (01.01.2005) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட வரி மதிப்பீட்டின் பிரகாரம் சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வியாபார, வர்த்தக, தொழில் நிலையங்களுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவுதினம் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.5

கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவுதின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதியின் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-202)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் அறிவித்தல்

### மோட்டருக்கான கூறுவிலை

எமது சங்கத்தில் மின்தறி நெசவாலையில் பாவிக்கப்பட்ட இயங்கும் நிலையில் உள்ள 26 மோட்டர்கள் (HP/KW 0. 75/055) விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் பார்வையிட்டு கூறுவிலையை 17-12-2004 இற்கு முன்னர் அலுவலகத்தில் அல்லது தபாலில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-39464) (26-14-19)

## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணஞ்செய்ய வருவோருக்கும், விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும்கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்துதருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விபரமறிய எந்தநேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக கைத்தொலைபேசி எண்: 0065 9751 4941, தொலைநகல்: 0065 6481 6144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சிலசமயங்களில் கஷ்டம். அதனால் 3 கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
**10, Anson Road, # 15-14, International Plaza, Singapore 079903.**

(26-14-19) (26954)

## மரண அறிவித்தல்

திருமதி
**இராஜலோஜினி அருளப்பு துரைசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

இளவாலையைச் சேர்ந்த அருளப்பு துரைசிங்கம் அவர்களின் அன்பு மனைவி திருமதி இராஜலோஜினி அருளப்பு துரைசிங்கம் அவர்கள் 01.12.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனைச்சடங்குகள் நாளை (06.12.2004) திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்று, பூதவுடல் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15,பாரதி வீதி,*
*திருகோணமலை.*
T.P.: 026-2223564

தகவல்:
அருளப்பு துரைறஜீவன்
(மகன்).

(சி39471)(46-14-19-26)

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து



புங்குடுதீவு – சிவன்கோயில்
அருணோதயக் குருக்கள் - சுபாஜினி தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன்

### சிவகஜன்

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

சிவகஜனை அப்பா, அம்மா, தாத்தா - நாகேந்திரக்குருக்கள், அப்பம்மா - லோகேஸ்வரி, மாமா - தினேஸ் சர்மா, அத்தை - ஹர்சினி, மச்சான் - தனஞ்சயன் ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறார்கள்.

*சிவன் கோயில்,*
*புங்குடுதீவு.* (39227) (42-17-19-26)

ஸ்ரீ.நாகேந்திரக் குருக்கள்.
*(தாத்தா).*

## ஆங்கிலம் கற்க வேண்டுமா?

### இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி
### E.L.I. யின் இலவச தபால் மூலம் பாடநெறிகள்

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி

தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத் தொகுதிகள்

**இலவச Dialog G.S.M. தொடர்பை வெள்ளுங்கள்**

* 2005ம் ஆண்டுக்கான இலவச தினக்குறிப்பேடு (Diary)
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கீடெக்

இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்




மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE** P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849

## உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்க...

"பட்டப்படிப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்துகொள்ளுங்கள்

*வடமராட்சியில*
காலம்: 07.12.2004
இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
நேரம்: பிற்பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை

*யாழ்ப்பாணத்தில்*
காலம்: 09.12.2004
இடம்: நாவலர் மண்டபம்
நேரம்: பிற்பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை.




**Dr.M.G.R.**
**Deemed University**

OFFSHORE CAMPUS
INFORMATION AND
ADMISSION CENTRE

No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840

(C/39455) உதயன் Graphics

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 – 10 – 1925 | 05 – 11 – 2004 |



திருமதி **புவனேஸ்வரி இரத்தினசிங்கம்**

அன்பிற்கு அடிபணிந்து
மற்றையோர் உம் பண்பு போற்ற
இல்லறத்திற்கு ஓர் இலக்கியமாக
பாசத்தின் பொக்கிசமாக
மட்டற்ற சகோதர அன்பிற்கு ஓர் உதாரணமாக
நாமகள் ஒழுங்கைக்கே ஒரு நல்லாள் "பொம்பிளையக்கா"வாக
சினிமாவில் இருந்து சீர்திருத்தங்கள் வரை
இதிகாசங்களில் இருந்து சமுதாய இங்கிதங்கள் வரை
சமையலில் இருந்து சரி பிழைகள் வரை
ஓர் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த
எங்கள் குடும்பத்தின் சுடர் விளக்கு
திடீரென அணைந்தது என்ன நியதி?
பிறப்பும் இறப்பும் நம்முலக நியதி என
சிவனோ கைலாயத்தில் தாண்டவம் புரிய
நாங்களோ இங்கு உங்கள் இழப்பால்
நீங்காத் துயரம் நினைவை வருத்த
நிலைகுலைந்து தள்ளாடுகிறோம்.

பல காலம் நோயில்லா வாழ்வெய்தி
பல பேரன், பேர்த்திகளையும், பூட்டன், பூட்டியையும்
கண்டு களித்தவேளை
கயவஞ்சகன் காலனின் கட்டுப்பாட்டிற்கு
அடிபணியத் துடித்ததன் காரணம் தான் ஏது?
அண்ணன் தான் அழைத்தாரே? அன்றி மற்றும்
ஆண்டவன்தான் அரவணைக்கத் துடித்தானே
உங்கள் ஆத்மா சிவசக்தியுடன் நீக்கமற
இரண்டறக் கலந்து வீட்டின்பம் பெற
இறைவனைப் பிரார்த்திக்கும் உங்கள் பாசமுறு குடும்பம்.

*திருமதி புவனேஸ்வரி இரத்தினசிங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உலகின் பல* பகுதிகளிலுமிருந்து அனுதாபச் செய்தி அனுப்பி எமது குடும்பத்திற்கு ஆதரவளித்த அனைவருக்கும் மெல்போனில் மரணச் சடங்குகளில் பங்குபற்றி எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நாம் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இரத்தினசிங்கம் குடும்பத்தினர்*
5, NANCYE DRIVE,
LALOR, Vic 3075,
AUSTRALIA. (39133) (26-14-19)

தொலைபேசி + 61 3 9464 3059.

## Foundation Degree Programme
### for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும்
ஆனால் போதிய தகைமையில்லை.

பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்த நீங்கள் கணனி, வணிகம் போன்ற துறைகளில் உள்நாட்டில் பட்டப்படிப்பினை தொடர வேண்டும்.
ஆனால் அடிப்படை ஆங்கில, கணனி பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for Higher Education / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: **G.C.E. O/L**

பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணணி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கை நெறி முறை.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள்

வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக் கொள்ள அடிப்படை முதல் Visa க்களைப் பெறும் வரையிலான பூரண வழிகாட்டுதல்கள்.

**LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION**

27, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

# இந்தியப் போலிச் சாமியார் கொழும்பில் கைதானார்!

கொழும்பு,டிசெ.5

இந்தியாவிலிருந்து வந்து கொழும்பில் தங்கியிருந்து பெருந்தொகைக் கட்டணம் அறவிட்டு, மருத்துவம் மற்றும் ஆரூடம் கூறிவந்தவர் எனத் தெரிவிக்கப்படும் பிரபல சாமியார் ஒருவர் கொழும்பு, கொம்பனித்தெரு பொலீஸாரால் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார்.

மருத்துவம், ஆரூடம் என்ற பெயர்களில் பெண்களிடம் பாலியல் முறைகேடுகளில் இவர் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவில் இருந்து வந்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த இவரது 'மகத்துவம்' குறித்து பத்திரிகைகளிலும் பெரும் செலவில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன.

முன்கூட்டி பெருந்தொகைப் பணம் கட்டணமாகச் செலுத்தி, முன்பதிவு செய்வதன் மூலமே இவரிடம் பரிகாரம் பெறமுடியும் என்றும் கூறப்பட்டது.

இவரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வரும் பெண்களிடம் இவர் தகாத முறையில் நடந்துகொள்கிறார் என வெளியான தகவலை அடுத்து பொலீஸார் இரு வாரங்களாக இவ்விடயம் குறித்துப் புலன்விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் அழகிய பெண் பொலீஸார் ஒருவரை சிவிலியன்போல் இவரிடம் ஆலோசனை பெறுவதற்கு பெருந்தொகைக் கட்டணத துடன் பொலீஸார் அனுப்பி வைத்தனர்.


அச்சாமியார் அப்பெண் பொலீஸாரிடமும் தமது கைங்கரியத்தைக் காட்டியுள்ளார். உடனே அப்பெண்ணுடன் சாதாரண உடையில் சென்ற பொலீஸார் அச்சாமியாரைக் கைது செய்தனர்.

தற்போது இச்சாமியார் கொம்பனித்தெரு பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

இவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தார்.

சாமியர்கள் தொடர்பில் பல்வேறு சர்சைகள் எழுந்துவரும் இன்றைய சூழ்நிலையில் இவர் கைது செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சாமியாரின் பிரத்தியேக செயலாளராக பணியாற்றிய பெண் ஒருவரும் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (எ-க)



மாவீரர் தினத்தையொட்டி யாழ்.பல நோ.கூ சங்கம் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை நடத்தியது. மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு நிகழ்வு மண்டபத்தை நோக்கி சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்:கொழும்புத்துறைச் செய்தியாளர்)*

# இலங்கையின் கலாசார வளர்ச்சிக்கு நோர்வே பதினொரு மில்லியன் ரூபா உதவி

## அமைச்சரிடம் தூதுவர் கையளித்தார்

கொழும்பு,டிசெ.5

நோர்வே அரசு இலங்கையின் கலாசார வளர்ச்சிக்காக பதினொரு மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நாட்டில் உள்ள 120 கலாசார நிலையங்களில் உள்ள நூல் நிலையங்களிற்கு நூல்களைக் கொள்வனவு செய்வதற்காகவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று இதற்கான காசோலையை இலங்கைக்கான நோர்வேத் தூர்துவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், இலங்கை கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம் கையளித்தார்.

நாட்டில் 120 கலாசார நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் உள்ள நூல் நிலையங்களை மாணவர்கள், பாடசாலையைவிட்டு இடைவிலகியவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசோலையை வழங்கி உரையாற்றிய நோர்வேத் தூதுவர் தமது உரையில் -

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு நோர்வே அரசு மூவாயிரம் மில்லியன் ரூபாவை வருடாந்தம் வழங்கி வருகின்றது.

கிராமப்புற மக்கள் பாடம் சம்பந்தமான வழிகாட்டி நூல்களைப் பெறுவதற்கு, வசதியற்ற காரணத்தினால் இவ்வாறான நூல்களை இலகுவில் பெற்றுப் பயனடைய வசதியாகவே இந்தப் பண உதவியை நோர்வே அரசு காலாசரத் திணைக்களத்திற்கு வழங்கியது என்றும் -

கல்வியில் முதலீடு செய்வதுதான் எந்த ஓர் அரசும் செய்யக்கூடிய மிகச் சிறந்த முதலீடு என்றும் -

ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.(எ-12)

# புலிகளைக் காட்டிக் கொடுத்த தேசப்பற்றாளர் கதிர்காமர்!

## விமல் வீரவன்ஸ புகழாரம்

புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தனிநாட்டுக்கான அத்திபாரம் என்பதை அமெரிக்கா உட்பட பல வெளிநாடுகளுக்கு தெளிவுபடுத்திய தேசப்பற்றாளர் அமைச்சர் லக்சஷ்மன் கதிர்காமர்.

- இப்படிப் புகழாரம் சூட்டுகிறார் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சுற்றுலாத்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே விமல் வீரவன்ஸ இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் புலிகளின் கபடத்தனம் பற்றி விளக்கினார். இதன் பின்னரே அமெரிக்காவின் தென்கிழக்காசிய பிரதிநிதி கிறிஸ்டினா றொக்கா இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பிரிவினைக்கு வழிவகுக்கும் ஒரு செயல் எனப் பகிரங்கமாகக் கூறினார்.

கடந்த காலங்களில் வெளிவிவகார அமைச்சராகக் கதிர்காமர் இருந்தபோது நாட்டுப்பற்றுடன் அவர்செய்த சேவைகளை இந்தநாடு ஒருபோதும் மறந்துவிடாது.

அவரிடம் நான் ஒரு கோரிக்கையை விடுக்க விரும்புகின்றேன்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் புலனாய்வுத்துறையினரின் நியமனங்களில் மாற்றம் செய்யப்படல் வேண்டும். நாட்டுக்காக பணியாற்றுபவர்களை அங்கு நியமிக்க வேண்டும் என்பதே அக் கோரிக்கை.

வெளிவிவகார அமைச்சுக்கு செயலாளராகப் பல்லிக்கார நியமிக்கப்பட்டுள்ளார். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

கதிர்காமருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருந்தபோதும், அவர் நாட்டுக்காக செய்யும் பணி அளப்பரியது - என்றார். (க-8)

# வீடுகளில் வைத்து சிகை அலங்காரம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவும்!

## சிகை ஒப்பனையாளர் சங்க சுகாதாரக் கண்காணிப்புப் பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

வீடுகளில் வந்து சிகை அலங்காரம் செய்யும் சிலர் சவர அலகு மாற்றாமலும் தொற்று நீக்கிகள் பாவிக்காமலும் தொழிலை மேற்கொளளவதால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் சுகாதார கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பான பொது அறிவித்தல் ஒன்றையும் அந்தப்பிரிவு விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்கள் வீடுகளில் வந்து சிகை அலங்காரம் செய்வோர் சிலர் சவர அலகு (பிளேட்) மாற்றாமலும் தொற்று நீக்கிகள் பாவிக்காமலும் தொழிலினை மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக 'எய்ட்ஸ்' போன்ற அபாயகரமான நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

எனவே, சிகை ஒப்பனையாளர் சங்கத்தினால் சிகை அலங்காரம் செய்பவர்கள் வீடுகளில் மற்றும் வெளியிடங்களில் எக்காரணம் கொண்டும் தொழில் செய்யக்கூடாது என்ற சுகாதார சேவையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய வெளியிடங்களில் தொழில்செய்ய சங்கத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அவ்வாறு தொழில் புரிவோரிடம் சிகை அலங்காரம் செய்ய வேண்டாம் என பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதுடன் சிகை ஒப்பனை நிலையத்தில் தொற்று நீக்கம் செய்யப்பட்ட தொழிலினை மேற்கொண்டு புதிய சவர அலகு பாவிக்கப்படுகின்றதா என்பதையும் கண்காணித்துக் கொள்ளவும் - என்றுள்ளது. (8-7)

# உதயன்

## பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகால தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

### 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

பிரச்சினைகளை தீர்க்க கண்காணிப்பு குழு தரும் யோசனை — 19.12.1985

கூட்டணியுடன் கொழும்பில் பேச அரசு விருப்பம் — 19.12.1985

வட பகுதி ரயில் சேவை மீண்டும் ஆரம்பிப்பதில் இழுபறி நிலை — 19.12.1985

வடக்கில் பெரும் தாக்குதலுக்கு இலங்கை தயாராகிறது
நான்கு இயக்கத் தலைவர்களும் எம். ஜி. ஆரை சந்தித்து முறைபீடு — 20.12.1985

எம். ஜி. ஆர்., கூட்டணியினர் போராளிகளுடன் தொண்டா முக்கிய சந்திப்பு
இன்று தமிழகம் பயணம் — 20.12.1985

கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் துரிதம்
வீதியால் வந்தவர்களும் வேலை வாங்கப்படுகின்றனர் — 20.12.1985

இனப்பிரச்சினை: யு. என். பியிடம் ஆணைகேட்டார் ஜே.ஆர். — 20.12.1985

சுவிஸ் தமிழர்களை நாடுகடத்தும் அபாயம்! — 20.12.1985

# அணு ஆயுத சோதனையைக் கைவிட ஈரான் ஐரோப்பாவுடன் உடன்பாடு!

மத்திய கிழக்கில் அணு வல்லரசாக ஈரான் தன்னை உயர்த்திக்கொள்ள எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய யூனியன் ஒரு நிரந்தரமான முட்டுக்கட்டையை ஏற்படுத்த பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொண்டு வருகின்றது. இந்த முயற்சி பெரும்பாலும் வெற்றியளிக்கும் நிலைக்கு வந்துவிட்டதாக கடைசியாகக் கிடைத்துவரும் செய்திகளிலிருந்து அறிந்துகொள்ளக்கூடியதாகவிருக்கின்றது.

அணு ஆயுதத்தைத் தயாரிப்பதற்குப் பயனபடுத்தக் கூடியவகையில் யு,ரேனியம செறிவூட்டுவதை நிறுத்திவிடுவதாக ஐரோப்பிய யூனியனுக்கு ஈரான் வாக்களித்திருப்பதாக அச் செய்திகள் கூறுகின்றன. யு,ரேனியத்தைச் செறிவூட்டும் செயற்பாட்டை ஈரான் நிறுத்தாத பட்சத்தில் அதன்மீது பொருளாதாரத் தடையை விதிப்பதற்கான தீர்மானம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றிவிட அமெரிக்கா துடித்துக்கொண்டிருக்கின்றது. பொருளாதாரத்தடை விதிக்கப்படும் பட்சத்தில் ஈரானின் ஐரோப்பிய நாடுகளுடனான பொருளாதாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிடும். ஈரானின் மிகநெருங்கிய நேசநாடுகளும் ஐ.நா. தீர்மானத்துக்கு உட்பட்டு பொருளாதாரத் தடையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்




ளாக நேரும்.

இதனை ஈரான் தற்பொழுது தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆறுமாதங்களுக்கு முன்னரும் இதேவிதமான ஓர் உடன்பாடு ஈரானுக்கும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த போதிலும் பின்னர் அது முறிந்து போயிற்று.

ஈரான் மீண்டும் யூரேனியத்தைச் செறிவூட்டும் முயற்சியில் இறங்கலாயிற்று. இதன் விளைவாக அமெரிக்காவின் நெருக்குதலின் பேரில் ஈரான் மீதான பொருளாதாரத் தடைக்கான தீர்மானம் பாதுகாப்புச் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. தற்பொழுது ஈரான் யூரேனியத்தைச் செறிவூட்டும் செயற்பாட்டை நிறுத்திவிடுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை ஐரோப்பிய யூனியனுடன் செய்துகொண்டு, அவ்வொப்பந்தம் சர்வதேச அணுசக்தி முகவர் ஸ்தாபனத்திடம் திங்கட்கிழமை கையளிக்கப்படவிருக்கிறது.

### மேற்குலகு நம்பவில்லை

ஈரான் எண்ணெய் வளநாடாகவிருந்த போதிலும் மின்சார உற்பத்திக்காகவே அணு ஆய்வுத் திட்டத்தை மேற்கொள்வதாக அறிவித்திருப்பது மேற்குலகநாடுகளில் அவ்வளவாக நம்பப்படவில்லை. தற்பொழுது ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி ஈரான் அணுசக்தி தொடர்பான சகல மட்டங்களிலுமான ஆய்வுகளைக் கைவிடுவதற்கு ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

புளோட்டினியத்தை மீளவும் செயலூக்கப்படுவது, யூரேனியத்தைச் செறிவூட்டுவது அணுசக்தி உலைகளில் எரிபொருள் பயன்படுத்துவதற்காக யூரேனியத்தைத் தூய்மைப்படுத்துவது அல்லது மிக உயர் அளவில் செறிவூட்டியதன் பின் ஆயுதங்களில் பயன்படுத்துவது போன்ற செயற்பாடுகள் அனைத்தையும் கைவிடுவதற்கு, ஈரான் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஈரானின் இந்தச் செயற்பாட்டுக்கு மாற்றீடாக பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகள் சில அரசியல், பொருளாதார வெகுமதிகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன.

இலகுவான நீர் அணு உலையொன்றை அமைத்துக் கொடுப்பதும் இதில் அடங்கும்.

★ ★ ★

# முஷாரப்பின் இராணுவப் பதவி: ஆதரவுக் கட்சிகள் எதிர்ப்பு

### முஷாரப்புக்கு மீண்டும் நெருக்கடி

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் இரண்டு பதவிகளில் தொடர்ந்து இருந்து வருவதை, ஒரு காலத்தில் அவருக்கு ஆதரவளித்த சில அரசியல் கட்சிகள் இப்பொழுது எதிர்க்க ஆரம்பித்துள்ளன. குறிப்பாக, முத்தாஹிடா மாக்லிஸ் - இ - அமல் (AMM) என்ற முக்கிய அமைப்பு - கடந்த ஆண்டு அதிபருக்குப் பல முக்கிய அதிகாரங்களை வழங்கிய அரசியல் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு இந்தக் கட்சி நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கியது. அதேசமயம், 1999 ஒக்ரோபர் புரட்சிக்குப் பின் அவரது இராணுவம் எடுத்த பல நடவடிக்கைகளையும் நாடாளுமன்றையும் அங்கீகரிப்பதற்கு இக்கட்சி உதவியாக இருந்துள்ளது.

கடந்த வாரம் கராச்சியில் நடைபெற்ற மேற்படி கட்சியின் கூட்டத்தில் முஷாரப் தனது இராணுவத் தலைவர் என்ற அதிகாரப் பதவியைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

### வாக்குறுதி பறந்தது

நாடாளுமன்றத்தில் மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதையடுத்து அதற்கு பிரதி உபகாரமாக டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் இராணுவத் தலைவர் பதவியைக் கைவிட்டுபோவதாக முஷாரப் அறிவித்திருந்தார்.

ஆனால், அண்மைக்காலத்தில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதற்கு மாறாக இருக்கின்றன. இராணுவச் சீருடையைக் கைவிடுவதானால் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கெதிரான போராட்டத்தில் தமது அதிகாரங்கள் பலவீனமடைந்துவிடும் என்றும் இந்தியாவுடனான அமைதிப் பேச்சுக்களை முன்நகர்த்துவதற்கான தமது தகைமையைக் குறைத்துவிடும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

முஷாரப் தமது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினால் அவருக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தப்போவதாக மேற்படி சமயவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் செயலாளர் நாயகமும் தேசிய சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான மளலானா பாஸல் - உர் ரெஹ்மான் கருத்து வெளியிடுகையில், இராணுவ உடையிலான ஓர் அதிபர் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறினார்.

டிசெம்பர் 19 ஆம் திகதி அளவில் இராணுவப் பதவியைக் கைவிடுவதாக அதிபர் முஷாரப் அறிவிக்க வேண்டும். இல்லையென்றால், அவரது அரசு நீடித்து இருக்கமுடியாமல் போய்விடும் - என்றார் அவர்.

இதேவிதமான ஓர் அறிவிப்பை சமய சார்பற்ற சில கட்சிகளின் அமைப்பான ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கான கூட்டணியும் வெளியிட்டுள்ளது.

மேற்படி இரு கட்சிகளும் தம் கொள்கை நிலைப்பாடுகளில் மாறுபட்டிருந்தாலும் முஷாரப்புக்கு எதிரான செயற்பாடுகளில் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு முயன்று வருகின்றன.

★ ★ ★

# மியான்மாரின் ஜனநாயக விரோதப் போக்கு மாறுமா?

### ஆசியான் மாநாடு

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) மாநாடு லாவோஸ் தலைநகர் லாஓவில் நடந்து முடிந்துள்ளது.

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வது, மியாமர் நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை மலரச் செய்வது போன்ற விடயங்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாகச் செய்திகள் கூறின.

உறுப்பு நாடொன்றின் அரசியல் உள்விவகாரம் ஒன்றை விவாதிப்பதற்கு ஏனைய நாடுகள் விரும்பாதபோதிலும் மியான்மர் தனது ஜனநாயகத்துக்கான 'வீதிப் படம்' பற்றி விவாதிக்கப்படுவதைத் தானே முன்வந்து ஆதரித்ததாகக் கூறப்படுகின்றது.

சுற்றுமுறையில் ஆசியான் அமைப்பின் தலைமைப் பதவி அடுத்த 2006 இல் மியான்மாருக்கு வழங்கப்படவிருக்கும் நிலையில், அது ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதாகப் பொதுவில் கருதப்படுகின்றது.

நோபல் பரிசு வென்றவரும் ஜனநாயக அரசியல் தலைவருமான ஆங்சாங் சூகி தொடர்ந்தும் இராணுவக் காவலில் வைக்கப்பட்டிருப்பதானது மியான்மாரின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஏனைய நாடுகளை எதிர்கொள்வதில் பெரும் தர்மசங்கடம் இருந்து வருகின்றது.

லாவோஸ், கம்போடியா, புருணை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, வியட்னாம், தாய்லாந்து, மியான்மர் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய பத்து நாடுகள் இந்த ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

### ஐ.நா. செயலர் வற்புறுத்து

மியான்மாரின் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி தொடர்ந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளமையைப் பல நாடுகள் கண்டித்திருப்பது ஒருபுறமிருக்க, அவரை மிக விரைவில் விடுதலை செய்யவேண்டும் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் இப்பொழுது வற்புறுத்தியுள்ளார்.

அவரை மேலும் ஒரு வருடத்துக்கு வீட்டுக் காவலில் வைத்திருக்கப்போவதாக மியான்மார் இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்திருப்பதையடுத்து, உலகம் முழுவதிலுமிருந்து இப்பொழுது எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் இந்த வீட்டுக்காவல் நீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்துள்ளன. தேசிய நல்லிணக்கத்துக்கோ, மியான்மாரில் ஜனநாயகத்தை மீள நிறுவுவதற்கோ, வீட்டுக்காவல் நீடிக்கப்பட்டிருப்பதனால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லையென்று கோபி அனான் தெரிவித்துள்ளார்.

மியான்மார் மனித உரிமைகள் விடயத்தில் அபிவிருத்திகள் காட்டாதுபோனால், 2006 ஆம் ஆண்டு முதல் ஆசியானுக்கு மியான்மார் தலைமை வகிக்கும் காலத்தில் அவ்வமைப்பைப் பகிஷ்கரிக்கப்போவதாக அமெரிக்கா அச்சுறுத்தியுள்ளது.

★ ★ ★

### சமரசம் செய்ய புஷ் விருப்பம்

வட அயர்லாந்து அரசியல் பிணக்கில் தலையிட்டு சமரசம் செய்துவைக்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் முன்வந்திருக்கிறார். இந்தவகையில், நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க அமெரிக்க அதிகாரி ஒருவர் வட அயர்லாந்துக்கு அனுப்பப்படுவாரா என்பது தெரியவில்லை. ஆனால், கடந்த வாரம் புஷ் வட அயர்லாந்து, ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவுத் தலைவருடன் ரெலிபோனில் பேசியபோது ஐரிஷ் விவகாரத்தில் சமரசம் செய்துவைக்கும் விருப்பத்தை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் பிரிவுத் தலைவர் கெறி அடாம்ஸ், அதிபர் புஷ்ஷுடன் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அண்மைக் காலப் பேச்சுக்களின்போது சின்பீன் நிலைப்பாடுகள் என்னவாய் இருந்தது என்பதை அவருக்கு விளக்கினேன் - என்றார். பிரிட்டிஷ் மாகாணமான வட அயர்லாந்தில் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து பிரிவினருக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றுக்கு வழிகோலக்கூடிய ஏற்பாடுகள் மீண்டும் தொடங்கியிருக்கின்றன.

அதிபர் புஷ் ஜனநாயக யூனியன் கட்சியின் தலைவர் இயான் பெய்ஸ்லியையும் ரெலிபோனில் தொடர்புகொண்டு தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

★ ★ ★

### ஈராக்கிற்கு மேலும் துருப்புக்கள்

ஈராக்கில் ஜனவரி 30 ஆம் திகதி பொதுத் தேர்தலை எப்படியும் நடத்தியே தீர்வதென்று ஈராக்கின் இடைக்கால அரசும் அமெரிக்காவும் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கின்றன.

ஈராக்கிலுள்ள பல சன்னி, ஷியாத் அமைப்புகள் தேர்தலை ஒத்திப்போடும்படி கேட்டிருந்த போதிலும் அதற்குச் செவிமடுக்கவில்லை.

தேர்தலைக் கிளர்ச்சியாளர்கள் குழப்பிவிட முயல்வார்கள் என்ற அச்சம் நிலவுகின்றபோதிலும், மேலும் அதிக இராணுவத்தை அங்கு அனுப்பிவைக்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

ஜனவரி முன்பகுதியில் ஈராக்கில் அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கை 138,000 முதல் 150,000 வரை அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தலை அமைதியாக நடத்தி முடிப்பது மட்டுமல்ல, பலூஜா நகர் மீதான தாக்குதலையடுத்து கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே இந்த இராணுவ அதிகரிப்பு என்று கருதப்படுகிறது.

ஈராக்கில் தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ள படைகள் தொடர்ந்தும் அதே இடங்களில் வைத்திருக்கப்படுவார்கள் என்று ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல்



ஜோர்ஜ் காஸே கூறினார். தேர்தல் காலத்தில் அனுபவமிக்க துருப்பினர் அந்தப்பகுதிகளில் நிலைகொண்டிருப்பது அவசியம் என்று அவர் கருதுகின்றார்.

82 ஆவது விமானப்படையின் இரண்டு பிரிவுகள் மேலும் 120 நாள்களுக்குத் தங்கியிருக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேர்தல் காலத்தில் சமயக் கருத்துக்களை ஒதுக்கிவிட்டு, ஐக்கியப்பட்டு செயற்படுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுவருவதாக அலாவியின் ஈராக் தேசிய இணக்கப்பாட்டுக் கட்சியின் உறுப்பினர் இமாம் சாகிப் என்பவர் தெரிவித்தார். இதேவேளை, ஈராக் இடைக்காலப் பிரதமர் இயாத் அலாவி ஜோர்டானுக்குச் சென்று அரசர் இரண்டாவது அப்துல்லாவைச் சந்தித்துத் தேர்தலுக்கு ஆதரவு தரும்படி கோரியுள்ளார். ஜோர்டான் முழு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. அலாவி - ரஷ்யா, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கும் செல்லவிருக்கிறார்.

சன்னி முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வெளிநாடுகளில் உள்ள அப்பிரிவுத் தலைவர்களையும் அலாவி சந்திக்கவிருக்கிறார்.

உலக வலம்
மேனா

பலூஜாவின் வீழ்ச்சிக்குபின் கிளர்ச்சிகள் பெரும்பாலும் குறைந்து விட்டதாக அலாவி கூறியிருந்த போதிலும், இன்னமும் பாதுகாப்பு போதாது என்று பாதுகாப்பு அமைச்சர் ஹசம் ஷாலம் கருதுகின்றார்.

★ ★ ★

### ஐ.நா.செயலரை அமெரிக்கா புண்படுத்தியது

தோல்வி கண்டுள்ள ஈராக்கில் உணவு எண்ணெய் திட்டத்தில் ஊழல்கள் நிறைந்து காணப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்திருந்த குற்றச்சாட்டினால் ஐ.நா. செயலாளர் நாயகம் பெரிதும் புண்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இருந்தபோதிலும், ஐ.நா.அதிகாரிகள் ராஜதந்திரிகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவும் அவருக்குப் பக்கபலமாக நின்று ஆறுதல் கூறியுள்ளார்கள்.

அமெரிக்க அதிகாரிகள் வாஷிங்ரனில் கருத்து வெளியிடுகையில், ஊழல்கள் தொடர்பாக அனான் பதவிவிலக வேண்டும் என்று நாம் கருதவில்லை. ஆனால், அவரைப் பலமாகப் பாதுகாப்பதற்கு நாம் தயங்கவே செய்கிறோம். ஈராக் விடயத்தில் அனானுடன் சற்றுக் கசப்பு இருக்கவே செய்கிறது - என்றனர்.

பாதுகாப்புச் சபை சீர்திருத்தம் தொடர்பான ஒரு சந்திப்பின்போது ஆர்ஜன்டினா, அல்ஜீரியா, கொலம்பியா, எகிப்து, இத்தாலி, மெக்ஸிக்கோ, மொரக்கோ, பாகிஸ்தான், தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் துருக்கி போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் செயலாளர் நாயகத்துக்குப் பலத்த ஆதரவு தெரிவித்தனர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வளர்மதி கல்விநிலையம் – மட்டுவில், சாவகச்சேரி.**

*ஆசிரியர் திரு.மு.வே.அன்பழகன் அவர்களிடம் தென்மராட்சியில் கல்வி கற்ற மாணவர்களில் 2004 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

| மாணவர் பெயர் | பெற்றபுள்ளி |
|---|---|
| 01. சி.றஜிந்தன் | 151 |
| 02. ஜெ.நிதுஷா | 151 |
| 03. இ.நிதீஸ்ராம் | 150 |
| 04. யோ.வசந்தா | 150 |
| 05. செ.கஜானன் | 150 |
| 06. பா.கீர்த்திகா | 149 |
| 07. ச.ராம்ராஜ் | 148 |
| 08. த.நினுஜா | 144 |
| 09. ப.அபிவர்ணா | 143 |
| 10. பி.தேனுஜன் | 143 |
| 11. த.தாரகா | 143 |
| 12. இ.லக்ஷனா | 142 |
| 13. ஸ்ரீ.றம்ஜா | 140 |
| 14. வி.விபுலானந்தன் | 140 |
| 15. இ.பிரதீபா | 136 |
| 16. ஜெ.சஜீனா | 135 |
| 17. சி.தனுராஜ் | 135 |
| 18. வே.மிதிலன் | 134 |
| 19. பா.ராகவி | 133 |
| 20. ம.பிரியங்கா | 133 |
| 21. து.வின்சன் | 133 |
| 22. தெ.தாட்சாயினி | 132 |
| 23. பொ.தரணிகா | 132 |
| 24. லி.சாயிதா | 132 |
| 25. த.தர்சிகன் | 131 |
| 26. ரா.யசிகரன் | 131 |
| 27. வீ.ராஜ்குமார் | 130 |
| 28. நி.மிருணிகா | 129 |
| 29. கு.வினோஜா | 128 |
| 30. சி.கார்த்திகா | 127 |
| 31. சி.அபிராமி | 127 |
| 32. கி.நிவேதிகா | 127 |
| 33. நா.பானுகோபன் | 127 |
| 34. கு.தர்சிகா | 126 |
| 35. ச.நேருஜா | 125 |
| 36. ந.பிரதீபன் | 124 |
| 37. பா.சாரங்கன் | 124 |
| 38. சி.வாகீசன் | 124 |

இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் பரிசில் பெறுபவர்களையும் இவர்களோடு சித்தியடைந்த ஏனைய தென்மராட்சி மாணவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த ஏனைய மாணவர்களையும் கல்வியில் சிறந்து நல்லவர்களாக வல்லவர்களாக வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர், இயக்குநர் மற்றும் உதவி ஆசிரியர்கள்.**
**2005 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்கள்.**

(C/39468)
(42-14-19)



# கியுபிட் போட் KUPID FORT

(இது ஓர் இந்தியன் தயாரிப்பு)

Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளைச் சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**வைத்திய ஆலோசனையைப்பெற்று சிறந்த பயனை அடையுங்கள்**

(C/39191)(42-14-19)


# பரிசில் வழங்கும் வைபவங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.கல்வி வலயத்தினால் பாடசாலைகளுக கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் சரவணபவன் ரவீந்திராவும், கௌரவ விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழக் கல்விக்கழகத்துணைப் பொறுப்பாளர் அருள்மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இவ்வருடம் யாழ்.வலயத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களும் மற்றும் பாடசாலை அதிபர்களும், பொறுப்பாசிரியர்களும் இந்த வைபவத்தில் கலந்துகொள்வார்கள் என உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.அருணகிரிராஜா தெரிவித்தார்.

(8-7)

✦ ✦ ✦

குருநகர்,டிசெ.5

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம், அகில இலங்கை ரீதியில் நடத்திய 'தமிழ்த் திறன்காண் போட்டிகள் - 2004' இல் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் நவரங்ஹல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றிய சுன்னாகம் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி குலசேகரம் நிகேதினி அதிகீழ்ப் பிரிவு உறுப்பெழுத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(8-202-51)

# ஆராதனை நிகழ்வு

வலி.தெற்கு,டிசெ.5

இணுவில் அமரர் ந.வீரமணிஐயரின் ஞாபகார்த்த பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மகாவித்துவான் அவர்களுடைய இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் ஆசியுரையும் பா.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்)வின் வாழ்த்துரையும் இடம்பெறும்.

கலைஞான செம்மல் தவநாதன் றொபேட் பக்கவாத்திய சகிதம் நாதோபாஸசன ஆராதனை நிகழ்த்துவார்.

(8-152)

# சுன்னாகம் பிரதேச சபை முதலிடம்

வலி.தெற்கு,டிசெ.5

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால்பிரதேச சபைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 2003ஆம் ஆண்டின் செயற பாடுகள், முகாமைத்துவம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேசசபை, வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இப்போட்டியில் 61 பிரதேச சபைகள் பங்குபற்றியிருந்தன.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை முன்னதாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரி வாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(8-152)


# தேவை

இரும்புக்கடை வியாபாரத்தில் அனுபவமுள்ள 35 வயதுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை.

தொடர்பு:- **இலக்கம் 55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(39163)(46)



**அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்**

Brownson Arrowroot Powder

**பிரவுண்சன் அரறூட் மாவு**

உண்மையானது. நம்பிக்கையானது என்று பரீட்சிக்கப்பட்டது. பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் **அரறூட் கஞ்சி** குழந்தைகள், வயதானவர்கள் அனைவருக்கும் போசாக்குமிக்க ஓர் உணவு

**யாழ் நகரில் கிடைக்குமிடம்**

**ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குரோசரீஸ்**

161,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

Tel : 021-2219

TALENT

**BROWNSON INDUSTRIES**

139,பாங்ஷால் வீதி, கொழும்பு 11

Tel : 2327197, Fax : 2456507


# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 28 – 01 – 1941 |  | 07 – 11 – 2004 |

**அமரர் நமசிவாயம் சிவனேசன்** (அப்பண்ணா)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியையில் நேரில்வந்து கலந்துகொண்டும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், எதிர்வரும் 07-12-2004 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத்தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் வடக்கு,
நவிண்டில். (39239)(26-42-14-19)

- குடும்பத்தினர்.

# உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தும்

## வட - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம்

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

உலக வங்கியின் உதவியுடன் வட-கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்த உள்ள வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் அரச காணியில் குடியிருக்கும் நபர்களுக்கு அக்காணி சம்பந்தமாக வலிதான ஆவணம் இல்லாவிடில், வழங்கப்பட்ட ஆவணம் தவறியிருப்பின் உரிமைகோருவதில் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, 15.06.1995இற்கு முன்பு அத்துமீறிப் பிடிக்கப்பட்ட காணியைச் சீர்ப்படுத்தல் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை இருப்பின் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவம் போன்று ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து காணி அமைந்துள்ள பகுதிக்குரிய பிரதேச செயலாளர்/ உதவி அரசாங்க அதிபரிடம் 31.12.2004இற்கு முன் வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சம்பந்தப்பட்டவர்களின் வசதி கருதி விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்கள்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**எஸ்.ரங்கராஜா,**
தலைமைச் செயலாளர்,
வட கிழக்கு மாகாணசபை.

பிரதேச செயலாளர்/உதவி அரசாங்க அதிபர்
.........................................

**அரச காணிகளில் குடியிருப்போர் காணிகள் சம்பந்தமான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு கோருதல்**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-
02. விலாசம் :-
03. காணியின் விவரம் :-
  3:1. கிராம சேவையாளர் பிரிவு :-
  3.2. கிராமம் :-
  3:3. குடியேற்றத் திட்டத்தின்பெயர் :-
  3:4. விஸ்தீரணம் :-
  3:5. எல்லைகள் :-
    வடக்கு :-
    கிழக்கு :-
    தெற்கு :-
    மேற்கு :-
  3:6 விண்ணப்பதாரிக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியா? ஆம்/இல்லை
  3:7 வேறு யாருக்காவது சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியா? ஆம்/இல்லை
  3:8 அ)அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணியா? ஆம்/இல்லை
    ஆ) அப்படியாயின் எப்போது?
  3:9 பிரிக்கப்பட்ட காணித்துண்டா? ஆம்/இல்லை
  3:10 எல்லைப் பிரச்சினையா? ஆம்/இல்லை
  3:11 உரிமை கோருவதில் பிரச்சினையா? ஆம்/இல்லை
04) விண்ணப்பதாரிக்கு உத்தரவுப்பத்திரம் அல்லது அளிப்பு வழங்கப்பட்டிருப்பின் அதன் இலக்கமும், திகதியும் :-
05) காணியில் உள்ள பிரச்சினையும் கோரிக்கையும்
  5:1. சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணிக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கவில்லையா? ஆம்/இல்லை
  5:2. பிரிக்கப்பட்ட (Sub Divided) காணிக்கு வலிதான ஆவணம் வழங்கப்படவில்லையா? ஆம்/இல்லை
  5:3. வழங்கப்பட்ட ஆவணம் தவறியுள்ளதா? ஆம்/இல்லை
  5:4. 15.06.95இற்கு முன் அடாத்தாகப் பிடித்த காணிக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கவில்லையா? ஆம்/இல்லை
  5:5. சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியில் வேறுநபர் அடாத்தாக இருக்கின்றாரா? ஆம்/இல்லை
06. பின்னுரிமைப் பிரச்சினை ஆம்/இல்லை
07. அடுத்துறுத்தற் பிரச்சினை ஆம்/இல்லை

திகதி:

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

(C/39475)(42-14-19)

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையே பேச்சுக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்

"நிரந்தர சமாதானத்திற்கான அதிகாரப் பகிர்வு" எனும் தலைப்பில் கடந்த மாதம் 20ஆம் திகதி கொழும்பு சமூக பொருளாதார அபிவிருத்திக்கரன நிலையத்தில் (SEDEC) நடைபெற்ற கருத்தரங்கொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) நாடாளுமன்ற



உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் "முரண்பாட்டுத் தீர்வுக்கான பேச்சை முன்னெடுப்பதற்கு இடைக்கால நிர்வாகமொன்று இருப்பது அவசியமான முன்நிபந்தனையாகுமெனத் தமிழ் மக்கள் நம்புவதுடன்... பேச்சுக்களில் ஈடுபடும் தரப்பினர் இன்னமும் தீர்க்கப்படாதுமுள்ள முக்கிய பிரச்சினைகள் மீதான உடன்பாடுகளுக்கு வரமுன்னர், பிரிந்து செல்வதற்கான உரிமையைக் கைவிட தமிழீழ விடுதலைப் புலிகளை அவர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள்" எனக் கூறினார்.

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டதும் மேதகு ஆயர் றேமண்ட் பீரிஸ் ஆண்டகையின் தலைமையின் கீழ் நடைபெற்றதுமான மேற்படி கருத்தரங்கில் "பேச்சுக்கு அடிப்படை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (இ.த.அ.ச.) பிரகடனமா" என்ற விடயத் தலைப்பில் கஜேந்திரகுமார் பேசினார். கலாநிதி முகமட் சலீம், அசங்க வெலிக்கல மற்றும் ஆர்.எம்.பி. சேனநாயக்க ஆகியோர் ஏனைய பேச்சாளர்கள் ஆவர்.

கஜேந்திரகுமார் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:-

"எனதுரையின் ஆரம்பத்திலே ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு "இ.த.அ.ச. அல்லது ஒஸ்லோ பிரகடனம்" என்று சொல்கிறது. சமாதானச் செயன்முறையை எடுத்துக் கொள்வதானால் "அது அல்லது" என்ற நிலைமை அங்கு கிடையாது என உங்களுக்கு நான் ஆணித்தரமாகக் கூறுகின்றேன். இ.த.அ.ச. என்பது மக்களின் வாழ்வில் இயல்பு நிலையை மீளக்கொணரும் வகையில் யுத்தத்தால் அழிவுற்ற வடக்கு - கிழக்குப் பிரதேசம் முகங்கொடுக்கும் உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய ஓர் இடைக்கால அதிகார சபைக்காக விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டதும், தமிழ் மக்களால் ஆதரிக்கப்பட்டதுமான ஒரு முன்மொழிவாகும். இந்த அதிகாரசபையானது இன முரண்பாட்டிற்குக் காரணமாக இருந்துவந்துள்ள அடிப்படையான முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய இறுதித் தீர்வு ஒன்றிற்கான மாற்றீடாக எவ்வகையிலும் அர்த்தங்கொள்ளப்பட முடியாததாகும்.

மறுபுறத்தே ஒஸ்லோ அறிவிப்பானது, அதாவது விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்குமிடையே இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் நோர்வே அனுசரணையாளர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையானது இன முரண்பாட்டிற்கு இயலுமானதாக இருக்கக்கூடிய இறுதித் தீர்வின் அளவுகோல் என்ன என்பது பற்றியதாகும். ஒஸ்லோ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது என்னவெனில, உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வொன்றை ஆராய்ந்து காண பேச்சில் ஈடுபட்ட தரப்பினர் உடன்பட்டனர் என்பதாகும்.

இவ்விடயத்தில் சர்ச்சையொன்று உருவாகுவதால், எனது பார்வையில், இங்கு எடுத்தாளப்பட்ட வார்த்தைப் பிரயோகம் முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது, பிரிந்துசெல்வதற்கான உரிமையைக் கைவிட்டு, சமஷ்டித் தீர்வொன்றை விடுதலைப் புலிகள் ஒப்புக்கொள்வதுபோல் அர்த்தப்படுவதாக ஒஸ்லோ அறிவிப்பு அமைகிறது. முதலில் பேச்சிலீடுபடும் தரப்பினர் இன முரண்பாட்டிற்குக் காரணமாக இருந்து வந்துள்ள - இன்னமும் தீர்க்கப்படாதுள்ள - மையப் பிரச்சினைகள் மீதான உடன்பாடுகளுக்கு வரமுன்னர், பிரிந்து செல்லும் உரிமையைக் கைவிடுவதற்கோ அல்லது தமிழர் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக சமஷ்டித் தீர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறுவதற்கோ தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளை அனுமதிக்கமாட்டார்கள். ஒஸ்லோப் பேச்சுக்கள் நடைபெற்ற காலத்தில், இன முரண்பாட்டிற்கு இயலுமான ஒரு தீர்வாக சமஷ்டி யோசனை அமையுமா என்பதன் மீது பார்வையைச் செலுத்த விடுதலைப் புலிகளும் தமிழ மக்களும் தம் விருப்பத்தை வெளியிடுகையில், அது ஓர் எதிர்காலத் தீர்வின் இறுதி அளவுகோல் பற்றிய திட்டவட்டமான ஓர் உடன்பாடென்று எவ்வகையிலும் பொருள் கோடலாகாது.

முரண்பாட்டுத் தீர்வுக்கான பேச்சை முன்னெடுப்பதற்கு இடைக்கால நிர்வாகமொன்று இருப்பது அவசியமான முன்நிபந்தனையாகுமெனத் தமிழ்மக்கள் நம்புகின்றனர். இதை நாங்கள் நம்புவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலில், உடனடியாகக் கவனஞ்செலுத்தப்பட வேண்டியுள்ள பாரதூரமான வாழ்வியற் பிரச்சினைகளுக்கும் வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் முகங்கொடுத்து வருகின்றமையைக் குறிப்பிடலாம். சமஷ்டி அல்லது ஏனைய முறைகளில் உள்ள துல்லியமான வேறுபாடுகளைக் கருத்திலெடுக்க நாம் எதிர்பார்க்கப்படுவதற்குமுன், யுத்தத்தின் காரணமாக வாழ்க்கை முறையில் ஏற்பட்ட முழுமையான சீர்கேடுகள் நிவர்த்திசெய்யப்படவேண்டும். மையப் பிரச்சினைகள் மீதான பேச்சுக்களை நாம் ஆரம்பிக்கும் முன்னர், வடக்கு - கிழக்கில் இயல்புவாழ்க்கை மீள ஏற்படாதுபோனால், தமது முழுமையான எதிர்காலத்தையும் நிர்ணயிக்கவிருக்கும் முறைமையொன்றில் மக்களின் பங்கேற்பை நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. இன்று "உள்ளடங்கல் முறைமையென்பது" பிரபலம் பெற்ற ஒரு வார்த்தையாக மாற்றியுள்ளது. சரி, அப்படியானால், "தங்கள் குடும்பத்தை உயிரோடு வைத்திருப்பதற்கான வழியொன்றைக் காண்பதைத்தவிர வேறு எதனைப் பற்றியும் சிந்திக்க முடியாத நிலையில் தரை மட்டத்தில் உள்ள மக்கள் இருக்கையில் எவ்வாறு நீங்கள் வடக்கு - கிழக்கில் உள்ளடங்கல் முறைமையொன்றைக கொண்டிருக்க முடியும்?" என்பது ஒவ்வொருவரையும் நோக்கி நான் கேட்க விரும்பும் கேள்வியாகும்.

சில வருடங்களின் முன் தென்பகுதியில் அடைமழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டபோது, அங்கு நிலவிய உடனடி மனிதாபிமான நெருக்கடியைத் தணிக்கும் முகமாக அரசு தன் மற்றெல்லா நடவடிக்கைகளையும் கிடப்பில் போட்டுவிட்டு அதற்கு முன்னுரிமையளித்தது; சர்வதேச சமூகம் உதவியளிக்க விரைந்தது. ஏன், நிவாரண ஒழுங்குகளை ஒருங்கிணைக்குமுகமாக அதற்கெனத் தனியான ஓர் அதிகாரசபையும்கூட உருவாக்கப்பட்டது. ஆனால், வடக்கு - கிழக்குத் தொடர்பாக என்ன நடக்கிறது?

எமது வேதனைகளோ வெறுமனே சில நாள்களல்ல. மாறாக, கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக, எமது மக்கள் வேதனைகளை அனுபவித்து வந்துள்ளார்கள். எனவே,

## அது யோசனையல்ல என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

மையப் பிரச்சினைகள் மீதான பேச்சுக்களில இறங்குமுன் இந்தத் துன்ப துயரங்களுக்குத் தீர்வு காணப்பட்டாக வேண்டும். அப்போதுதான், தாமாகவே அதில் பங்கேற்கும் நிலையில் மக்கள் இருப்பார்கள்.

இரண்டாவது காரணம், அரசியல் ரீதியானது. கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நாம் எதிர்கொண்டுவந்ததும் முரண்பாட்டிற்கான தீர்வின்மையை விளைவித்ததுமான அடிப்படை முட்டுக்கட்டை யாதெனில, தமிழ்மக்களோடு அதிகாரத்தைப் பகிர்வதற்குரிய விருப்பம் சிங்களத் தலைமையிடம் அறவே இல்லாது போனமையேயாகும். ஒற்றையாட்சி கொண்ட ஒரு தேசத்தை ஒரு தலைப்பட்சமாக உருவாக்கியமை, அதனையடுத்து, நேரிய முறையில் முரண்பாட்டிற்கான தீர்வைப் பெறத் தமிழ்த் தலைமை[illegible] பேச்சு நடத்த மனமில்லாமற்போனமை என்பவற்றிலிருந்து இது புலனாகின்றது. தமிழ் மக்களுடன் ஐயத்திற்கிடமில்லாது நேரடியாகப் பேசுவதற்குப் பதிலாக, அடுத்தடுத்துப் பதவிக்குவரும் அரசுகள் என்ன செய்தன? தமிழ்மக்களின் கூட்டு அபிலாசைகளை எப்படியாவது பலவீனப்படுத்துவதற்கான வழிவகைகளை மீண்டும் மீண்டும் கையாண்டு வந்தன. கிழக்கிலே விடுதலைப் புலிகளிடமிருந்து முரண்பட்டுப் பிரிந்து சென்ற முன்னாள் இராணுவத் தளபதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் அரசு நடந்துகொள்ளும் விதத்தை இன்றும்கூட நாம் காண்கிறோம். எமது பார்வையில் இ.த.அ.சபையை நிறுவுவதென்பது இதற்கான ஓர் உரைக்கல்லாக விளங்கப் போகின்றது. சிங்களத் தலைமைகளின் போக்குகளில் உண்மையாகவே உளமாற்றமொன்று ஏற்பட்டுள்ளது என்பதை அமைப்பு முறையிலான இ.த.அ.சபையின் நிறுவல் மாத்திரமே தமிழ்மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதுடன், சிங்களத் தலைமையானது இறுதித் தீர்வு வரைக்கும் செல்லத் தயாராய் உள்ளது என்பதில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டப் போகின்றது. ஆகவேதான், இ.த.அ.சபையின் அடிப்படையில் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் மிகவும் உறுதியாய் இருக்கின்றார்கள். இ.த.அ.ச. தொடர்பாக அரசுக்கு என்னென்ன யோசனைகள் உள்ளனவோ, அவற்றை அரசு பேச்சு மேசைக்குக் கொண்டு வர முடியும்.

இடைக்கால நிர்வாகம் என்பது, புதியதொரு யோசனையல்ல என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியத் தலையீட்டின்போதுகூட, முக்கிய பிரச்சினைகள் மீதான பேச்சுக்களுக்கு ஒரு முன்னோடியாக அவ்வாறான ஒரு நடவடிக்கை அமையும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதில்லையெனவும் இ.த.அ.சபையின் அடிப்படையில் மட்டும் அரசு பேசவேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமற்றதெனவும் அவர்களுக்கு எதிராகப் பொதுவான ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. இக்குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கிறேன். இவ்வாறான குற்றச்சாட்டுக்களைத் தங்கள் வசதிக்கேற்றபடி முன்வைக்கும் அனைவரும் தற்போதைய சூழ்நிலைக்கு வருவதற்குரிய காரணிகளாயமைந்த நிகழ்வுகளை முதலில் கூர்ந்து ஆராயவேண்டும்.

கடந்த மூன்றாண்டுகளாகப் புலிகளும் தமிழ்மக்களும் உச்ச மட்டத்திலான நெகிழ்வுத்தன்மையை மீண்டும் மீண்டும் காண்பித்து வந்தனர். ஐ.தே.முன்னணி அரசானது வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகமொன்றை நிறுவுவதில் தன்னை அர்ப்பணித்துள்ளதாகத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறியிருந்ததை அனைவரும் நினைவுகூர்வர். உண்மையில், முறைசார் பேச்சுக்கள் ஆரம்பித்தபோது முதலில் இடைக்கால நிர்வாகமொன்றை ஆலோசிக்கும் நம்பிக்கையுடனேயே புலிகளும் தமிழ் மக்களும் பேச்சு மேசைக்குச் சென்றார்கள். ஆயினும், புலிகள் இயக்கமானது, நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்து மாற்றுவழிகளை ஆராய உடன்பட்டதற்கு அப்போதிருந்த குறிப்பிட்ட சில அரசியல் யதார்த்தங்களே காரணமாயிருந்தன. அதாவது, முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தின்போது, பாரிய நிறைவேற்று அதிகாரங்களைத் தன் வசம் கொண்டிருந்த ஜனாதிபதி, அன்றைய அரசின் மட்டில் விரோதப் போக்குடன் இருந்தமையால், இடைக்கால நிர்வாகம் ஒன்றின் மீதான எந்த உடன்பாட்டையும் தன் அதிகாரங்களைப் பயன்படுத்திச் செயலற்றதாக்கி விட முடியும்.

காலப்போக்கில் பல்வேறு உபகுழுக்களின் ஏற்படுத்துகைக்கு வழிகோலிய கூட்டுச் செயலாற்றுப் படைகளை ஏற்படுத்துவதற்கான யோசனைகள் இந்த நெகிழ்வுத்தன்மையின் விளைவே. செயற்படுத்தும் அதிகாரம எதுவுமே இல்லாதுபோனதால் இந்நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியைத் தழுவிய காரணத்தினால் மட்டுமே புலிகளானது முழு அளவிலான இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டது என்பது ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளத்தவறும் விடயமாகும். மேலும், அப்போதைய அரசு தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களினின்று மிகவும் விலகிநின்ற மூன்று விதமான முன்மொழிவுகளை முன்வைத்ததன் பின்னர்தான் புலிகள் இயக்கமானது இ.த.அ.சபையை முன்வைத்தது. பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதை உண்மையாக விரும்பும் அனைவரும் இதை விளங்கிக் கொள்வது முக்கியம். இதைப் புரிந்துகொள்ளாமல், பிடிவாதமாய் இருக்கிறார்கள் என்று வெறுமனே புலிகள்மீது குற்றஞ் சுமத்துவது சமாதானச் செயன்முறையை மீளத் தொடங்குவதற்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை என்பதே எனது கருத்து. புலிகளின் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்குமாறு கோருவது முன்னர் விட்ட அதே பழைய தவறுகளை மீண்டும் செய்யக் கோருவதாக அமைவதோடு அது கண்டிக்கவும் தக்கது. எமது பார்வையில் அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. (வளரும்)




# ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கக் கோரி வழக்கு

கொழும்பு,டிசெ.5

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்து தேர்தல் ஆணையம் அறிவிக்கவேண்டும் என்று கோரும் மனு ஒன்று வெள்ளியன்று உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை களணிப் பகுதியைச் சேர்ந்த ஜீ.தர்மதாஸ என்ற சட்டத்தரணி தாக்கல் செய்துள்ளார்.

தற்போது பதவியில் உள்ள ஜனாதிபதியின் பதவி முடிவுறும் திகதி குறித்து-அடுத்த ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்தும் - அறிவிக்கவேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரும், சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாக இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தற்போதய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறும் திகதி தொடர்பில் ஜனாதிபதி செய்துகொண்ட இரு சத்தியப் பிரமாணங்களால் தெளிவின்மை நிலவுகின்றது. அதனைப் போக்கவே இந்த மனுவைத் தாம் தாக்கல் செய்துள்ளார் எனத் தெரிவித்தார் மனுதாரரான ஜீ.தர்மதாஸ.

(எ.க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

27 - xxxx அசோக் லேலண்ட் லொறி, L.M.L ஸ்கூட்டர், தச்சுவேலைப் பட்டடை (புதியது), ஜெனரேற்றர் (இல.650) ஆகியன விற்பனைக்குண்டு. தொலைபேசி இலக்கம். 0777 286175, 0777 244686. (39232)

சிறந்த பயன்தரக்கூடிய தென்னை, கமுகு, நாற்றுகள் தொகையாகவும் சிறுதொகையாகவும் விற்பனைக்குள்ளன. வை.பேரம்பலம், கரும்புத்தோட்டம், தலையாளி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (39225)

நல்ல நிலையிலுள்ள துணிகழுவும் இயந்திரம் (Washing Machine) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 819/1, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். T.P.:021 222 5401 (39273)

## வீடு விற்பனைக்கு

கொழும்பில் வெள்ளத்தையிலும் தெஹிவளையிலும் காலி வீதிக்கு அருகில் பகுதி பகுதியான கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் தொடர் மாடி வீடுகள் விற்பனைக்குண்டு. உடனே குடிபுகக்கூடிய வீடுகளும் உண்டு. பதிவுசெய்ய முந்துங்கள். தொடர்புகளுக்கு: கவி, 077 3013645, கோகுலன் 077 3086915. (சி-39487)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ்.கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 2½ பரப்புக் காணியும் சுற்றுமதிலுடன் சேர்நத 3½ பரப்புக் காணியில் மாடிவீட்டுடன் கூடியதும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6736860. (39131)

## கார் விற்பனைக்கு

ஒறிஜினல் நிலையில் உள்ள LANCER BOX கார் (A/c, Alloy WHEEL, RADIO CASSETE) விற்பனைக்குண்டு. தொடர்பு: 215, 2ஆம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். T.P.: 077 6674088. (39243)

## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

Original Pure Bred Doberman Pincher நாய்க்குட்டிகளும் ஒரு Dachund நாய்க் குட்டியும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). முத்திரைச் சந்தை, நல்லூர். (39199)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, இராச வீதியில் அமைந்துள்ள (சீரோடை) ஆறு பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தம்பியையா சுதர்சன், கரந்தன், நீர்வேலி. T.P.: 2718473. (சி-39395)

யாழ்.பிரதான வீதி, முதலாம் குறுக்குத்தெரு சந்தியில் அமைந்த 4பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: 077 6736860. (39131)

நல்லூர், துர்க்காமணி மண்டபத்துக்கு அண்மையில் 2பரப்புக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 8.00 - பிற்பகல் 5.00 மணி வரை T.P.:021 222 5604, 0777 495229. (39110)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் வற்பனைக்குண்டு. புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச்சந்தி, பெற்றோல் செற அருகில் உள்ள புலவனார் வீதி. (39237)

## கோழிக்குஞ்சு விநியோகம்

• மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 06.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38932)


### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு. கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907.

(38381)


## கடை விற்பனைக்கு

யாழ்.கன்னாதிட்டி வீதியில் கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:021 222 5604 (காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை. (39131)

## வீடு வாடகைக்கு

20, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள நான்கு அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு. மாணவர்களுக்கு அல்லது தொழில் புரிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்புகளுக்கு: 021 222 3957. (39272)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28 வயதுடைய, உத்தரட்டாதி நட்சத்திரம், கனடா பிரஜா உரிமைபெற்ற (I.I.T.) பொறியியலாளர் பட்டம் பெற்ற 5'8" உயரமுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. சாதகம், புகைப்படம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 2444, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38991)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பத்து (வயது47), தமது 11 வயது மகனுடன் ஜேர்மனியில் வாழ்ந்த வரும் விதவைப்பெண் ஒருவருக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணைவர் ஒருவர் தேவை. வெளிநாட்டில், உள்நாட்டில் உள்ளவர்களும் விணணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 2447, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (39134)


சகல வயதினருக்கும்!

ஞாபகசக்தி குறைவாக உள்ளதா? இதோ பாவியுங்கள்!

"தாரணி" பிராமி மூலிகைப் பாணி (சிரப்)




நன்மைகள்:

கிரகிக்கும் சக்தி அதிகரிக்கும்

புத்திக்கூர்மையை அளிக்கும், சருமநோயைக் குணப்படுத்தும் குரல்வளத்தை மேம்படுத்தும்,

காக்கை வலிப்பை நீக்கும்,

உளநோய் குணமாகும்.

பாலுடன் சேர்த்தும் அருந்தலாம்.

இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பாகும். யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பார்மஸிகளிலும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) ☎: 021 222 2567.

SriLanka Ayurvedic Corporation

P.O.Box: 20, Nawinna, Makaragama.



### MATHS CENTRE

**M.M.V. Road - Nelliady.**

புதிய வகுப்புகள்

✦ Gr.4 முதல் Gr. 11 வரை

**ஆரம்பம்: 10.12.2004**

**வெள்ளி 3.30 p.m.**

✦ பழைய மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளுடன் வரவும்.

✦ புதிய மாணவர்கள் பெற்றோருடன் அனுமதிகளை 06.12.2004 திங்கட்கிழமை மாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளவும். (சி-39480)



### கற்சுமி நிறுவனத்தின் கல்வியாண்டு - 2005

தரம் 3 முதல் 11 (O/L) வரையான வகுப்புக்கள்

ஒளி வீசி உயரும்.
ஆரம்பம் : 10.12.2004
வெள்ளி 4.30 p.m.

*அனுமதிகள்*

01.12.2004 முதல் வழங்கப்படும்.

அனுபவம், தொழிற்தகைமை, திறமைமிக்க இருபதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் ஒரு குடையின் கீழமைந்த சேவையில்

தரம் 3, தரம் 4 — இராசலிங்கம், துஷியா

தரம் 5 — சிவனேசன், ரஜிதன், சங்கர்

தமிழ் — வேந்தன், நவனீதன், குமாரன்; தமிழ் இலக்கியம் — குமாரன்

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் — T. பிரதீபன், J. ஆனந்தா

கணிதம் — கிரிதரன், லிங்கேஸ்வரன், சாம்ராகன்

வரலாறும் சமூகக்கல்வியும், சுற்றாடல், புவியியல் — சிவநேசன்

ஆங்கிலம் — சாய்ராம், மாதவன், சங்கர்

சங்கீதம் — (வட இலங்கை சங்கீத சபை பயிற்சி வகுப்பு) மிதிலைச் செல்வி

வர்த்தகம் — ஜீவா

சமயம் — சௌரி, அருணன்

✪ ஒரு வகுப்பில் மாணவர் தொகை 35மட்டுமே. ✪ மாதாந்தப் பரீட்சையும், தேர்ச்சி அறிக்கை வழங்கலும்.

✪ ஒவ்வொரு மாணவரதும் பயிற்சிக் கொப்பியும் திருத்தம் செய்யப்பட்டு ஆசிரியரால் ஒப்பமிடப்படும்.

✪ மாணவர் மையக் கற்பித்தல் ஒழுங்கமைப்பு.

✪ விஞ்ஞான பாடத்திற்குரிய செய்முறை வசதி விரைவில் ஏற்படுத்தப்படும்.

✪ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

*இது ஒரு பிரத்தியேக வகுப்புகள் சேவை, ஒளிவீசி உயர்வோம்.*

**கற்சுமி கல்வி நிறுவனம்,**

பிரத்தியேக வகுப்புகள் சேவை,

166, நாவலர்வீதி, யாழ். Govt Reg No J/DS/BR/842

(39241)(42-14-17-26)


## ஜீ.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

தென்மராட்சி,டிசெ.5

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. பரீட்சைக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமைக்கப்பட்ட மண்டப இல. II பரீட்சை நிலையம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ-117)

## நான்கு குட்டிகளை ஒரே தடவையில் ஈன்ற ஆடு

தென்மராட்சி,டிசெ.5

ஆடு நான்கு குட்டிகளை ஒரே தடவையில் ஈன்றுள்ளது.

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பகுதியில் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

இந்த இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தங்கராசா என்பவரின் ஆடே நான்கு குட்டிகளை ஈன்றுள்ளது.

மூன்று பெண்குட்டிகளும் ஓர் ஆண்குட்டியும் நலமாக நிற்கின்றன.

இவற்றினை பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

(எ-117)

## முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா

நவாலி,டிசெ.5

வலி.தென்மேற்கு பிரதேச சபை முன்பள்ளி ஆசிரிய சங்கம் நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா இம்மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலி. தென் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி ஸ்ரீவிஜயகுமார் சிவப்பிரியை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜூம் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ. சுப்பிர மணியசர்மா, தியாகி அறக் கொடை நிறுவன செயலாளர் கே.கமலநாதன், சண்டிலிப்பாய் அரசியல் துறைப் பொறுப்பாளர் த.அன்பாளன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டரும் கலந்து கொள்வார்கள்.

(8-100)

மட்டுவில் தெற்கு

வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்

அமரர் **பொன். நாகமணி** அவர்களின்

*எட்டாம் ஆண்டு நினைவலைகள்*

பூமிக்காய் 1936 - 07 - 16



விண்ணுக்காய் 1996 - 12 - 05

**அமரர் பொன். நாகமணி அவர்கள்**

தேன்குளத்தில் மலர்ந்த தேசுமிகு வெண்டாமரையே
தேவர் உலகத்தில் உம் முகவரியைத் தாருமையா.
பேதமின்றி வரைந்து விட்ட வளர்மதியில் - நின்று
பேசுகின்றோம் நின் பேசற்கரிய நற்செயலை!

ஈர்நான்காண்டுகள் முன் இவ்வுலகில் வாழ்ந்த நாளில் - நீர்
ஈன்று விட்ட பெண்ணவள் இன்னும் இளமை
குன்றவில்லை
உலகத்தின் கண்களுக்கு உருவத்தை மறைத்துவிட்டு
உள்ளத்தால் உயர்ந்து விட்ட உணர்வைத் தீட்டினீர்

மாண்புகழ் படைத்த மானிடனே தென்றல் தரும் - நின்
மங்கல வாழ்த்தொலிகள் எம்செவியில் இனிக்கிறது
தூய உள்ளத்தோடு தூமதியாய் ஒளிர்பவனே
தேச விடுதலைக் காற்றோடு உன்னைச் சுவாசிக்கின்றோம்.

*மட்டுவில் தெற்கு.*
*சாவகச்சேரி.*

நிர்வாகம்,
வளர்மதி சனசமூக நிலையம்.

(C/39484)(42-14-17-26)

## மரண அறிவித்தல்

### செல்லையா செல்வரத்தினம்

(சங்கானை ப.நோ.கூ. ச. பணியாளர்)




பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா செல்வரத்தினம் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் கணேசபவான் (றூபா பன்முக வர்த்தக ஊழியர்), மதிவதனி, தவச்செல்வம் (இ.போ.சாலை, காரைநகர்), ஜெயத்திமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம், சுழிபுரம்.* (39274) (24-14-17-26) தகவல்: குடும்பத்தினர்.




# NEW MEDIMIX
# நியூ மெடிமிக்ஸ்

உங்கள் பற்களின் முரசு கரைகிறா?
பல்லீற்றில் இரத்தம் வருகிறதா?
பற் கூச்சம் ஏற்பட்டுள்ளதா? இரத்த
மும் சீழும் வந்து பல் அசைந்து துர்
நாற்றம் வந்து பிரியமானவருடன்
கதைக்க, பழக முடியாதுள்ளதா?

இதுதான் 'பயோரியா'
தந்த வாய்ப்புண் என்பர். இவ்வியாதியை முற்றாக சுகமாக்க இன்றே வாங்கி பல் முரசுக்கு தேய்த்து பாவியுங்கள்.

மூலிகை நியூ மெடிமிக்ஸ் பல் மருந்து ஆங்கில வைத்தியத்தில் சுகமாக்க முடியாத இவ்வியாதிகள் சித்தர்கள் காட்டிய அந்த மூலிகை கூட்டுத் தயாரிப்பு மூலிகை நியூ மெடிமிக்ஸ் (பல் பொடி) எல்லா ஆங்கில மற்றும் சகல ஆயுர்வேத மருந்தகங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பு : பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம்,
தேவா இன்டஸ்ரீஸ், 51/5, கூழாவடி வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி :- 065 2224019

யாழ். ஏக விநியோகஸ்தர்
வனிக்கா மெடிகல்ஸ், 85 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 21 222 2445, 21 222 6291.


## நிறுவுநர் தினம்

மட்டுவில் வளர்மதி ச.சநிலைய நிறுவுநர் பொன். நாகமணியின் 8ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று மாலை 6 மணிக்கு வளாமதி கலையரங்கில் நடைபெறவுள்ளன. நிலையத் தலைவர் சகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி பகவான் நித்தியானந்தன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் செகலைவாணன ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தென மட்டுவில் கிராம அலுவலர் வே. கந்தையா, மட்டுவில் மத்தி கிராம அலுவலர் க.வாமதேவன, மட்டுவில் நுணாவில் கிராம அலுவலர் வே. துரைசிங்கம் ஆகியோரும் கலந்துகொளவர்.

இந்நிகழ்வில் போட்டி நிகழ்விற்கான பரிசில்கள் வழங்கல், கல்வி உபகரணங்கள் வழங்கல் என்பனவும் வளர்மதி கலைக்கழகத்தின இசை விருந்தும் இடம் பெறும். (8-203)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த கணக்காளர், கணக்குப பதியுநர் ஆகியோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9.30மணிக்கு யாழ் செயலக கேட்போா கூடத்தில் நடைபெறவுள்ளது. (8-185-202)

# மரண அறிவித்தல்கள்

## தாவீதுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



சில்லாலையைச் சேர்ந்த தாவீதுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்,

அன்னார் அந்தோனியாப்பிள்ளையின் (லீலா) அன்புக் கணவரும் லிற்வின், குளோறியா, நிர்மலன் (கொழும்பு), றவந்திரன் (தபாலகம், பண்டத்தரிப்பு), றூபன் (கொழும்பு), வினி (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்), அனி (தேவ கன்னியர்மட மாணவி, டியத்தலாவல) ஆகியோரின் அன்புத் தந்தையும் அக்கினேசம்மா, காலஞ்சென்ற லூர்த்தம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற எட்மன் றூபன், அமிர்தநாதன், நிர்மலன், நெல்சி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஜெனற், வினோ (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கனிஜா, சனுஜன், டிறோஜன், டயஸ், டினேஸ், ஜெனிஸ், லொய்ஸ், கிரிஜனா, றொஸ்னா, றொபிற்றா, டினுஜா, ஜிவோன், கஸ்ரோன், ஜெறமி, அஸ்றெக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.12.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் வைத்து திருப்பலி பூசை இடம்பெற்று பின் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித செபஸ்ரியன் வீதி,*
*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(39278)(24-14-42-46)

## திருமதி நவரத்தினம் அன்னலட்சுமி



நல்லூர், செட்டித்தெருவைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் அன்னலட்சுமி அவர்கள் 02.12.2004 வியாழக்கிழமை இரவு இறைபதமடைந்தார்.

அன்னார் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சிவநேசன் (கனடா), ஜெயநேசன் (கனடா), சித்திரா, யோகநேசன், சியாமா (கனடா), சிலோஜனா ஆகியோரின் அருமைத் தாயாரும் சந்திரதாசன், றோமலதா (கனடா), கிருஷ்ணதாஸ் (கனடா), விஜயா (கனடா), கலைச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கஸ்தூரி, கபிலன், கனிஷ்டன், லபிஷா, தனுஷா, திபிஷா, கௌசிகா, கனிசிகா, ஜெனாத், மிதுன், மிதுஷா, தர்மிகா, பிருந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/18, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்,*
*T.P.: 0773054974.*

தகவல்:
செ.நவரத்தினம்
(கணவர்).

(39275)(42-14-46)


# IDM (PVT) LTD.,
## Authorized ICT Education JAFFNA Centre

The Nation's ICT Academy

Be brave and try new things
Global Info

451, K.K.S Road, Jaffna. ( 021 4591398, www.ginct.com/ www.idm.edu E-mail- info@ginct.com

இவ்வருடம் க.பொ.த (சா/த) பரீட்சையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அனைத்து மாணவர்களும் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு எமது நிறுவனம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**DIPLOMA IN COMPUTER STUDIES (BTEC-DICS)**

Language & Communication Skill
Visual Basic, HTML, JAVA.
Microsoft Office
Internet & E-mail, Flash, Dream weaver,
computer operations Using
MS Windows

Discount 30%

**IDM Diploma is Recognised Internationally**

BTEC Edexcel International - UK

CHARLES STURT UNIVERSITY AUSTRALIA

| 1st | 2nd | 3rd | 4th | 5th | 6th | Total |
|---|---|---|---|---|---|---|
| 2500/= | 2500/= | 2500/= | 2000/= | 2000/= | 2000/= | 13,500/= |

நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.

MCP Microsoft® CERTFIED Professional
MCSA Microsoft® CERTFIED System Administrator
MCSE Microsoft® CERTFIED System Engineer

யாழ் நகரில்! Networking
Microsoft® CERTIFIED PROFESSIONAL
நிறுவனத்தின் சர்வதேச தர சான்றிதழ்

- குறுகிய காலத்தில் நிறைவான வகுப்புக்கள் (18 hours)
- Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
- Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
- சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

Course Fee : Rs. 6000/=

Christmas Offer!!!
Each Student can receive Rs.1000/= voucher for the above courses, who register for the course before 8th December 2004. The course will be held on 9th Dece.nber 2004 at 5.00pm.

"To Be the Best Provider of Vocational, Academic, and Professional IT Education & Training in Sri Lanka"

# மரண அறிவித்தல்கள்

## பவளம்மா வீரசிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இருபாலை, கட்டப்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவருமான வீரசிங்கம் பவளம்மா அவர்கள் 02.12.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சிவக்கொழுந்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லாச்சியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற சின்னத்துரை இராஜபூபதி (இந்தியா), காலஞ்சென்ற சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகரத்தினம் (கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வநாயகி, பாலசறோஜினி, சிவபாலசிங்கம், தேவராணி, இந்திராணி, சண்முகராஜா (பிரான்ஸ்), விக்கினேஸ்வரராசா (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோசப் அலன், செல்வராசா, கமலா, நாகராசா, சிவலோகநாதன், யோகமலர் (பிரான்ஸ்), நவநீதசெல்வி (பிரான்ஸ்), கமலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வசந்தரூபி, சாந்தரூபி (பிரான்ஸ்), ரேணுகாதேவன் (பிரான்ஸ்), சுகந்தினி, தேவதாஸ் (பிரான்ஸ்), நவதாசன் (பிரான்ஸ்), சுதா, கிரிஜா, பாலேந்திரன், பிரபாகரன், சுதாகரன், சிவகுமார், றீகன் (பிரான்ஸ்), ஜெகன், றீகா (பிரான்ஸ்), ஜீகா (பிரான்ஸ்), கலிபிராஜ் (பிரான்ஸ்), புவிராஜ், (பிரான்ஸ்), உதித்தா (பிரான்ஸ்), ஜீகன் (பிரான்ஸ்), ஸ்றீகன் (பிரான்ஸ்), கவிகா (பிரான்ஸ்), றூீகன் (பிரான்ஸ்) பக்தகுணசீலன் (பூங்கனிச்சோலை), சிவநாதன் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்), சாந்தகுமார், சாந்தினி, சிறிதர்சினி (பிரான்ஸ்), சிவகுமார், சந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருண்புஜன், ருத்திலா, சந்துஜன், நிலாஜன், சுதர்சன் (பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), மிரோஜன் (பிரான்ஸ்), றிசி (பிரான்ஸ்), கிஷாந், கஜலக்ஷன், திபீகா, சர்மிலா, குமுதகலா, ஷோபனா, கரிஸ்லன்ட் (பிரான்ஸ்), சிவானுஜா, சிவசுதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கவிகாவாசம்',*
*பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.*

தகவல்:
பிள்ளைகள்.

(சி-39498)(29-11-17-24)

## குமாரசாமி கதிர்காமத்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கதிர்காமத்தையா அவர்கள் 03.12.2004 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - மங்கையற்கரசி தம்பதிகளின் மகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஆசிரியர்), பவானி ஆகியோரின் மருமகனும் திருமதி நகுலேஸ்வரி சந்திரசேகரம், காலஞ்சென்றவர்களான கமலாதேவி இராசதுரை, தனலெட்சுமி ஆகியோரின் சகோதரரும் குமரேசன், சிறிதம்பு, சபாபதி, பாலகுமார், திருமதி க.சோமசேகரம், திருமதி ரேவதி சிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சோ.திரியம்பகியின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 31/19, சபாபதி வீதி,*
*தலையாழி,*
*யாழ்ப்பாணம்.* (39282) (24-19-17)

தகவல்:
P.சோமசேகரம்
(சகலன்).

# எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

தென்மராட்சிப் பிரதேசத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கான எய்ட்ஸ் நோய் பற்றிய மீள்பார்வை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நாளை திங்கட்கிழமை பல்வேறு இடங்களில் யாழ்.மாவட்ட தமிழீழ சுகாதாரச் சேவைகள் நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளன. நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், தென்மராட்சி மேற்கு பல நோ.கூ. சங்கம் ஆகிய இடங்களிலும், முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரி நகரசபை ஆகிய இடங்களிலும, முற்பகல் 11 மணிக்கு கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தென்மராட்சிப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும், நண்பகல் 12 மணிக்குக் கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரிப் பிரதேச சபையிலும் கருத்தரங்குகள் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (ஐ-202-117)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபன ஊழியர் கணேசபவான்
அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லையா செல்வரத்தினம்**

*(பணியாளர், ப.நோ.கூ.சங்கம், சங்கானை)*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
றூபா பன்முக வர்த்தகம், சுப்பகூஸ்.

(39276)
(24-19-17)


**கிறிஸ்மஸ் புத்தாண்டு மலிவு விற்பனை**

யாழ். நகர. மக்களே!

டிசெம்பர்
5ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை.

ஓர் அரிய வாய்ப்பு.

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
விசேட கழிவு வழங்கப்படும்.
நாளை என்று தள்ளிப்போடாமல் இன்றே விரையுங்கள்!

**லைடன் புடைவை நிலையம்**

இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2381
(சி-39497) (24-11-17)


# மரண அறிவித்தல்

## கதிரிப்பிள்ளை இராசையா

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை - இராசையா நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் எள்ளுப்பிள்ளையின் அன்புக் கணவரும் சோதிலிங்கம் (இந்தியா), மகேஸ்வரி (உரும்பிராய்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), கனகலிங்கம் (அமரர்), சாந்தலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.12.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (39285)(42-11-17-24)

தகவல்:
பொ.மகேஸ்வரி (மகள்).


**Hair Formula**
**Supplement Capsules**

தலைமயிர் உதிர்தல், இளநரையையும் தடுத்து ஆரோக்கியமான கரும் நிற கூந்தல் வளர்ச்சிக்கும், முகத்தில் கரும்புள்ளி முகப்பருக்களை தடுத்து சருமத்திற்கு பளபளப்பையும் கொடுக்கவல்லது.

Hair Formula Supplement Capsules

With 15 Vitamins & Minerals Including Vitamin E, Biotin, Calcium-Pantothenate.

Hair Formula என்றே கேட்டு வாங்குங்கள்

சாப்பிட்ட உடன் ஒரு வில்லை

CCS

யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை

K.S.P. International Pharmacy Tel : 2449766


# மரண அறிவித்தல்

## பரமானந்தம் மருதப்பு

(முன்னாள் பத்திரிகை விநியோகஸ்தர்)

புங்குடுத்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் றோட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமான பரமானந்தம் மருதப்பு அவர்கள் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம் - தங்கமுத்துவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகலிங்கம் (கொழும்பு), முத்துலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சின்னப்பிள்ளை (பிரான்ஸ்), காலஞ்சென்ற இளையப்பா மற்றும் குமரேசு, காலஞ்சென்ற சபாரெத்தினம் மற்றும் இராசம்மா (ஜேர்மனி), சரஸ்வதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), சண்முகநாதன் (பிரான்ஸ்), பரமலிங்கம் (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (கனடா), சத்தியலெட்சுமி (பிரான்ஸ்), விஜயலெட்சுமி (பிரான்ஸ்), பாக்கியலெட்சுமி (பிரான்ஸ்), பேபி (பிரான்ஸ்), லீலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையாரும் பிரதீபா, பிரதாப், குசாந்தினி, கஜந்தன், சதிகலா, றஜீவன், சஞ்ஜீவன், விதுஷன், சபேசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுததுச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, பழம் றோட்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
ம.கனகலிங்கம்
(மகன்).

(39286)(14-15-29)







**UNIT**

உலக முன்னணி நிறுவனங்களான COMPAQ, DELL, IBM INTEL, PERX மற்றும் ASROCK நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் உலகத்தரம் வாய்ந்த கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொழும்பு விலைக்கே யாழில் கிடைக்கச் செய்து வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

விசேட சலுகைப் பொதிகள்

அதிசயிக்கத்தக்க கொழும்பு விலையில்

- புதிய Multimedia Pentium IV கணனிகள 39,500/= முதல்
  மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium III மற்றும் Pentium II கணனிகள் 13,000/= முதல்
  ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

கல்வி நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

அதிசயிக்கத்தக்க சலுகைகள்

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor

சகல கணனி உதிரிப்பாகங்களும்
அதிசயிக்கத்தக்க சலுகை விலையில்.

347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.


## பாலர் பாடசாலையில் ஒளிவிழா

செம்பியன்பற்று,டிசெ.5

வடமராட்சி கிழக்கு குடத்தனை தென்னிந்திய திருச்சபையின் கீழ் இயங்கும் பாலர்பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு மாலை 4 மணிக்கு நிறுவன இயக்குநர் வணராஜன ரோகான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இப் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (8-36)

"எழுந்து கட்டுவோம் வாருங்கள்..." நெகே. 2:18

# ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை

அசம்பிளி ஒப் கோட், 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் கட்டட பிரதிஷ்ட ஆராதனை மாலை 3.30 மணிக்கு சனிக்கிழமை 11.12.2004 அன்று நடைபெறும். இத்தருணத்தில் நண்பர்கள், உற்றார், சபையார் யாவரையும் தேவனுக்கு நன்றி சொல்ல அன்பாய் அழைக்கின்றோம்.

தேவ செய்தி: போதகர் கோல்ட்டன் விக்ரமரத்ன Rev.Dr. COLTON WICKREMARATNE

அசெம்பிளி ஒப் கோட், 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (சி-39493) (24-19-17) போதகர், சபையார்.

# புற்றுநோய் தொடர்பான நூல் வெளியீடு

முன்னாள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் திருமதி வசந்தி தேவராசா ஸ்ரீஸ்கந்தராசாவின் 'கான்சர் பிறிவென்சன் த்றூ அன்ரியோக்ஸிடன்ற்ஸ் (Cancear Prevention Throug Antioxidants), த சயன்ஸ் ஒவ்கெயாறிங் வ்போர் எல்டெர்ஸ் (The Science of Caring for Elders) என்னும் இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு - 6, வெள்ளவத்தை, காலி வீதியிலுள்ள ஹோட்டல் சபையரில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என்.மெண்டிசும் விசேட பிரதிநிதிகளாக கெல்பேஜ் நிர்வாகி விஜயவந்த, தொழில் நீதிமன்ற நீதிபதியும் கொழும்பு மேலதிக நீதவானுமாகிய மனோ ஸ்ரீதரன், கொழும்பு பல்கலைக்கழகச் சட்டப் பீடாதிபதி என். செல்வக்குமாரன், மகரகம புற்றுநோய் நிலையத்தின் நிர்வாகி யசந்த ஆரியரட்ண ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஐ-202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### வைத்திய கலாநிதி
### இ.தெய்வேந்திரன்

அவர்கள்

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று தனது சேவையை வையத்து மக்களுக்கு வழங்கிவரும் வேளையில் அவரை மென்மேலும் உயர் பதவிகள் வகிக்க என்றென்றும் எமது பிரார்த்தனைகளும் நல்லாசிகளும் வழங்கி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்
பருத்தித்துறை ஊவவத்துனை ஆலோசகர்கள்.

(சி-39701)(38-16-18)

## தேவை

புடைவை வியாபாரம் பழகுவதற்கு ஆர்வமுள்ள O/L, A/L படித்த ஆண்கள் தேவை.

தொடர்பு:- 077 6513672

## லக்சுமி சினிமா — இணுவில்

4 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சிம்பு (இருவேடம்),
ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
தினசரி: 4 காட்சிகள்
11.00, 3.00, 7.00, 10.00
புதிய நேரம்
மன்மதன்



(39283)

## ராஜா — யாழ்ப்பாணம்

இன்றுமட்டும்
அஜித் (இருவேடம்),
பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 மட்டும். (பு.நே)
6 ஆம் திகதி முதல் போஸ்



## நாதன்ஸ் சினிமா — யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது. (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)

இன்றுமுதல் இலங்கையில் முதன்முறையாக வெளியிடப்படும் திரைப்படம் இளையதளபதி விஜய், சங்கவி நடித்த

கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 930 (பு.நே.)

## நிரஞ்சனாஸ் — சங்கானை

விஜயகாந், ரமிதாரெட்டி நடித்த ராஜ்ஜியம் (ரீல்ஸ்)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே) VAN HELSING

## நாகம்ஸ் சினிமா — சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

சத்ரபதி

டொல்பி ஒலி அமைப்புடன்

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)

நாளை 6 ஆம் திகதி முதல் அட்டகாசம்



## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரின் மத்தியில், சென் பீட்டர்ஸ் லேனில், இராணுவ வளாகம் அமைந்துள்ள பகுதிக்குள் ஏழு அறைகள், இரு கராஜ் வசதிகள் கொண்ட பெரிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

உடனடித் தொடர்புக்கு

0776550849

(சி-39707)(38-16-18)

## ஆழ்ந்த அனுதாபங்கள்

எமது நண்பர்களின் தாயார் **மகாலிங்கம் காந்தமலர்** அவர்களின் திடீர் மறைவுச்செய்தி கேட்டதும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இலட்சுமணன் தோட்ட பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

பா. இலட்சுமணன் ஐயர்
(இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் ஆலய பிரதமகுரு).

(சி-39704)(38-16-18)

## கண்ணீர்க் காணிக்கை

### திருமதி சோமசேகரி சிவலிங்கம்



மகாஜனக் கல்லூரி பழைய மாணவனும் எமது நண்பனுமான வினோதனின் அன்புத் தாயார் திருமதி சோமசேகரி சிவலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கை.

இணைபிரியா நண்பர்கள்.

(சி-39702)(38-16-18)

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் காந்தமலர் (மணி அக்கா)

வரணி, கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் தும்பளை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் காந்தமலர் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் வெள்ளையன் - வள்ளி தம்பதியினரின் ஏகபுத்திரியும் மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் (கோபால் மேத்திரி) மகேஸ்வரன், தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாதேவன் (லண்டன்), மகாலட்சுமி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் நாகவன், குணசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குணநேசன், தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் சோபிகன், அஜித்தா, அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை தும்பளை கிழக்கு, கடற்கரை வீதி இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, அவரின் இறுதி ஊர்வலம் பகல் 11 மணியளவில் நடைபெற்று, கோரியடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கடற்கரை வீதி,*
*தும்பளை கிழக்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
மகாலிங்கம்
(கணவர்).
T.P:- 077 6601108

(C/39705)(22-38-16-18)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிதிரேசா செல்வம் (ராசா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா செல்வம் (ராசா) நேற்று (04.12.2004) சனிக்கிழமை கிறிஸ்து விற்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி லில்லி கார்த்திகேசு அவர்களின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி யோசேப் செல்வம் அவர்களின் அன்பு மனைவியும் எமில், எமில்டா (ஜேர்மனி), எமில்ற்ரன் (கனடா), எரிக், ஏணெஸ்ற் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமங்கலா, ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஸ்கந்தா, ஜெருஷா, ஜெரூன், அனோயெயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற டெய்சி, லீலா, ஜெயராஜசிங்கம் (I.C.C.,கொழும்பு), வெலிசியா, குலநாயகி சின்றெல்லா (P.H.M. M.O.H. கந்தோர், மானிப்பாய்), அரசகுலசிங்கம் (U.N.H.C.R. வவுனியா), ஜெசீலியா, போசியா (போதனா வைத்தியசாலை, யாழ.), பற்றீஷியா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை நாளை (06.12.2004) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆர்க் லேன்,*
*உடுவில், சுன்னாகம்.*

தகவல்:
பிள்ளைகள்.

(39299)(22)

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வப்பிரம்மஸ்ரீ சிவனடியார் முத்துக்குமார் ஆச்சாரியார்



திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவனடியார் முத்துக்குமார் நேற்று (04-12-2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவனடியார் - செல்லக்கண்டு தம்பதிகளின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்களேஸ்வரியின் அருமைக் கணவரும் ஷியாம்குமார், பவிதா, கவிதா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் கலையமுதனின் அருமை மாமனாரும் பரிமளகாந்தி, நாகேஸ்வரி, தர்மகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் இரத்தினசபாபதி, இராசரத்தினம், தேவராணி, மகேஸ்வரி, மாணிக்கராசா, புவனேஸ்வரி, அமரர் ஜெயராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2004) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*திருகோணமலை முகவரி*
*37, 5ஆம் ஒழுங்கை,*
*மத்திய வீதி,*
*திருகோணமலை.*
*T.P.No:- 0785136418*

தகவல்:
சி.தர்மகுமார் (தம்பி)
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(39284)(38-16-18)

### இளையதம்பி சிவலிங்கம்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவலிங்கம் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் (யோகம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் பாலச்சந்திரன் (லண்டன்), உதயச்சந்திரன், பத்மராணி, ஜீவச்சந்திரன் (இத்தாலி), பாலகௌரி, மதன், சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதன், செல்வகலா, மல்லிகா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் துர்க்கா, சாரங்கா, பிரியங்கா, துஷானா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சற்குணம், பாக்கியம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான குணராசா செல்வரத்தினம் மற்றும் செல்வராசா, தங்கரத்தினம், அன்னரத்தினம், நடராசா, சிவராசா ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு ஏழாலை மேற்கு ஏழாலையில் நடைபெற்று. பூதவுடல் ஏழாலை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உத்தமன் சிலையடி,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(39290)(38-16-18)

### திருமதி சிவபாக்கியம் இராமநாதன்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, மஞ்சததடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் இராமநாதன் அவர்கள் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும் திரு.திருமதி ச.வீரசிங்கம் தம்பதிகளின் மகளும் திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் சுசீலாதேவி, தபானந்தன் (ஆசிரியர், யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), கருணானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசுப்பிரமணியம் (முன்னாள் பொறியியலாளர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், இணைப்பாளர் வ.பி.போ.ச.), சந்திரலோசனி, குலதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இளமயூரன், பரந்தரன், சனாதன், ஸ்ரீ சாம்பவி, ஸ்ரீ ஷனனி, ரூசிகா, துளசிகா, ஆரூரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பொன்னம்மா, மகேஸ்வரி, நவரத்தினம், சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், இராசம்மா, லில்லிமலர் மற்றும் துரைராசா, ஞானமணி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பொன்னம்பலம், இரகுவதி மற்றும் தனவதி, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் கிழக்கு, காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சத்தடி தெற்கு,*
*இணுவில்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(39289)(38-16-18)

### இராமலிங்கம் சுப்பிரமணியம் (ஆசாரி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் உடுவில், காளிகோவிலை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுப்பிரமணியம் (ஆசாரி) அவர்கள் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அமரர்களான இராமலிங்கம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அமரர் தவமணியின் அன்புக் கணவரும் அமரர் கந்தையா, அமரர் பராசக்தி, வடிவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும் சண்முகரட்ணம், மகேஸ்வரி, அமரர் இலங்கைநாதன், விஜயரட்ணம், கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி, வேலாயுதம், இராஜலட்சுமி, பானுமதி, சுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் சுந்தரம், கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,அம்பலவாணர்*
*வீதி, உடுவில்,*
*சுன்னாகம்.*

தகவல்:
சு.சுப்பிரமணியம்
(மகன்).

(39291)(38-16-18)

### நண்பனை அழைத்துவருவதற்காக

# வானில் கொழும்புக்குச் சென்ற யாழ். இளைஞர்கள் சிறையில்!

ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இலங்கை திரும்பிய நண்பர் ஒருவரை ஏற்றிவருவதற்காக பருத்தித்துறையில் 'ஹைஏஸ்' வான் ஒன்றில் கொழும்பிற்குச் சென்ற 7 இளைஞர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 7 பேரும் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஹைஏஸ்' வான் ஒன்றில் புறப்பட்டதாக அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். ஐரோப்பாவில் இருந்து வந்த இளைஞர், நண்பர்கள் தன்னை அழைத்துச்செல்ல வரவில்லை என தனது உறவினர்களுக்குத் தெரி வித்ததையடுத்தே இளைஞர்கள் காணாமற்போன விடயம் தெரியவந்தது.

இதற்கிடையில் - குறித்த இளைஞர்கள் பயணித்த வான் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமான கொழும்புத் துறைமுகப் பகுதிக்கு வழிதவறிப் புகுந்ததாகவும் -

இதனையடுத்து இவர்கள் அனைவரும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலீஸாரினூடாகக் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதியரசரின் உத்தரவின்பேரில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் -

கொழும்புப் பொலீஸார், பருத்தித்துறை இராணுவ முகாமுக்குத் தகவல் அனுப்பியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் இது தொடர்பாக மீனவ சங்க சமாசமூடாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் உரிய தரப்பினருக்கும் அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## மீள்குடியமர்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியமர்வுக் கொடுப்பனவுக்கென வெளிநாடுகள் நிதி உதவி வழங்கியுள்ளன. அந்த நிதியை யாழ்ப்பாணத்தில் கொடுப்பனவுப் படிவங்களில் ஒரு வருடத்துக்கு முன்பே கையொப்பம் இட்டு விட்டு காத்திருப்போருக்கு வழங்காமல் வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பாரபட்சம் குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். மாகாணசபை மீதும் அரசு மீதும் நம்பிக்கை இழக்கும் நிலையிலேயே அவர்கள் உள்ளனர் -

இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-3)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சோதனைக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, டிசெ.5

நாட்டில் அதிகரித்துவரும் கள்ளக் கடத்தல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாகப் பயணஞ்செய்யும் சகல பிரயாணிகளையும் எவ்வித பாரபட்சமின்றிச் சோதனை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என அரசசார்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து வெளிநாடுகளுக்குச் செல்வோரும் வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருவோரும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுவர் எனவும் -

வெளிநாடுகளுக்குச் செல்லும் விசேட பிரமுகர்கள் இதற்கு முன்னர் விமான நிலையத்தில் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதில்லை என்றும் -

இச்சட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதையடுத்து விமான நிலையத்தில் உள்ள விசேட பிரமுகர்களுக்கான நுழைவாயில் ஊடாகப் பயணங்களை மேற்கொள்வோர் நன்கு சோதனையிடப்பட்ட பின்னரே பயணஞ் செய்ய அனுமதிக்கப்படுவர் எனவும் -

சோதனைசெய்யும் நடவடிக்கைகளில் ஏதாவது குறுக்கீடுகள், அசௌகரியங்கள் ஏற்படுத்துமிடத்து சுங்க அதிகாரிகள், ஜனாதிபதி செயலகத்திற்கு உடனடியாக அறிவிக்கவேண்டும் எனவும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நிதியமைச்சர் சரத் அமுனுகம ஊடாக சுங்கத் திணைக்களப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார் எனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-12)

## இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயர்கிறது

கிளிநொச்சி, டிசெ.5

வன்னியில் உள்ள இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் அனைத்தும் மீண்டும் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமும் நேற்றும் பெய்த தொடர் மழையையடுத்து கனகராயன் ஆற்றுப் படுகையின் ஊடான நீரின் வரவு அதிகரித்ததனாலேயே இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன என்று நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 22 ஆம்திகதியும்தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையின் காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 32 அடிக்கு மேல் உயர்ந்ததையடுத்து வான் கதவுகள் திறக்கப்பட்டமை தெரிந்ததே. (3-12)

# புலிகளின் யோசனைப்படி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோலை, அன்பு இல்லம், செஞ்சோலை போன்ற காப்பகங்களுக்கும் சென்றேன்.

அங்கே தனியான காவல்துறை, நீதிமன்றம், மருத்துவத்துறை, கல்வித்துறை, அச்சகம் எனப் பல அமைப்புகளையும் உள்ளடக்கிய இலங்கை அரசுக்கு இணையான அரசு ஒன்று இயங்குவதையும் கண் ஊடாகக் காண முடிந்தது. நிலைமை இப்படி இருக்க இலங்கை அரசு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்க ஏன் தயங்குகின்றது?

தொடர்ந்தும் வரட்டுக் கௌரவம் பார்க்காமல் பேச்சை ஆரம்பிக்கவேண்டும். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். நியாயபூர்வமான இந்தக் கோரிக்கையை ஏற்று இந்திய அரசு இலங்கை அரசுக்கு வலியுறுத்தவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் அழுத்தம் கொடுக்கும்.

- இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

தமிழகத்தின் இன்றைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது-

தமிழக முதல்வர் ஜெயலலிதா பெரும் புள்ளிகளைக் கைதுசெய்வதன் மூலம் பரபரப்பை ஏற்படுத்திவருகின்றார். ஆரம்பத்தில் என்னைக் கைதுசெய்தார். தொடர்ந்து கலைஞர், வைகோ, நெடுமாறன் எனப் பல தலைவர்களைக் கைது செய்தார்.

இப்போது சங்கராச்சாரியாரைக்கைது செய்துள்ளார். இது துணிச்சலான செயலேயன்றி பாராட்டத்தக்க செயல் அல்ல. எத்தனையோ கொலைகளும் கற்பழிப்புகளும் நடந்தும் நடவடிக்கை எடுக்காது ஜெயலலிதா சங்கரராமன் கொலையில் மட்டும் ஆர்வம் காட்டியதில் மர்மம் உண்டு.

அதேவேளை, வீரப்பன் கொலை தொடர்பாகப்பல்வேறு சர்ச்சைகள் கிளப்பப்பட்டுள்ளன. எனவே, வீரப்பன் தொடர்பாக அரசு தெளி வான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும் - என்று திருமாவளவன் கூறினார். (ஐ-3)


**COLLEGE OF COMPUTER STUDIES**

மாபெரும் கணனிப் புலமைப் பரிசில் பரீட்சை - 2005 நடைபெறவுள்ளது. இதன் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்.

**CCS**

No:119, Pointpedro Road, Nallur, Jaffna.

**aat $ CAT**

June 2005 பரீட்சைக்குரிய விரிவுரைகள் 12.12.2004 காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விரிவுரைகள் English medium இல் மட்டும் நடைபேறும்.

பரீட்சைக்குரிய முறையில் Special English Lectures நடத்தப்படும்.

Office Time : Sat. $ Sun. :
9.00 a.m. - 3.00 p.m.
CAREER. COM INSTITUTE,
No.: 79, main street,
Jaffna. (c/39477)

**எற்கின் ஸ்பென்ஸ் ஒரு சாதனை**

யாழ்ப்பாணத்தில் இன்று முதல்

சகாரா எயர், ஜெற் எயர் விமானங்களுக்கான பயணச் சீட்டுக்களை நீங்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம்.

ஐயப்பன் அடியார்களே!

சபரிமலைக்குச் செல்ல விமானப் பயணச் சீட்டுக்களை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.

● கொழும்பு – திருச்சி, கொழும்பு – திருவனந்தபுரம்

குழுக்களாகச் செல்வதாயின் ஒரு விமானச் சீட்டு இலவசம் அல்லது கழிவு விலையில் பெறலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்(பிறைவேற்) லிமிட்டட்,
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (பழைய தபாற் கந்தோர் முன்பாக).
222 3771, 0777 915824, 0777 270452. (c/39485)(30)

**கல்வியாண்டு-2005**

தரம் 1 முதல் O/L வரை

புதிய வகுப்புகள் ஆரம்பம்

09-12-2004 வியாழன் பி.ப.3.30 மணி

★ யாழ். மாவட்டத்திலே சிறப்பிடம் பெற்று விளங்கும் தனித்துவமான நிறுவனம்.
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**

ஆனைப்பந்தி, (30288) யாழ்நகர்.

**SKY COMPUTERS (PVT) LTD.**

Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325

▶MS OFFICE - 3 MONTHS
▶MS-WORD - 1 MONTH
▶MS-EXCEL - 1 MONTH
▶MS-ACCESS - 1 MONTH
▶MS-POWER POINT - 1 MONTH

MS-Office 1500/=

WINDOWS INTERNET E-MAIL HARD WARE அறிமுகம்

▶DESK TOP PUBLISHING - 3 MONTHS
▶ADOBE PHOTOSHOP - 1 MONTH
▶ADOBE PAGEMAKER - 1 MONTH
▶CORELDRAW - 1 MONTH

நிறுவனத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசம்

COMPUTERISED ACCOUNTING
AUTOCAD
HARDWARE TECHNOLOGY
3 MONTHS

KITS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி

அனைத்துப் பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. உடன் விரையுங்கள்

E – mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)

Today you learn Tomorrow you lead

**ONLINE CLASSES**

**OFFICE APPLICATIONS**

ஆரம்பம்: 05-12-2004
பகல் 10.00 மணி

2 வாரங்கள் மட்டுமே!!

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மிகக் குறைந்த கட்டணத்தில் மிகக்குறுகிய காலத்தில் பரந்த கணனி அறிவினைப் பெற்றிட சிறந்த வழி காட்டுகிறது.

இப்பிரிவானது,
➲ பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டோர்
➲ நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவுள்ளோர்
➲ அரச, தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கென விசேடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Director
IBMS, # 410, K.K.S. Road, Jaffna.
021 222 3165 (c/39456)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வசந்தகுமாரி செல்வராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தகுமாரி செல்வராசா நேற்று (04.12.2004) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் செல்வராசாவின் (காசாளர்,மக்கள் வங்கி,பிரதான வீதிக் கிளை) அன்பு மனைவியும் பாதுஷா (ATI), சஞ்ஜீவன், சங்கீரணி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

*847,நாவலர் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
*T.P.: 0777 110348* (சி-39293)(30-16-45)

தகவல்:
செ.செல்வராசா
(கணவர்).

### திருமதி நாகநாதி சின்னப்பிள்ளை

அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் மாகியம்பதி, சண்டிலிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகநாதி சின்னப்பிள்ளை அவர்கள் நேற்று (04.12.2004) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு நாகநாதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, மகாலிங்கம், விசுவலிங்கம், கனகலிங்கம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சண்டிலிப்பாயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*மாகியம்பதி,*
*சண்டிலிப்பாய்.* (சி-39706)(30-16-45)

தகவல்:
கலைவாணி கனகலிங்கம் (பேர்த்தி)
(முகாமைத்துவ பீடம், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்).

### திருமதி வல்லிபுரம் இலட்சுமி



தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி வல்லிபுரம இலட்சுமி அவர்கள் நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும் சிவலிங்கம், சறோஜினிதேவி, ராஜமலர், ரட்ணமலர், யோகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (39296)(30-16-45)

தகவல்:
சிவலிங்கம் (மகன்).

### சதாசிவம் நாகம்மா

தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நாகம்மா நேற்று (04.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவத்தின் அன்புக் கணவரும் பூபதி, காலஞ்சென்ற சந்திரபோஸ் மற்றும் தியாகராசா, பத்மாவதி, நித்தியசீலன், கெங்காதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேலம்பிராய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தச்சன்தோப்பு,*
*கைதடி.* (39297)(30-15-45)

தகவல்:
பிள்ளைகள்.


**EXPOAIR**

your friend in the skies...

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 2222 3891/6297, 077 234 9999/8888

கொழும்பில் - 011 2372 9552/3, வெள்ளவத்தையில் - 011 2360 290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# நீரிழிவு நோய் பற்றிய தகவலறிய புதிய இணையத்தளம் அறிமுகம்

Ceylinco Diabetes Centre நீரிழிவு நோய் பற்றிய தகவல்களை மக்களுக்குப் பரப்பும் நோக்கில் அந்நோய் பற்றிய தகவல்கள் அடங்கிய இணையத்தளம் ஒன்றை சர்வதேச நீரிழிவு தினமாகிய கடந்தமாதம் 14ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்துள்ளது.

இந்நோய் தொடர்பான தகவல்கள், இதில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்கள் தொடர்பான விவரங்கள் போன்றவைகள் Ceylinco Diabetes Centre இல் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும், இந்த இணையத்தளமும் பெறுமதிமிக்க தகவல்களை வழங்குகின்றது.

இதுதவிர இந்நோயைக் குணப்படுத்த முடியுமா என்ற கேள்விகளுக்கான பதில்கள் மற்றும் இது தொடர்பான தகவல்களைப் பெறும் வேறு மூலாதாரங்களின் இணைப்புகள் போன்றவையும் இவ் இணையத்தளத்தில் உண்டு. www.Ceylinco Diabetes. com என்பது இவ் இணையத்தளத்தின் முகவரியாகும்.

இந்த புதிய இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய Ceylinco Health Care Services இன் பிரதித் தலைவர் ஆர்.ரங்கநாதன் கூறியதாவது:—

எமது இணையத்தளம் சுகாதார மற்றும் வைத்தியம் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு தகவல்களைத் தேடவே பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையில் உள்ள பொதுவான மற்றும் ஆபத்தான நோய்களில் ஒன்றாக நீரிழிவு நோய் காணப்படுவதனால், இந்நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நாம் தெரிவிக்கும் தகவலை மக்களுக்கு எடுத்துச் செல்வதில் இந்த இணையத்தளம் பாரிய பங்கு வகிக்கும் என நாம் நம்புகிறோம் எனக் கூறினார்.

உலக நீரிழிவு தினமாகிய நவம்பர் 14ஆம் திகதி Ceylinco Diabetes Centre இனால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் 'நீரிழிவும் நீங்களும்' என்ற தலைப்பில் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரும், வைத்திய ஆலோசகருமான டாக்டர் உதுல் ஹெீவாஜ், 'நீரிழிவும் சிறுநீரகமும்' என்ற தலைப்பில் டாக்டர் ருஷிகா லெனரோல், 'நீரிழிவு, உணவு மற்றும் வாழ்க்கைமுறை' என்ற தலைப்பில் டாக்டர் தமயந்தி பெரேரா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

100 இற்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர். கலந்துகொண்டோரில் அநேகர் நீரிழிவு நோயாளிகள் என அடையாளங் காணப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Washington Hospital Centre, உடன் இணைந்து Ceylinco Healthcare Services இனால் நிறுவப்பட்ட Ceylinco Diabetes Centre, Ceylinco House இன் ஆறாவது மாடியில் உள்ளது. இது இலங்கையில் மிகவும் உயர்தரம் வாய்ந்த நீரிழிவு நோய் நிலையமாகும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநோயாளர்களுக்கான சிகிச்சையையும் இந்நோயைக்கண்டறிவதற்கான சிகிச்சையையும் வழங்கிவரும் இந்நிலையம் Diabetorology, Cardiology, Ophthaltmology (Eye), Neurology, Nephrology, Dermatology and Diat and Nutrition போன்ற வியாதிளுக்கும் சிகிச்சை வழங்குகின்றது.


200 ஆண்டுகள் பழமைவாய்ந்த வழி வழி வந்த ஹெட்டி கொட ஆயுள்வேதக் குடும்பத்தைச் சேர்ந்தது.

சித்தாலேப

93 விதமான ஆயிர்வேத தயாரிப்புகள்



தரக்கட்டுப்பாட்டு திட்ட ISO 9001 சான்றிதழ் பெற்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டது



தடிமன், தும்மல், காய்ச்சல், தலைவலி, பல்வலி, வீக்கம், வாதநோய் அசௌகரியம், சதைப்பிடி, வலி போன்றவற்றுக்கு மிகச்சிறந்ததொரு நிவாரணி

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட். 33/3, ஸ்ரீ தர்மராம றோட், இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465

யாழ்.ஏகவிநியோஸ்தர்
வனிக்கா மெடிக்கல்ஸ், இல.85, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.


# படம் பார்க்கலாம்!




'போட்டோ பிடிச்சா ஆயுசு குறைஞ்சு போயிடும்' என்று கிராமத்துப் பெரிசுகள் அப்பாவியாய் சொல்வதைக் கேட்டிருக்கலாம். ஆனால், இன்று புகைப்படம் எடுப்பதும் வீடியோ படம் பிடிப்பதும் சகஜமாகிவிட்டது.

மனம் விரும்பும் நிகழ்ச்சிகளை, சந்தோஷம் தரும் தருணங்களை, படம் பிடித்து வைத்துக் கொள்வதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது. 'பிலிம்' களை பயன்படுத்தி புகைப்படம் எடுப்பது அதிக செலவு பிடிக்கும் வகையில் இருந்தது. இப்போது 'பிலிம்' களுக்கு 'விடை கொடுக்கப்பட்டு' டிஜிட்டல் கமிராக்கல் புயலாய் புகுந்து விட்டன.

கைக்கு அடக்கமான தோற்றம், நாம் எடுக்கும் படங்களை உடனுக்குடன் திரையில் சரி பார்த்துக் கொள்ளும் வசதி, நாம் எடுத்த படம் நன்றாக வரவில்லை என்றால் அதை அழித்துவிட்டு வேறு படம் எடுக்கும் வசதி என்பன டிஜிட்டல் கமராக்களில் இருக்கின்றன. இந்த கமராக்களில் எடுக்கும் படங்களை கணினியில்சேமித்துவைக்க முடியும். சில நேரங்களில் சுற்றுலா செல்லும் போது கணினியை எடுத்துச் செல்ல முடியாது. அது போன்ற நேரத்தில் டிஜிட்டல் கமராக்களில் எடுக்கும் படங்களை சேமித்து வைக்க உதவும் கருவி தான் 'போர்டபிள்போட்டோவியூவர்.' (Portable Photo Viewer)

ஜப்பான் நாட்டில் உள்ள சீகோ எப்சன் நிறுவனம் தயாரித்துள்ள இந்தக் கருவி கைக்கு அடக்கமானது. இதில் 40 ஜி.பி. கொள்ளளவு கொண்ட நினைவுப் பெட்டகம் உள்ளது. 3.8 அங்குலம் அகலம் கொண்ட திரையும் இதில் உண்டு.

டிஜிட்டல் கமிராவில் எடுக்கப்படும் படங்களை வயர் இணைப்பு மூலம் 'போர்டபிள் போட்டோ வியூவர்' கருவிக்கு மாற்றிக் கொள்ளலாம். இதில் ஒரே நேரத்தில் 10 ஆயிரம் படங்களை பதிவு செய்து வைக்க முடியும்.

இது தவிர இந்தக் கருவியில் வீடியோ படங்களையும் திரையிட்டுப் பார்க்கலாம். 'ஆடியோ' (இசை) கேட்கலாம். மேலும் இந்தக் கருவியைத் தொலைக்காட்சி மற்றும் கணினியுடன் இணைக்க முடியும். இதில் பதிவு செய்துள்ள படங்களை 'பிரிண்ட்' எடுக்கவும் செய்யலாம். பல வசதிகளைக் கொண்ட இந்தக் கருவியின் விலை 50 ஆயிரம் முதல் 55 ஆயிரம் வரை உள்ளது.





சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ் யாழ். நகரில்


முதலாவது அகவை நிறைவு விழா

சகலவிதமான ஓடர்களுக்கும் 15% அதிரடிக்கழிவு

இல.516, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் தமதுமுதலாவது ஆண்டைப் பூர்த்திசெய்கிறது.

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

எமது முதலாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு மேலும் புதிய அறிமுகங்கள்



- முதன்முறையாக மூக்குக்கண்ணாடிகள் சுத்தம் செய்வதற்கான குளிரூட்டப்பட்ட தாள்களை (கிளீனிங் குளோத்) பெற்றுக்கொள்ளலாம்.
- (டென்சர் கிளீனிங் ரபிலற்) கட்டுப்பல் சுத்தம் செய்யும் மாத்திரைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- வர்ணங்கள் ஊட்டப்பட்ட பிறேமற்ற (RIM LESS) கண்ணாடி வகைகளை நீங்கள் தெரிவு செய்யும் நிறங்களில் அன்றைய தினமே பெற்றுக்கொள்ளலாம்.
- பாடசாலை மாணவர்களுக்கு சிறிய ரக பாதுகாப்பான பிறேம்கள். பிளாஸ்ரிக் கண்ணாடிகளில் (பிளாஸ்ரிக் லென்ஸ்) உடன் பொருத்திக் கொடுக்கப்படும்.

மு.கு : எமது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு 05.12.2004 தொடக்கம் 05.01.2005 வரை சகலவிதமான ஓடர்களுக்கும் 15%கழிவு வழங்கப்படும்.





# இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய 2004ஆம் ஆண்டு விருது வழங்கும் விழா

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் நடத்திய - தமிழ் ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழா கடந்த 28ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.



விருது வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசரான க.விக்னேஸ்வரன் சிறப்புரையாற்றுகிறார்.



விருது பெறத்தெரிவான பதினொரு பேரில் ஒருவரான வீரகேசரிப் பத்திரிகையின் யாழ். அலுவலக நிருபரான எம்.கே.ஜீவகதாஸ், மூத்த ஊடகவியலாளரான வீ.எச்.அப்துல் ஹமீத்திடம் விருது பெறுகின்றார்.

# பாதி தொலைக்காட்சி மீதி கணினி

மனிதன்பாதி – மிருகம் பாதி கலந்து செய்த கலவையாக சிலர் இருப்பதுண்டு. படத்தில் நீங்கள் பார்க்கும் இந்தக் கணினியும் அப்படிப்பட்ட ரகம் தான். அதாவது பாதி கணினி– பாதி தொலைக்காட்சி. சொனி நிறுவனத்தின் தயாரிப்பான இந்த கணினியின் பெயர் வயோ வக்ஸ் எக்ஸ் 90 பி (Vaio Vex-x 90 P- என்பதாகும்.) தொலைக்காட்சி மற்றும் கேபில் இணைப்பை ஏற்படுத்தி நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். நாம் முன்கூட்டியே கட்டளையிட்டால் நாம் விரும்பும் நிகழ்ச்சிகளை இது பதிவு செய்தும் வைக்கும்.



உதாரணமாக 'மெட்டி ஒலி' நேரத்தில் முக்கியமான வேலை இருந்தால்.... இந்த கணினியில் ''ஹீலோ கணினி நமக்கு கொஞ்சம் முக்கியமானவேலைஇருக்கு அதனால மெட்டி ஒலி புரோகிராமை பதிவு செய்திடு'' என்று உத்தரவு விட்டால் கணினி நீங்க சொன்னபடி அந்த நிகழ்ச்சியை பதிவு செய்து வைக்கும்.

இது மாதிரி ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல ஒரே நேரத்தில் 7 சனல்களில் வரும் நிகழ்ச்சிகளையும் பதிவு செய்யும். மேலும் 5 நாள் முழுவதும் ஒளிப்பரப்பாகும் மொத்த நிகழ்ச்சிகளையும் பதிவு செய்யும் அளவுக்கு இதில் சக்திவாய்ந்த மெமரி (பதிவு பெட்டகம்) இருக்கிறது. ஜப்பான் நாட்டில் இந்த மாத இறுதியில் விற்பனைக்கு வர இருக்கும். இந்த பாதி கணினி – பாதி தொலைக்காட்சி கருவியின் விலை சுமார் 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்.





இன்பத்திலும் துன்பத்திலும், வறுமையிலும் செல்வத்திலும், அமைதியிலும் குழப்பத்திலும், மழையிலும் வெய்யிலிலும் நிதமும் உங்களுடன் இருந்ததனாலேயே நீங்கள் எங்கள்மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள்.


அதி தீவிர யுத்த காலத்திலும் கூட இலங்கை வங்கியின் 16 கிளைகள் வடக்கில் முழுமையாக இயங்கின. முக்கியமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் 11 கிளைகள் இயங்கின என்றால் குறிப்பிடவும் வேண்டுமா? எந்தவொரு வங்கியுடனும் ஒப்பிடமுடியாத நம்பகத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் இது நிரூபிக்கின்றதல்லவா?

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

FIRST & FORWARD

# போர் வெடிக்குமா...?

சாதாரண மக்கள் முழிசத் தொடங்கிவிட்டனர். 'காரண காரியம் தெரியாத' அப்பாவி மக்களை மீண்டும் போர்ப்பீதி வதைக்கத் தொடங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைமை சுட்டிக்காட்டியுள்ளது போல - இடைகாலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி அரசியல் வெறுமைக்குள்தான் - இந்த அப்பாவி மக்கள் இருந்து வருகின்றார்கள். போர் இடைநிறுத்தப்பட்ட கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டுமன்றி - உரிமைக்காகத் தமிழரசுக் கட்சியினர் அகிம்சை வழியில் போராடத் தொடங்கிய காலத்திலிருந்து (அல்லது அதற்கு முன்பாகத் தொட்டு) பின்னர் தொடர்ந்த வன்முறைப் போராட்ட வடிவங்களுக்குள்ளும் சாதாரண மக்கள் அரசியல் வெறுமைக்குள்ளும் பொருளாதார வறுமைக்குள்ளும் சிக்குண்டு இருந்தார்கள்; இருக்கிறார்கள். இடையில் சிறிது காலம் சிமெந்து பூசி வீடுகளுக்கு வெள்ளையடித்து



அரசு வன்முறைப் போருக்கு எதிராக இராணுவத் தீர்வை முன்வைக்கத் தொடங்கியபோது - தமிழ் மக்களின் சமூகக் கட்டுமானங்கள்,

**டன்ஸ்ரன் லூயிஸ்**

பொருளாதாரக் கட்டுமானங்கள் அழிந்து ஒழிந்தன. மனித வளங்கள் தொலைந்தன. போசாக்கின்மை, நோய்கள்,

மீட்டெடுத்தல்' என்ற இலக்குப் பயணம் காலவரையறை அன்றி இழுத்தடிக்கப்படவும் சிதைக்கப்படவும் கூடிய ஏது நிலைகள் தோன்றின. அதன் உச்சக் கட்டமே 1987 இல் இடம்பெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தமும் இலங்கைக்கு இந்திய இராணுவத்தின் பல்லாயிரம் துருப்பினர் அனுப்பப்பட்டமையும் புலிகள் - இந்தியப்படை மோதல் வெடித்தமையும் ஆகும். இன்றுவரை இந்தியா தனது பிராந்தியப் பாதுகாப்பு அம்சங்களை இலங்கை அரசின் பாதுகாப்புக் கொள்கைகளுடன் சம்பந்தப்படுத்தியே வைத்துள்ளது என்பதன் தெளிவான வெளிப்பாடாகவே உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் அமைந்துள்ளது.

இலங்கை மீதான அமெரிக்காவினதும் அமெரிக்க ஆதரவு சக்திகளினதும் ஆர்வங்களை இந்தியா தனது நலன்களைப் பேணுவதன் உபாயங்களினூடாகவே பார்க்க முற்படுகிறது. அந்த வகையிலேயே இந்திய - இலங்கை இராணுவ உபாயங்களின் ஒத்துழைப்பு முயற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இனியொரு காலத்தில் இலங்கை அரசுக்கு வெளிநாட்டு இராணுவத் துருப்புக்களின் உதவி தேவைப்படும் பட்சத்தில் அத்துருப்புக்களை அனுப்பும் ஒரேயொரு முதனிலை நாடாக தான் மட்டுமே இருக்கவேண்டும் என்பதை இந்தியா விட்டுக்கொடுக்க மாட்டாது என்பதைப் புரிந்து கொள்வது என்பது பெரும் இராணுவ விஞ்ஞான ஆய்வுகளுக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டிய புரிதல் அல்ல.


இரண்டரைத் தசாப்தகாலமாக நீடிக்கும் வன்போருக்குள் உள்ளூர் அரசியல், இராணுவச் சக்திகளின் நலன்கள், கெடுபிடிகளுக்குள்ளும் சர்வதேச அரசியல் இராணுவச் சக்திகளின் நலன்கள் கெடுபிடிகளுக்குள்ளும் சிக்கிச்

சிதைந்தவர்கள் அப்பாவித் தமிழர்களே. ஏற்கனவே பெரும் சமூகச் சிதைவையும் மனிதவள இழப்புளையும் பௌதிகவள இழப்புகளையும் அபிவிருத்தியின்மையையும் உடல் - உள ஊனப்பாடுகளையும் கொண்டுள்ள தமிழ்ச் சமூகம் மீண்டும் அடுத்த கட்டப் போர் ஒன்றை - வரலாற்று நிர்ப்பந்தமாக ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறதா? தற்பொழுது சேடம் இழுத்தபடி குற்றுயிராகக் கிடக்கும்

பேரினவாத சக்திகள் என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப்பொதுத் தேர்தல் வழிவகுத்தது.

இந்நிலையில் சிங்கள அரச இராணுவவாத வியூகமும் தமிழ்த் தேசிய அரசியல் - இராணுவவாத வியூகமும் சகல விதமான அறநெறிகளுடனும் சொல்நெறிகளுடனும் ஆயத்தமாகுவது உண்மையெனில் கூடவே சர்வதேச சக்திகளின் நலன்களின் வியூகமும் ஒன்றுசேர அழகிய இத்தீவு 'இரத்தச் சமுத்திரத்தில்' அமிழ்ந்து போய்விடவா போகிறது? யாரை யார் காப்பாற்றுவார்?

விடுதலைப் புலிகளின் தலைமை வலியுறுத்துவது போல இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளைப் பற்றி மட்டும் முதலில் பேசும் நிலைப்பாட்டிலிருந்து அப்பாற்பட்டு - நிரந்தரமான அரசியல்தீர்வு பற்றியும்



மடிந்தவர் கல்லறையில் இடிந்து வீழ்ந்து அழுது உருகும் அன்னை! ஆறுதலளிக்க முயலும் அருட்சகோதரி.



கல்லறைப் பூவின் அழகை இரசிக்கும் அப்பாவி மழலையின் எதிர்காலம்?

மகிழ்ந்தார்கள். அவ்வளவுதான்!

பொருளாதார, அரசியல் ரீதியான பாரபட்சங்களைக் கொழும்பு அரசு அமுலாக்கியபோது அவற்றை எதிர்த்து அகிம்சை வழியில் போராடத் தொடங்கிய தமிழரசுக் கட்சியினர் அரச இயந்திரத்தால் ஒடுக்கப்பட்டனர்; தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட அமைப்புகள் தோற்றம் பெற்றன. வன்முறைப் போர் வெடித்தது. மீண்டும் நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றின் முழுப்பலத்துடன் கொழும்பு

குடும்பச் சிதைவுகள், உடல், உள ஊனங்கள் தாண்டவமாடின. பொருளாதார வறுமையும் அரசியல் வெறுமையும்தான் எஞ்சின.

1970களின் பிற்பகுதியில் அல்லது 1980களின் முற்பகுதியில் ஆயுதப் போராட்டமாக வடிவம் பெற்ற அக்கட்டத்திலேயே இந்தியா இவ்விடயத்தில் ஆழமான, அழுத்தமான தீர்மானங்களை, தனது பிராந்திய வல்லரசுவாதத்தின் பூரண நலன்களின் அடிப்படையில் மேற்கொண்டிருந்ததால் 'தமிழர் உரிமைகளை

சமாதானம் முற்றிலுமாக ஆவிசீவன் இழக்குமெனில், கற்பனைக்கு எட்டாத கடும் துயரப்பாடங்களைச் சிங்கள, தமிழ் சமூகங்கள் கற்கப்போகின்றன!

விடுதலைப் புலிகளின் தலைமை, மாவீரர் தின உரையில் குறிப்பிடுவது போல - இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்கள, பௌத்த

பேசவே இலங்கை அரசு விரும்புகிறது எனும் அறிவிப்பே டிசெம்பர் முதலாம் திகதி கொழும்பிலிருந்து வெளியாகியது. இந்த அறிவிப்பு மீண்டும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியப் பாட்டை அருகச் செய்வதாகவே உள்ளது. எனினும் நோர்வே - நம்பிக்கைகள் அனைத்தும் வரண்ட நிலையிலும் தனது 'இறுதி நேரக் கடமைகளை' ஆற்றிக் கொண்டுதான் இருக்கிறது.



# "...தன் அடையாளத்தை தொலைத்து நிற்கிறது தமிழ் சினிமா..."

கிராமிய மணம் கமழும் தென்னிந்தியத் திரைப்படங்கள் என்றால் அது இயக்குநர் பாரதிராஜாவின் படங்கள்தான் என்று ரசிகர்கள் கூறுமளவிற்குத் தென்னிந்திய தமிழ்த்திரை உலகில் கோலோச்சியவர் 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா.

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு கமலஹாசன். ரஜனிகாந்த். ஸ்ரீதேவி இணைந்து நடித்த '16வயதினிலே' படம் தான் பாரதிராஜா இயக்கிய முதல் படம். தொடர்ந்து பல கிராமியப் படங்களையும் ஜனரஞ்சகப் படங்களையும் இயக்கி இவர் தனது மகனையும் வைத்து ஓரிரு படங்களை இயக்கியுள்ளார்; தொடர்ந்தும் படங்களை இயக்கிவருகிறார்.

## "...நிதானித்துக் கதைசொன்ன காலம் மலையேறிவிட்டது......"

சில தினங்களுக்கு முன்பு பாரதிராஜா திடீரென யாழ்ப்பாண மண்ணில் கால்பதித்தார். யாழ்ப்பாணத்தில் பல இடங்களையும் சென்று பார்த்த அவர் 'உதயன்' பணிமனைக்கு சிறப்பு வருகைதந்தார்.

"என்ன கேக்கப் போறீங்க என்கிட்ட. என்னைப் பற்றி எந்த அளவிற்கு நீங்க தெரிஞ்சு வைச்சிருக்கிறீங்க எண்டு எனக்குத் தெரியணும். ஏன்னா கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்துக்கு வெளியுலகத் தொடர்புகள் அறுந்து போன நிலையில் தமிழ் நாட்டிலிருந்து எந்தக் கலைஞர்களும் இந்த மண்ணுக்கு வந்ததில்லை. ஏன்னா. இங்க நடந்த பிரச்சினைதான். நீங்களே இப்ப பாருங்க எவ்வளவு பொருளாதார முடக்கத்துக்கு மத்தியிலும் 85 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உங்க 'உதயன்' பத்திரிகை புயல்ல சிக்கி. இடியில சிக்கி. எல்லா சோதனைகளையும் தாண்டி இன்னைக்கு இவ்வளவு வளர்ந்து நிக்குது. அப்படியான பத்திரிகைக்கு நான் பேட்டி குடுக்கிறதில எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கு...

யாழ்ப்பாணத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். இங்கு ஒரு படப்பிடிப்பை மேற்கொள்ளும் எண்ணத்துடன் வந்திருக்கேன். ஏற்கனவே இலங்கைக்கு வந்து கொழும்பு. நுவரெலியா. திருகோணமலை போன்ற இடங்கள்ல எல்லாம் படம் எடுத்திருக்கிறேன். இங்க நான் முன்பு வராததால யாழ்ப்பாணத்தில் உள்ள இடங்கள் என்னுடைய படப்பிடிப்புக்குச் சிறப்பான இடங்களான்னு பார்க்க வந்திருக்கேன்.

இயற்கைச் சூழல் மிகுந்த இடங்களைப் பார்க்கும்போது ரொம்ப சிறப்பாயிருக்கு. பழுதுபட்ட சில கட்டடங்கள் இன்னும் நிர்மாணிக்கப்படல்ல. கடல் சார்ந்த ஒரு பகுதியாக இருக்கும்போது அழகு நிறைந்த சின்னச் சின்னத் தீவுகள் இருக்குது. விவசாய முறையைப் பாத்தா முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டிலை நிக்கிற உணர்வுதான் வந்திச்சு. யாழ்ப்பாணத்தில் இருக்கிற உணர்வே வரலை. இலங்கையில நிற்கிறன் என்ற உணர்வே இல்லாம இருந்திச்சு. தமிழ் உணர்வே எனக்கு ஏற்பட்டிச்சு.

இவ்வளவு தடைகளையும் மீறி என்னுடைய படம் இங்கு வந்திருக்குமா? நீங்கள் பாத்திருப்பீங்களா? திரை அரங்குகளில் என்னுடைய படம் வந்திருக்குமா? என்று ஒரு சந்தேகம் எனக்கு வந்தது. ஆனா. இந்த விஞ்ஞான யுகத்தில டிவி.டியாக. வி.சி.டியாக வந்து சேர்ந்திருக்கலாம். உங்களுக்கு அந்த வாய்ப்பு அதிகமாக இருந்திருக்கலாம்.

சிவாஜி சாருடையதும் எம்.ஜி.ஆர். அவர்களுடையதும் காலகட்டத்தில இருந்த சினிமாத்துறையின் பாதிப்பு இன்றைக்கு எவ்வளவு தூரம் இருக்குமோன்னு தெரியல. ஒருவேளை எனது ஆரம்பகாலப் படங்கள் உங்களைப் பாதிச்சிருக்கலாம். '16 வயதினிலே', 'கிழக்கே போகும் ரயில்'. 'நிறம் மாறாத பூக்கள்'. 'புதிய வார்ப்புகள்'. 'கல்லுக்குள் ஈரம்' ஆகிய படங்கள் ஒரு காலகட்டம். அதாவது இங்கு பிரச்சினைகள் இல்லாத காலகட்டம்.

அதற்கு அப்புறம் ஒரு காலகட்டத்தில 'மண்வாசனை' படம். 1980.1982களில்...... அதற்கு அப்புறம் நான் 1985 இற்கு மேல எடுத்த படங்களில் எத்தனை படங்கள் இங்கு வந்து நீங்க பாத்திருப்பீர்களோ தெரியல. அதனால தப்பா எடுத்துக்கக் கூடாது. உங்களை நான் கேட்கிறேன் என்னைப்பத்தி நீங்க என்ன நினைத்து வைத்திருக்கீங்க.... இப்ப கேளுங்க...

● தமிழ்த்திரை உலகைப் பொறுத்தவரையில் 'இயக்குநர் இமயம்' என்று அழைக்கப்படும் நீங்கள் கிராமியப் படங்களில் ஆரம்பித்து நடிகர்திலகம் சிவாஜி உட்பட பல நடிகர், நடிகைகளுடன் பணியாற்றியுள்ளீர்கள். உங்களது படங்களுக்குத் தனியான மவுசு இருந்த காலம் ஒன்று இருந்தது. தற்பொழுது உங்கள் திரை உலகப் பயணம் சற்றுப் பின்னிற்பது போலத் தெரிகிறது. உங்கள் மகனை வைத்தும் இரண்டு படங்கள் எடுத்தீர்கள். அந்தப் படங்களும் உங்களது முன்னைய படங்களைப் போல் பேசப்படவில்லை. அதனால் உங்கள் இயக்குநர் பணியைக் குறைத்துக் கொண்டுவிட்டீர்களா? இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

◆ அப்படி வாங்க! என்ன படம் பாத்திருக்கீங்க நான் எனது பையன வைத்துப் பண்ணின படத்தில. தற்போது இருக்கிற தமிழகத்தின் சூழ்நிலை வேறு. 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தமிழகத்தின் சூழ்நிலைவேறு. அப்ப தியேட்டர்களுக்குப் படம் வரும்போது 'தூரதர்ஷன்' மட்டும்தான் தமிழகத்தில் தொலைக்காட்சிச் சேவையை வழங்கியது. ஆனா இப்போது 'சட்டலைற்' மூலமாக நூற்றுக்கும் மேலான சானல்கள் உள்ளன. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து விட்டது. நாகரிகம் வளர்ந்த கணனி யுகத்தில நாம இருக்கோம். நூற்றுக்கு மேற்பட்ட சானல்கள் வரும்போது பல்வேறுபட்ட தொழில்நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் உலகம் வேகமாகச் சுழலுது. உதாரணத்துக்குச் சொல்லணுமுன்னா நம்ம சட்டையில தீப்பிடிச்சா ஓரிடத்தில நிற்கவேமாட்டோம். ஓடிக்கிட்டே இருப்போம். அதேமாதிரி அவசர கதியிலை இயங்கிக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் நாம வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால். 80. 90 களில் படங்களின் கதைகள் நன்றாக இருந்தன. 90களுக்குப் பின்னர் கணனி யுகம் வந்தபோது தொழில் நுட்ப ரீதியில் எவ்வளவு வழங்க முடியுமோ அவ்வளவு வேகமாகப் படத்தின் காட்சிகள் பின்னப்பட்டன. நிதானித்துக் கதை சொன்ன காலம் மலையேறிவிட்டது.

எனது 'கடல்பூக்கள்' திரைப்படம் ஓர் அற்புதமான கதை. மிக அழகாகச் சொல்லியிருந்தேன். அதாவது. இயற்கையாகவும் யதார்த்தமாகவும் சொல்லியிருந்தேன். அற்புதமான பின்னணி சொன்னேன். தெளிவான தமிழ் கலாசாரத்தைச் சொன்னேன். ஆனால் ஏ.ரி.வி. 'வின்சானல்', 'பஷன் சானல்'

**செவ்வி: ஸ்ரீ, பகிர்**

என்பன மேற்கத்திய நாடுகளின் படங்களை ஒளிபரப்பும் போது அதற்கிணையாக எங்களது தமிழ்ப்படங்கள் போட்டி போட்டுக்கொண்டு அடிதடி. வெட்டுக் குத்து என்று வருகின்றன. தியேட்டரில படம் பாத்திட்டு வெளியே வரும்போது யோசித்துப் பார்த்தால் எதுவுமே தெரியாது. ஆனால் 'இன்ரஸ்ரிங்' இருக்கும்.

இன்று தனது அடையாளத்தைத் தொலைத்துவிட்டு நிற்கிறது தமிழ் சினிமா. ஆகையினால். என்னுடைய படங்கள் காலச்சக்கரம் சுற்றிவரும்போது ஏற்றுக்கொள்ளப்படும். ...அடடா... இப்படி ஒரு நல்ல படத்தை இழந்துவிட்டோமே என மக்கள் ஆதங்கப்படவேண்டும்.

எனது மகன் மனோஜ் என்னுடைய படங்களிலே அதிரடி வீரனாக வரவில்லை. ஒரு சராசரி மனிதனாகத்தான் காட்டியுள்ளேன். அவன் ஒரு அற்புதமான நடிகன். கடல்பூக்களிலும் சிறப்பாக நடித்திருந்தான். தற்போது 3 படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறான். 'சாதுரியம்', 'மகாநடிகன்', பெயரிடப்படாத இன்னொரு படம். இந்த மூன்று படங்களும் வித்தியாசமாக அமையும் என்ற நம்பிக்கை உண்டு.

● உங்கள் மகனை வைத்து நீங்கள் புதிதாக ஏதும் படம் இயக்குகிறீர்களா?

◆ இல்லை. வேறு இயக்குநர்களின் படங்களில்தான் எனது மகன் நடித்து வருகிறான்.

● நீங்கள் திரையுலகில் அறிமுகப்படுத்திய ராதிகா. ரதி, ராதா, ரேவதி, ரேகா, ரஞ்சினி, ரஞ்சிதா, சுகன்யா. கார்த்திக், நிழல்கள்ரவி, பாண்டியன், ராஜா, நெப்போலியன் போன்றவர்களுக்குத் தற்பொழுது படங்கள் எதுவும் இல்லையே! இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

◆ பழையன கழிதலும் புதியன புகுதலும் நியதி. அதேபோலத்தான் ரசிகர்கள் புதியவர்களையே விரும்புகிறார்கள். புதியவர்களுக்கு நாம் இடம்கொடுத்தே ஆகவேண்டும். புதிதாக வருபவர்கள் புதிய உத்திகளைக் கையாள்வார்கள். வித்தியாசமாக இருக்கும். ஆனாலும் நாம பழசு என்று ஒதுக்கிவிடமுடியாது. எமது சம்பிரதாயங்களையும். சடங்குகளையும். பண்பாடுகளையும் பழசு என்று ஒதுக்க முடியுமா?

● இதுவரை நீங்கள் எத்தனை படங்களை இயக்கியுள்ளீர்கள்?

◆ 45 படங்கள் பண்ணியுள்ளேன். முதல் படம் '16வயதினிலே'. இரண்டாவது படம் 'கிழக்கே போகும் ரயில்'. மூன்றாவது படம் 'சிவப்பு ரோஜாக்கள்'. நான்காவது படம் 'புதிய வார்ப்புகள்'. ஐந்தாவது படம் 'கல்லுக்குள் ஈரம்'. ஆறாவது படம் 'நிழல்கள்'. ஏழாவது படம் 'அலைகள் ஓய்வதில்லை'...

● சினிமாவில் நீங்கள் அறிமுகப்படுத்திய நாயகர்கள், நாயகிகள் நீங்கள் எதிர்பார்த்த மாதிரி உங்கள் எதிர் பார்ப்புகளைத் திருப்திப்படுத்தியிருக்கிறார்களா?

◆ ஆமா.... எல்லோருமே என் பெயரைக் காப்பாத்தியிருக்காங்க. யாருமே சோடை போகவில்லை. ரொம்ப பிரமாதமாக நடிச்சிருக்காங்க...

● இளையராஜா, வைரமுத்து ஆகியோருடன் இணைந்து நீங்கள் உருவாக்கிய படைப்புகளுக்கும் பின்னர் வேறு கூட்டணிகளோடு சேர்ந்து தயாரித்த படைப்புகளுக்கும் இடையே வேறுபாடுகள் தெரிந்தன. அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

◆ இளையராஜா. வைரமுத்து கூட்டணி ரொம்பவும் பிரமாதமாகவே அமைந்தது. ஒரு காலகட்டத்தில் எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி. ரி.எம்.சௌந்தரராஜன். கண்ணதாசன் என்றிருந்தது. அது ஒரு காலகட்டம். அதனையே நீங்கள் நினைச்சிட்டு இருக்கமுடியாது. அம்மாவோட இருக்கும் போது நாம அண்ணன். தம்பி ஐந்து பேரும் ஒண்ணா விளையாடிட்டிருந்தோம். இப்ப தனித்தனிக் குடும்பமாயிட்டோம். மறுபடியும் போய் ஒண்ணா விளையாடிட்டிருக்க முடியுமா? அதை நினைத்துப் பார்க்க முடியுமே தவிர நடைமுறைப்படுத்த முடியாது. ஆயினும். சந்தர்ப்பம் கிடைக்குமானால் நீங்கள் கேட்ட கூட்டணி மீண்டும் இணைவோம்.

*(மிகுதி அடுத்த வாரம்)*

# இன்னொரு காதல்.....

கடுகுக் கதை

'கதிர் என்னை ஏமாற்றினால் உன்னைக் கொன்றுபோடுவேன்' என்று கதிரின் மார்பில் சாய்ந்தபடி செல்லமாக அதட்டினாள் சிரியா. சிரியாவும் கதிரும் இன்று நேற்றுக் காதலிப்பவர்கள் அல்லர். பள்ளிக்காதலாய் விதைவிட்ட காதல் இன்றும் யாராலும் அழிக்க முடியாத ஒரு பெருவிருட்சமாய் வளர்ந்து கொண்டிருந்தது.

அன்றும் வழமைபோல் தனன் அன்னத்தைத் தூதுவிட்டது போல கதிர், சிரியாவின்



தோழியிடம் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டான். அவசர அவசரமாக கடிதத்தைப் பற்றிக்கொண்ட சிரியா மளமளவெனக் கடிதத்தை வாசிக்கலானாள்.

"அன்புள்ள என்னுயிர் சிரியாவிற்கு.....

உன்னுயிர் கதிர் எழுதுவது யாதெனில் நான் உன்னைக் காதலித்தது என்பது உறுதியான உண்மை. இருப்பினும் எனக்கு இன்னொரு காதல் இருப்பதென்பதும் வரலாற்று உண்மை. அதுதான் என் தாய் மண் மீது கொண்ட காதல். என் தாய் மண்ணில் கட்டவிழ்க்கப்படுகின்ற கொடுமைகளை என்னால் பார்த்துச் சகித்துக்கொள்ளமுடியாது. அதனால் என்னை மண்மீட்புப் போரில் இணைக்க வேண்டிய தேவையுள்ளது. மீண்டும் எம் காதல் விருட்சத்தை வளர்த்துக்கொள்ள உயிருடன் இருந்தால் வருகிறேன் காத்திருப்பாயா?......"

கடிதம் வாசித்து முடிப்பதற்குள் சிரியாவின் கண்களிலிருந்து மாரி மேகமாய் கண்ணீர்த்துளிகள் மளமளவென்று பாய்ந்து கொண்டிருந்தன.

சிரியா கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கையில் 6 மணி 5நிமிடத்தைக் காட்டியது. அவ்வேளையில் நினைவொலியின் சத்தம்கேட்டு கதிரின் கல்லறையில் தலை சாய்த்து அழுது கொண்டிருந்த சிரியா கடந்த கால நினைவுகளிலிருந்து மீண்டவளாய் அந்தத் துயிலுமில்லத்தைத் தலைநிமிர்த்திப் பார்க்கிறாள். விடுதலைக்கு வித்திட்ட அந்த விருட்சங்களின் அமைதிச் சோலை ஒரு நிஷப்த்தத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. கண்மணிகள் துயிலும் கல்லறைத் தொட்டிகள் கண்ணீரால் நனைந்தபடி மக்கள் கூட்டத்தால் முற்றுகையிடப்பட்டிருந்தன. வான தேவதையும் தனது கரங்களினால் மாவீரச் செம்மலுக்காக மழை நீரைத் தெளித்து அஞ்சலி செய்துகொண்டிருந்தாள்.

எஸ்.கவிதரன்

## சரியான விடைக்காய் காத்திரு......!

சமாதான [illegible]
சகட்டு மேனிக்காய்
சதிராட வந்தவளேனே

புரிந்துணர்வென்று - ஏதோ
பொறுத்துக் கொண்டோம் என்றா
கண்மூடித்தனமாய் நம்மை
காவுகொள்கிறாய் இன்னும்

பொங்கிப் புயலானால் நாம்,
புழுவாகிப் போவாய் நீ!

அநியாயப் படுகொலையை
அட, போர்நிறுத்தத்திலேனும்
மறந்துவிட முடியா
மந்தி என்று காட்டிவிட்டாய்.

சீண்டிவிட்டு சிதறடிக்கும்
சில்லறைச் சிந்தனைக்கு
சீக்கிரம் முடிவுகட்டு!

செங்குருதி வெள்ளத்தில்
சிவந்த ஈரம் காயுமுன்னர்
மனங்களையும் கருக்கி - எம்
மண் தாயின் மேனியிலே
கரி வெள்ளமா - நீ
கரைந்தோட வைக்கிறாய்?

சத்தியமாயுனக்கு
சீக்கிரமாகவே
சத்தியத்தினாலே
சரியான விடைகிடைக்கும்

அதுவரை....
உறுதியாய் நீயும்
உன்னுயிரைப் பிடித்திரு,
சத்தியம் வெல்வதனை
சந்திக்க வேண்டும்
சரிந்து போன உன் விழிகள்!

- சகு.

# நெடுந்தீவை நிர்வகித்த நோளன் சணல் செய்கையை தூண்டினான்

ஆங்கிலேயர் ஆட்சியின் போது நெடுந்தீவை நிர்வகித்த எட்வேட் நோளன் (Edward Norlan) ஒரு சிறந்த அதிகாரியாக விளங்கினார் என முன்னோர்கள் கூறுவதுண்டு.

ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த இவர் ஒரு சிறந்த இராணுவத் தளபதி மட்டுமல்ல விவசாயியும், மண்வள ஆய்வாளரும்கூட. இலங்கை இராணுவ அணியின் நான்காம் பிரிவு நெடுந்தீவின் வரலாற்றுடனும் எட்வேட் நோளனுடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தது.

இலங்கையில் இருந்த இராணுவ - கடற்படையினருக்குத் தேவையான கூடாரங்களை அமைப்பதற்கும் மண்வள ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டும் சணல் உற்பத்தியை அதிகரிக்கக் கருதியும் இங்கு அனுப்பிவைக்கப்பட்டவர் நோளன். இராணுவத்திற்கான கூடாரங்களை அமைக்கச் சணல் தேவைப்பட்டது.

1811 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நெடுந்தீவின் அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட இவர் நீதிவான் பிஸ்கால் பதவிகளுடன் மேலதிகமாக

## நெடுந்தீவு பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பு

குதிரைப் பண்ணையின் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு குதிரை லாயங்களையும் நிறுவினார்.


முன்னைய நிர்வாகிகளைவிட சிறந்த நிர்வாகியாக விளங்கிய இவர் புதுமையான சிந்தனைகளைக் கொண்டவராகவும் நல்ல ரசிகனாகவும் காணப்பட்டார்.

மத்தியில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட டச்சு மாளிகையில் வசதியான ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தியபோதும் பொதுமக்களுடன் சிநேகபூர்வமாகவும் நட்பு முறையிலும் பழகியதுடன் தனது நிர்வாகக் கடமைகளிலும் அவ்வாறே அணுகினார்.

இவரது காலத்தில் சணல் உற்பத்தி வளர்ச்சியடைந்திருந்தது. விவசாயத்துறையும் முன்னேற்றம் பெற்றிருந்தது.

பிரிட்டன் அரசு இவரது நிர்வாகத்தின்கீழ் மிகவும் கூடுதலான வருவாயைப் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

தீவின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான வெட்டுக் கழியையும் வடக்குக்



கடலையும் இணைக்கும் கால்வாயை வெட்டியவன் வெடியரசன் எனப் பசிற் என்பவர் தனது (Romantic Ceylon) குறிப்பில் எழுதியுள்ளார். அவர் கூறுகிறார்...

"நெடுந்தீவை ஊடறுத்துச் செல்லும் ஒரு பாரிய கால்வாயை நிர்மாயித்த பெருமை இவனையே சாரும். இக்கால்வாயானது இரண்டு பாரிய குளங்களை இணைக்கிறது. இந்தக் கால்வாய் இப்பொழுது அகலம்மிக்க ஆழம் இல்லாததாக உள்ளது. வெடியரசன்தான் முதன்முதலில் இக்கால்வாயை வெட்டினான். இப்பொழுது ஏதோ ஒரு வகையில் செம்மைப் படுத்தப்பட்டும் கடந்த காலங்களில் திருத்தப்பட்டும் உள்ளது."

வெடியரசன் இக்கால்வாயை வெட்டியதற்கான ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை. அந்த மன்னன் குறித்த தகவல்களில் கால்வாய்கள் எதையும் வெட்டியதற்கான குறிப்புக்கள் எதுவும் இல்லை. நெடுந்தீவு வைத்தியசாலைக்கு அணித்தாகக் காணப்படும் இக்கால்வாய் நோளன் கால்வாய் ( Norlan Canal) எனவே, இன்றும் அழைக்கப்படுகின்றது.

நோளன் குறிப்பிட்ட கால்வாயை வெட்டியதற்கான முக்கிய காரணம் அவனது ரசனைத் தன்மையே. தீவின் மத்திய பகுதிகளில் உற்பத்தியான சணல் மற்றும் விவசாய நடவடிக்கையைப் பார்வையிடவும் குறிப்பாக, குதிரைகளைச் சென்று பார்வையிடவும் அவர் வெட்டுக்கழியை கடலுடன் இணைக்கும் இந்தக் கால்வாயை வெட்டினார்.

அவரது வாசஸ்தலமான டச்சு மாளிகை வடக்குக் கடற்கரைக்கு அப்பால் அமைந்துள்ளதால் அக்கடலினூடாக சிறிய படகுகளைப் பயன்படுத்தித் தீவின் உட்பகுதிக்குச் செல்வதற்காகவே உல்லாசியான இந்த நிர்வாகி குறிப்பிட்ட கால்வாயை வெட்டுவித்தார்.

இவரது காலத்தில் வாழ்ந்த நெடுந்தீவைச் சேர்ந்த கந்தப்பு முதலி மிகவும் செல்வாக்குப்பெற்ற ஒருவர். நோளன் தனது உல்லாசப் பொழுது போக்கிற்காக இக்கால்வாயை வெட்டிக் கடலையும் வெட்டுக்கழியை யும் இணைத்த நடவடிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகாரிகளுக்கு முறையீடு செய்ததாகவும் முதியவர்கள் கூறியதுண்டு.

இதனால், பின்னர் இடமாற்றஞ்செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. குதிரைகளை வளர்ப்பதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் அக்கறை கொண்ட அதிகாரியான நோளன் 1826இல் தனது பதவியில் இருந்து விலகிக்கொண்டார்.

நோளனால் வெட்டப்பட்ட இந்தக் கால்வாயே பின்னாளில் நெடுந்தீவின் வளங்கள் சீர்குலைய முதன்மைக் காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவு லக்ஸ்மன்.

# இடறி விழுந்தால்...

# அங்கே ஒரு சமாதான நீதிவான்

பேராசிரியர் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது 'இலங்கைப் பயணம்' பற்றிய நூலிலே "யாழ்ப்பாணத்தில் இடறி விழுந்தால் ஒரு உபாத்தியாயர் அல்லது கல்விமான்கள் மீது தான் விழுவோம்" என்கிறார்.

இப்பொழுது, அப்படி யாராவது இங்குவந்து இடறிவிழுந்தால் ஒரு சமாதான நீதிவான் அல்லது அதற்காக அலைந்து திரிபவர் மீதுதான் விழவேண்டியிருக்கும்.

சென்ற ஆட்சிக்காலத்திலே ஒருமுறை ஒரு வாரத்திலே இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டங்கள் வழங்கப்பட்டிருப்பதாக வர்த்தமானியில் அறிவித்தல் வந்திருந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் வேலை வாய்ப்புகளுக்காக வும் பசுமாட்டுக் கடன்களுக்காக வும் ஓர் அரசியல்வாதியிடம் தங்கள்




பெயர்களைப் பதிவசெய்து கொண்டவர்களாம். இப்படியெல்லாம் அப்பொழுது பேசிக்கொள்ளப்பட்டது.

ஏதோ அதுவாவது கிடைத்ததே என்று அவர்களில் சிலர் அமைதியடைந்தார்களாம். இன்னும் சிலரோ தாம் கேட்டதைவிடப் 'பெரிய பேறு' கிடைத்துவிட்டதாகப் புளகாங்கிதம் அடைந்தார்களாம்.

பண்டைத் தமிழகத்திலே விழுப்புண் படாதவர்களை வீரர்களாகக் கருதுவதில்லையாம். அதனால் விழுப்புண்படாது இறந்துபடும் ஆண் மகனுக்கு இறந்த பின்னராவது அப்படி ஒரு விழுப்புண்ணை மார்பிலே ஏற்படுத்தி அவனுக்கு இறுதிச் சடங்கை முடிப்பார்களாம். அதன் பின்னர் அந்த ஆத்மா வீர சொர்க்கம் அடையும் என்பது அவர்களின் நம்பிக்கை. இங்குள்ள நம்மவர்களுக்கும் அப்படி ஓர் ஆசை...

மரண அறிவித்தல் போன்றவைகளில் சொல்லிக் கொள்வதற்கு கனடா, நோர்வே, சுவிஸ், லண்டன் என்று உறவுகள் இருக்க வேண்டும் என்பது போன்று கூடவே ஒரு 'ஜே.பி' யும் இருக்க வேண்டும் என்பது அவர்களின் விடுதல் அறியா விருப்பமாகும். சிவப்பேறு அடைவதற்கு அதெல்லாம் உதவுமா...?

சமயப்பெரியாரான ஸ்ரீசெ.சிவஞானம் ஐயா அவர்கள் ஒரு கதை கூறுவாராம்.

அகில இலங்கைக்கும் ஜே.பியான ஒருவர் தமது சாதனைகளைக் கூறும் செய்தித்தாள்களின் வெட்டுத்துண்டுகள்போன்றவைகள் அடங்கிய கூடையுடன் சொர்க்கவாசலை அடைகின்றார். வாசலில் நின்ற காவற்காரன் கூடையுடன் உள்ளே அனுமதிக்க மறுத்து இதயத்தைச் சோதிக்க வேண்டும், என்று நெஞ்சைத் திறக்கச் சொல்லுகிறான். சோதனையின் பின் சொல்லுகிறான்.

"மைடியர் சேர், உங்கள் இதயத்தில் சில கறுப்புப் புள்ளிகள் இருக்கின்றன. அவற்றுடன் நீங்கள் இந்த வாசலைத் தாண்ட முடியாது. அடுத்த முறை வந்து உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டா என்று பாருங்கள்" அடுத்த முறை என்றால் அடுத்த பிறவி.

கொழும்பிலே கடவுச்சீட்டுக்கள் வழங்கும் குடிவரவு குடியகல்வு அலுவலக வழி நீளம் பல சமாதான நீதிவான்கள் உத்தியோக முத்திரையும் கையுமாக வீற்றிருப்பார்கள். அவர்களுக்கு ஆள்களைப் பிடித்துக் கொடுப்பவர்களாக "ஜே.பி.சைன்... ஜே.பி.சைன்" எனக் குரலெழுப்பியவாறு பல நடைபாதை முகவர் செயல்படுவார்கள். ஆளைத்தெரியா விட்டாலும் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு 'பணத்துக்காக' அவர்கள் கையொப்பமிடுவார்கள். அதிலே முகவர்களுக்கும் தரகுப்பணம் கிடைக்கும்.

இங்கே என்னவென்றால் சமாதான நீதிவான்கள் பட்டம் பெற்று பாராட்டு விழாவையும் தங்கள் செலவிலேயே நடத்திவிட்டு எந்தவித உதவிகளையும் எதிர்பாராது 'சேவை'க்கே தம்மை அர்ப்பணித்துவிட்ட சிலருக்கோ கையொப்பத்துக்கு யாரும் வரக்காணோமே என்ற ஆதங்கமாம்... அதற்கு ஒரு காரணம் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல இடறிவிழும் இடங்களிலெல்லாம் சமாதான நீதிவான்கள்... அவர்களை அவமதிப்பது போல அமையக் கூடும் என்பதால் அடுத்த காரணங்களை இங்கே நான் குறிப்பிடவில்லை.

ஒருவர் வங்கியில் (தனியார் கடை என்றும் வைத்துக் கொள்ளலாம்) அடகு வைத்து அதற்குரிய சீட்டையும் பணத்தையும் நகை உரிமையாளரிடம் ஒப்படைக்கிறார். பின்னர் அதை மீட்பதற்கு 'அடகு வைத்தவரைக் காணவில்லையே என்ன செய்யலாம்?' என்று உரிமையாளர் வங்கிக்குச் சென்று விசாரிக்கிறார். அங்கே அடைவு வைத்தவர் சீட்டுத் தொலைந்துவிட்டதாகச் சமாதான நீதிவான் மூலமாகச் சத்தியக் கடதாசி முடித்து நகைகளை மீட்டுக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

சாட்சிக் கையொப்பமிடும் சமாதான நீதிவானுக்கு ஆளைத் தெரிந்தால் மட்டும் போதாது. அவர் 'குழப்படி' செய்யவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒரு புகழ்பெற்ற குடும்பத்திலே ஒரு கிளை போன்றவர் அந்த அச்சக உரிமையாளர். அவருக்கு சமாதான நீதிவான் பட்டம் கிடைத்து, அதையொட்டி ஒரு வரவேற்புபசார விழா அப்போது நடைபெற்றது. அந்தக் குடும்பமே பூரிப்புடன் கலந்துகொண்ட அவ்விழாவிலே இன்னொரு கிளை போன்ற அப்பிரமுகரின் தம்பியாரை மட்டும் காணமுடியவில்லை. இவருக்கு முன்னரே அவருக்கும் சமாதான நீதிவான் பட்டம் கிடைத்து விட்டது.

அந்த விழாவிலே அமரர் நாவேந்தனும் கலந்து சிறப்புரையாற்றியவர். விழா முடிவிலே அவரிடம் 'அது' பற்றிக் கேட்டேன். அதற்கவர் "அவர்கள் ஒருவருக்கொருவர் பகையாளர்கள் – கதைப்பதில்லை" என்றார்.

எனக்கது பெருவியப்பாக இருந்தது. சமாதான நீதிவான் என்பதிலோ, சமாதானமும் இருக்கிறது. நீதியும் இருக்கிறது ஆனால் சில சந்தர்ப்பங்களில்இரண்டையும் தேடிக் கண்டுபிடிக்க நேரிடுகிறது...!.

**- சண் அங்கிள்.**

# பிரக்ஞைபூர்வமான பார்வைப் பகிர்வுகள்

# சிற்றேடுகளில் வேண்டும்

இலக்கியத் தகவல்களை, இரசனையை, விமர்சனப் பார்வையை வழங்கிப் புதிய வாசகர்களைக் குறிப்பாக, இளைஞர்களை விழிப்புநிலை கொண்டவர்களாக உருவாக்கும் நோக்கோடு 2003 மார்கழி முதல் வெளிவரத் தொடங்கிய 'தெரிதல்' கலை இலக்கிய இரு திங்கள் இதழ் தனது பயணத்தில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கிறது.

சுருங்கிய அளவில் இலகுத்தன்மையுடன் விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் தெரிதலின் பணி மிகத்தெளிவாகவும் நேர்த்தியாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை வெளிவந்த ஆறு இதழ்களையும் ஒருசேரப் பார்க்கின்றபோது மனநிறைவு ஏற்படுகிறது. 'சுருங்கிய அளவு' என்கிற வரையறைக்குள்ளும் தனது தரம் நோக்கின் தெளிவு இவற்றைச் செம்மையாகப் பேணி வருவது பாராட்டுக்குரிய அதன் தனித்துவமாகும்.

வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டதன் பேறாகவே தெரிதல் வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

தகவற்களம், புத்தகவாசல்வழி, போலி எழுத்தாளர்கள் பற்றிய தெளிவைத்தரும் தொடர்கட்டுரை, திரைப்பட விமர்சனம் தரமான சினிமா பற்றிய தகவல்கள், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், குறுங்கதைகள் என்பவற்றோடு கலை இலக்கிய நிகழ்வுகள் பற்றிய குறுங்கட்டுரைகள் இவற்றினூடாகத் தெரிதலின் பணி தொடர்கிறது.

வாசிக்கும் காரியத்தில் நீண்ட நேரத்தைச் செலவிட இயலாதவர்களுக்கும் தெரிதலின் சேவை பெரிதும் உதவுகிறது.

அளவிற் பெரியதாகவோ விலையில் உயர்ந்ததாகவோ இருக்கின்ற ஒரு சஞ்சிகையை விலை கொடுத்து வாங்கிப் படிக்க எமது சாரசரி வாசகர்கள் அதிகம் விரும்புவதில்லை. இந்த நிலையில் தெரிதலின் விலையும் அதன் பயன்பாட்டுப் பரம்பலுக்குத் துணை புரியும் ஒரு காரணியாய் அமைகிறது.

## தெரிதல் பற்றிய ஒரு பார்வை

தீவிரமான இலக்கிய தாகம் மற்றும் தேடல் உடையவர்களுக்கு தெரிதலின் பணியினூடாக பெருமளவு பயன் கிடைக்கிறது.

நூல்களில் நாட்டமோ வாசிப்பதில் ஆர்வமோ இன்று நம்மிடையில் அதிலும் குறிப்பாக இளையோர் மத்தியில் மிகவும் குறைந்துகொண்டு போகின்ற ஒருநிலை தோன்றியிருப்பது அனைவரதும் கவனத்துக்குள்ளாக வேண்டிய ஒரு விடயம்.

எடுத்த எடுப்பில் பார்க்கும் போது அதிகம் பாரதூரமான விடயம் போலத் தெரியாது விட்டாலும் இத்தகைய ஆர்வக் குறைதல், இலக்கிய ரசனை மற்றும் படைப்பாக்க ஈடுபாட்டுக்கான உந்துதல் இவற்றில் ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமாகும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தொலைக்காட்சி, 'இன்ரநெற்' போன்றவை இளையவர்களின் நேரத்திற் பெரும்பங்கைக் கபளீகரம் பண்ணிவிட்ட ஒரு சூழலில் சிறிதளவிலேனும் வாசிப்பைநோக்கி அவர்களை ஈர்க்கும் காரியத்தைச் செய்கின்ற தெரிதலின் பணி காலத்தின் தேவையாக அமைகிறது. கலை, சமூக, இலக்கிய நிகழ்வுகள் பற்றிப் பொதுவாகவே அந்த விடயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்கள் தவிர, ஏனையவர்கள் அக்கறை காட்டுவதில்லை.




பலரும் கொண்டிருக்கிற ஓர் அபிப்பிராயம் எதுவெனில் இந்த மாதிரி விஷயங்கள் ஓய்வாக இருக்கின்ற நேரம் கிடைக்கின்ற 'சோலி'கள் அதிகமில்லாத பேர்வழிகளுக்கானவை என்பதாகும்.

சிந்தனை வளர்ச்சி, அறிவு, முன்னேற்றமான போக்கு இவற்றுடனெல்லாம் மேற்படி கலை இலக்கிய சமூக நிகழ்வுகள் எத்தகைய ஆழ்ந்த தொடர்பு கொண்டிருக்கின்றன என்பது தீர்க்கமான புரிதலைக்கோரி நிற்கும் ஒரு விடயமாகும்.

இன்றைய காலச்சூழலில் சில அடிப்படைத் தெளிவுகளையாவது வாசகர்கள் பெற்றிருச் க

வாசிப்பில் முனைப்புடன் ஈடுபட விரும்புகிற எமது இளந்தலைமுறையினருக்குப் பல தகவல்கள் அதிக அளவில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளூடாக அறியக் கிடைப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் நடக்கிற ஓர் இலக்கிய அல்லது திரைப்பட நிகழ்வு பற்றிய தகவல்கள் கூட எமது பத்திரிகைகளில் பெருமளவில் இடம்பெறுவதில்லை. இந்த நிலையில் கலை இலக்கியம் சார்ந்த முக்கிய தகவல்களை அறியத் தரும் சேவையைத் தெரிதலின் ஆசிரியர் மிகவும் அக்கறையோடு புரிந்து வருகிறார்.

எமது மண்ணின் பெண் எழுத்தாளர் குந்தவையின் சிறுகதை எமது மண்ணின் சிறந்த மொழிபெயர்ப்பாளராகிய ஏ.ஜே.கனகரத்ன அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'த லிற்றில் மகசின்' இதழில் வெளிவந்தது என்னும் தகவலோ பீஞ்சு உள்ளங்களைப் பாழடிக்கின்ற தனியார் தொலைக்காட்சிச் சீரழிவு பற்றிய சுட்டிக்காட்டல்களோ வேறு எந்தப் பத்திரிகையிலும் பெரிதாக அறியத் தரப்படவில்லை.

இளைய தலைமுறையில் அக்கறையுடன் வெளிவரும் 'ஆத்மா' சஞ்சிகை ஒரு விதிவிலக்கு.

இதுபோன்ற விழிப்பூட்டல்களும் பிரக்ஞை பூர்வமான பார்வைப் பகிர்வுகளும் மெல்ல மெல்லத் தோற்றுவித்து வருகின்ற நல்ல மாற்றங்கள் அவசியம். கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

**ந.சத்தியபாலன்**

# 'இலகு' பஸ்...






விபத்தில் ஒரு காலை இழந்தவர் அகர்வால். மூன்று சக்கர சைக்கிளில் தான் அவர் வளைய வர முடிந்தது. பஸ், ரயில் போன்றவற்றில் ஏறுவதானால், பிரம்மப் பிரயத்தனப்படவேண்டும். அதுவும் அக்கம் பக்கம் யாராவது உதவினால்தான் கைகூடும்.

அகர்வாலின் அவஸ்தைகளைப் பரிவுடன் புரிந்துகொண்டதுபோல், ஒரு பஸ்ஸை வடிவமைப்பது 'அசோக் லேட்டன்'. அகர்வால் மட்டுமன்றி அவரைப்போல் இயக்கம் தடைப்பட்ட ஏராளமான நபர்கள் சுலபமாக சக்கர நாற்காலியை உருட்டிச்சென்று ஏறி அமரும் வகையில் வடிவமைக்கப்பட்ட பேருந்து அது.

சமீபத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மெகா பஸ்ஸின் தரைத்தளம் தாழ்வாக அமைந்திருக்கின்றது. ஒரு விசையை இயக்கினால், சக்கர நாற்காலியை உருட்டிப் பஸ்ஸில் ஏற்ற வசதியாக ஒரு சிறிய சரிவுப்பாதை பஸ்ஸிலிருந்து சாலைக்கு வெளிப்படுகின்றது. இந்தச் சரிவில் ஏறி பஸ்ஸுக்குள் அப்படியே சக்கர நாற்காலியோடு நுழைந்துவிடலாம்.

டில்லி, மும்பாய் போன்ற பெரும் நகரங்களில் இந்த பஸ் விரைவில் அறிமுகமாகவிருக்கின்றது. இந்த இரட்டை பஸ்ஸுக்கு 'மெகா பஸ்' என்று பெயரிட்டிருக்கின்றார்கள். வழக்கமான பஸ்களில் ஐம்பது பயணிகள் அமரலாம் என்றால், இதிலே + 30! லேட்டஸ் ரக ஜென் எஞ்சின் பொருத்தப்பட்டு உறுமல், இருமல் எதுவுமில்லாமல் சும்மா வெண்ணெயில் கத்தி இறங்குவதுபோல் வழுக்கிக்கொண்டு ஓடுமாம்.

எல்லாவற்றையும்விட முக்கியமாகச் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாமல் இயங்குமாம் இந்த பஸ்.

'லக்ஸ்லைனர்' என்றொரு சொகுசு பஸ்ஸையும் வடிவமைத்துள்ளது லேலண்ட். 36 சொகுசு இருக்கைகள் அல்லது 24 படுக்கைகள் அல்லது 12 படுக்கை + 16 சொகுசு இருக்கைகள் என்று பல்வேறு கொம்பினேசன்களில் வருகின்றது. இந்த ஏ.ஸி. பஸ்ஸின் பவர் ஸ்ரேறிங்கைப் பிடித்தால் ஓட்டுநர் சிரமம் தெரியாமல் இறக்கை கட்டிப் பறப்பார்!

டுபாய், வளைகுடா நாடுகளுக்கு ஏற்கனவே இந்தச் சுப்பர் சொகுசு பஸ்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இப்போது பாகிஸ்தானிலுள்ள லாஹூர், கராய்ச்சி நகரங்களுக்குச் செல்லத் தயாராகிவிட்டது!

# 'சரு'மமே கண்ணாயினார்!

இன்றைக்குப் பல முகப் பூச்சுக்கள் சந்தையில் கிடைக்கின்றன. எது நல்லது, எது தீயது என்று சொல்லுவது கடினம். சில 'கிரீம்'களைத் தொடர்ந்து பூசுவதால் முகமே கறுத்துப்போய்விடுகிற அபாயம் கூட உண்டு. உபயோகித்துப் பார்த்தவர்களிடம் அபிப்பிராயம் கேட்டு, போட்டுக்கொள்ளுவது பாதுகாப்பானது. மிக மோசமான பாதிப்புகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதாவது 'வயலன்ட் ரியாக்சன்ஸ்' ஏற்படுகின்ற போது, சரும நிபுணரை உடனே அணுக வேண்டும்.

பரு இருக்கிற போது, 'ப்ளீச்சிங்', 'ஸ்டீமிங்' எல்லாம் உதவும் என்பது இன்னும் முழுமையாக நிரூபணமாகவில்லை. பல சமயங்களில் இது பிரச்சினையை அதிகரிக்கிறது.

திருமண நாள் அன்றைக்கு 'மேக்-அப்' போட்டுக்கொள்ள, எல்லோருமே இன்று விரும்புகிறார்கள். அதற்காகச் சிலர் ஒருமாதம் முன்பாகவோ அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்பாகவோ கூட, 'ப்யூட்டி பார்லர்'களுக்குப் போக ஆரம்பித்து விடுகிறார்கள். இது தேவையில்லை. திருமண வரவேற்பு அன்று மட்டும் அலங்காரம் செய்து கொண்டு, அன்று இரவே, எண்ணெய் தடவி முகப்பூச்சுகளைக் கழுவிக்கொண்டு விடுவதுதான் சிறந்தது. பாதுகாப்பானது.



பதினைந்து வயதுமுதல் எண்பது வயதுவரை தாராளமாக 'கெயார்டை' உபயோகிக்கட்டும், தவறே இல்லை. ஆனால், இது பாதிப்பு ஏற்படாத வரை தான்!

சிலருக்குத் தலையில் அரிப்பு ஏற்படும். சிலருக்குக் காதின் பின்புறம் தோல் சிவந்து, புள்ளிகள் கொத்துக் கொத்தாக வர ஆரம்பிக்கும். அதாவது 'ரேஸஷ்'. சிலருக்கு முகத்திலேயே 'ரேஸஷ்' வர ஆரம்பிக்கும்.

இவை வந்தால், உடனே தலைக்குச் சாயம் பூசுவதை நிறுத்திவிடவேண்டும். சிறிதளவு மாற்றம் தெரிந்தாலே நிறுத்திவிடவேண்டும்.

உதட்டுச் சாயம் பூசுவதும் நகப்பூச்சு பூசுவதும் ஒரு பாதுகாப்பு மாதிரி. உலர்ந்த உதடுகளுக்கும், வெடிப்புகள் உள்ள உதடுகளுக்கும் இவை நிச்சயம் உதவும். ஆனால், மிக மிக அபூர்வமாக, இரசாயன பாதிப்பு ஏற்படக்கூடும். உடனே, போடாமல் தவிர்த்து விடுவது நல்லது.

பாத்திரம் கழுவுதல் போன்று நீரில் வேலை செய்பவர்களுக்கு மருதாணியோ, நகப்பூச்சோ நிச்சயம் உதவும்.

'பெடிக்யூர்', 'மேனிக்யூர்' (முறையே கால், கை அழகுப் பராமரிப்பு) செய்து கொள்ளும் போது அளவோடு செய்வது நல்லது. நக ஆழத்தில் சுத்தம் செய்யும் போது ஆபத்து வர வாய்ப்புண்டு.


மஞ்சள் பூசிக் கொண்டால் நல்லது என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும், இதைப் பூசிக் கொண்டு வெயிலில் அலைவது நல்லதல்ல. இது தேவையற்ற பாதிப்பை உண்டாக்கும். 'ஸ்டீமிங்' எனப்படும் நீராவிச் சுத்திகரிப்பு முறையும் அளவோடு இருந்தால் தான் சருமத்துக்கு நல்லது.

# மூளையுள்ள கார்கள்!

படையப்பா திரைப்படத்தில் ஒரு காட்சி. ரஜனிகாந்த் நெருங்கியவுடன் அவரது காரின் கதவுகள் தானாகவே திறந்து கொள்ளும். வேறு ஒரு படத்தில் பறக்கும் காரில் அமர்ந்தபடி 'ராஜாவுக்கு ராஜா நான் தான்' என்று பாடுவார். ஒரு ஹொலிவுட் திரைப்படத்தில் தன் முதலாளியைக் கொன்றவனை அவனது கார் துரத்தித் துரத்திப் பழிவாங்கும்!

இந்தக் கனவுத் தொழிற்சாலைக் கற்பனைகள் விரைவில் நனவானால் வியப்பில்லை. குறைந்தபட்சம் அவற்றில் ஒரு பகுதியாவது உடனடியாகவே அறிமுகமாக வாய்ப்பு நிறைய உள்ளது.

காரில் பொருத் தப்படும் ஐ.வி.ஐ. (இன்டெலிஜன்ட் வெயிக்கில் இனிஷியேடிவ்) எனப்படும் கணனித் தொழில்நுட்பம் காரை ஓட்டுபவர் களுக்குப் பல புதிய வசதிகளைச் செய்துதருகிறது.



முன்னால் செல்லும் வண்டியை நம் கார் நெருங்கும்போது நம் காரில் உள்ள ஒரு பச்சைநிறப்பெட்டி சிவப்பாக மாறும். இதைக் கொண்டே ஓட்டுநர் காரை உடனடியாக நிறுத்திவிடலாம். இதை ஓட்டுநர் கவனிக்காமல் போய் இரு வண்டிகளுக்குமிடையே உள்ள தூரம் அபாயகரமான அளவுக்குக் குறைந்தால் ஓட்டுநர் அணிந்துள்ள 'சீற்பெல்ற்' தானாக இறுகிக்கொள்ளும். ஒரு கணனிக்குரல் 'எச்சரிக்கை, எச்சரிக்கை' என்று ஒலிக்கும்.

இவை மட்டுமல்ல.... வேறு பலவிதங்களிலும் (பாதுகாப்புக் கோணத்தில்) புதிய கார்களை நவீனப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகள் வெகுவேகமாக நடந்து வருகின்றன. இதோ மேலும் சில புதிய வசதிகள்:

'இக்னிஷன்' பட்டனை அழுத்திவிட்டால் மட்டும் வண்டி கிளம்பிவிடாது. ஒரு குறிப்பிட்ட அட்டை காருக்குள் இருந்தால்தான் கார் கிளம்பும். அந்த அட்டை இல்லாவிட்டால் மாற்றுச்சாவி, வெயார்பின் போன்றவற்றின் உதவியுடன் எந்தத் திருடனும் காரைக் கிளப்பிக் கொண்டு போகமுடியாது!

காரில் உள்ள 'மொபைல்' தொலைபேசி மற்றும் வலைத்தள வசதி ஆகியவை சும்மா ஒப்புக்கு அல்ல. இவை ஒரு பிரமாண்டமான தகவல்தொடர்பு வலையுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கார் எங்கே இருக்கிறது என்பதை எந்த நேரத்திலும் கண்டுபிடிக்க முடியும். முக்கியமாக, விபத்தில் சிக்கிக் கொண்டு ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் இருக்கும் காரைக் கண்டுபிடித்து உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

யார் யார் வழக்கமாக காரை ஓட்டுவார்களோ அவர்களது விரல்ரேகைகள் காரில் பதிவுசெய்யப்படும். வேறுயாராவது கிளப்பினால் கார் கிளம்பாது.

பிறவண்டிகளுடன் மோதி விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க செயற்கைக்கோள், 'ராடர்' போன்ற பல அறிவியல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் பல வித பீப் ஒலிகள் கிளம்பி ஓட்டுநரை எச்சரிக்கும்.

எச்சரிக்கைகளைக் கவனிக்காத மனநிலையில் ஓட்டுநர் இருந்தால், தானாகவே (ஸ்டீரிங், பிரேக் போன்றவற்றை இயக்குவது மூலம்) பாதுகாப்பான இடத்தில் காரை நிறுத்தி விடும்.

நன்றி: கல்கி

# அமெரிக்க இந்துக்களின் ஆன்மீக அவா அங்கு போய்ப்பார்த்தால் வியக்க வைக்கும்

பல அன்பர்கள் நிகழ்ச்சி முடிவில் மகிழ்ச்சியோடு தம்மை அறிமுகம் செய்து தமது இருப்பிடங்களுக்கு அழைத்தனர். எனது நேர அட்டவணை பற்றி எடுத்துரைத்து அழைப்பை ஏற்க முடியாத சூழ்நிலையை விளக்கினேன். சிக்காக்கோப் பயண ஏற்பாடு ஆரம்பமான நேரம்முதல் எனது உள்ளத்தில் எழுந்த ஆவல் சுவாமி விவேகானந்தர் உரையாற்றிய சிக்காக்கோ மாநாட்டு மண்டபத்தைப் பார்வையிடவேண்டும்

ஒருவரின் சுற்றுலாப் பயணம் அவருக்குப் பல அனுபவங்களையும் படிப்பினைகளையும் தருவதாகும். அவற்றைச் சம்பந்தப்பட்டவர் தன்னோடு வைத்திருக்காமல் பிறருக்குச் சொல்வதன் மூலம் வேறு சிலரும் பல புதிய விடயங்களை அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகிறது.

தமது பயணம் பற்றிக் கட்டுரை எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் அவ்வாறு செய்யும்போது, பல லட்சக் கணக்கானோர் தெரிந்திராத பல புதிய விடயங்களையும் செய்திகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது. சிறந்த ஆன்மீகப் பேச்சாளரும் சமூக நலனில் அக்கறை கொண்டவருமான இக்கட்டுரையாளரின் அமெரிக்கப் பயண அனுபவங்கள் வாசகர்களுக்குப் பல புதிய செய்திகளைச் சொல்லும்; வியத்தகு பல விடயங்களைத் தரும்.

உதயனின் 'சூரியகாந்தி'க்கென செஞ்சொற்செல்வர் எழுதிய சிறப்புத் தொடரின் இறுதிப் பகுதி இது.

05

என்பதே. சிக்காக்கோ வந்து சேர்ந்த மூன்றாவது நாள் பாஸ்கரன் தம்பதிகளின் இருப்பிடத்திலிருந்து மிக நீண்ட தூரத்திலுள்ள – மிக நெருக்கமான நகர்ப் பகுதியிலுள்ள அம்மண்டபத்திற்கு அழைத்துச்சென்றனர். நான்கு வாகனங்கள் ஒரேசமயம் போகக் கூடிய பெருந்தெரு வழியாக அதிகாலை 5 மணிக்கு தொடங் கிய எங்கள் பயணம், தொடர்ந்து சிக்காக்கோ நகருக்குள்ளே செல்வதற்கு 5 மணி நேரம் எடுத்தது. மேலும் பிரதான நகரை அணுகுவதற்கு புதிய நிலக்கீழ்ப்பாதையில் செல்லக் கூடுதலான பாதைக் கட்டணம் செலுத்தினால் நெருக்கடியின்றி பயணிக் கலாம் என்பதால் கட்டணவழிப் பாதையால் தன் வாகனத்தைத் திருப்பி உரிய இடத்துக்கு அழைத்துச்சென்றார்.

சுவாமி விவேகானந்தர் உரையாற்றிய அப்பிர மாண்டமான மண்டபத்தில் காலடி எடுத்து வைக்கும்போது நிலத்தைத் தொட்டு வணங்கினேன். தற்போது அந்த மண்டபம் (சிக்காக்கோ ஆர்ட் கலறி) சிக்காக்கோ நுண்கலைக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டு வரு கின்றது. அங்கு பணி செய்யும் அலுவலர்களிடம் பாஸ்கரன், சுவாமி விவேகானந்தர் நின்று உரையாற்றிய இடத்தைக் காட் டுமாறு வேண்டினார். உடனே ஓர் அலுவலர் இன்முகத்துடன் எம்மை வரவேற்று எனது வேட்டி, நஷனல் உடையை இரசித்து, என்னை விசாரித்து விவேகானந்தர் உரையாற்றிய மண்டபத்தின் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு செப்புத் தகட்டில் சுவாமி விவேகானந்தர் இவ்விடத்தில் நின்று உரை யாற்றினார் எனப் பதிப்பித்துள்ள காட்சி புல்லரிக்க வைத்தது. அவ்விடத்தில் நின்று உணர்வு பூர்வமாக யான் பிரார்த்தனை செய்தபோது திரு.. பாஸ்கரன் அவர்கள் என்னைப் பார்த்து 20 வருடங்களாக அமெரிக்காவில் வாழும் யான் உங்கள் புண்ணியத்தால் இன்றுதான் இவ்விடத்தைத் தரிசித்தேன். சிக்காக்கோவில் குடியேறி மூன்று நான்கு ஆண்டுகளாகியும் இவ்விடத்தைத் தரிசிக்க கால அவகாசம், ஏன் ஆர்வம்கூட இதுவரை பிறக்கவில்லை என்று கண்கலங்கக் குறிப்பிட்டார். எமக்கு வழிகாட்டிய நுண்கலைக்கூட அலுவலர் இந்தப் பெருந்தெருவுக்கு சிக்காக்கோ மாநில அரசு சுவாமி விவேகானந்தர் தெரு (Swami Vivekanandhar Street) எனப் பெயர் வைத்துள்ளார்கள். சற்றுத்தூரம் நடந்து சென்றால் அதோ தெரியும் சந்தியில் அப்பெயர்ப் பலகையைக் காணலாம் எனத் தெரிவித்தார். உடனே நாம் அவ்விடம் சென்று வீதிப் பலகைக்கருகில் நின்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தோம். சுவாமி விவேகானந்தரின் பெயரில் சிக்காக்கோவில் ஆச்சிரமம் இருப்பதை அறிந்த யான் அவ்விடத்துக்குச் செல்லவேண்டும் என பாஸ்கரன் தம்பதிகளை வேண்டிக்கொண்டேன். மறுப்பின்றி சம்மதித்த அவர்கள் 2 மணிநேரம் தேடி இடத்தைக் கண்டுபிடித்தனர். சிக்காக்கோ கடற்கரை அருகே கறுப்பின மக்கள் நிறைந்த பகுதியில் மிகப் பழைய கட்டடத்தில் ஆச்சிரமம் இருப்பதைக் கண்டோம். அங்கு கழுத்தில் உருத்திராட்சம் தரித்த மூன்று ஆங்கிலப் பெண்துறவிகள் வரவேற்றனர். அங்கு சுவாமி விவேகானந்தர் பாவித்த சில பொருள்களும், கூட்டுப்பிரார்த்தனை நிலையம், நூல்நிலையம், யோகாசன பயிற்சிக் கூடம் என்பனவும் இருந்தன. சுவாமி விவேகானந்தரின் நூல்கள் பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டவை விற்பனை செய்யும் கூடமும் காணப்பட்டது. அங்கு தமிழ் விவேகானந்தரது நூல்கள் விற்பனைக்கிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஞாபகத்துக்கென சில படங்களையும், நூல்களையும் வாங்கினோம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்கும்போது அங்குள்ள பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெறும் போதெல்லாம், விவேகானந்தர் நின்றுபேசிய மண்டபத்தில் பேசும்வாய்ப்பு பெற்றோம் என அறிஞர்கள் பெருமையாக சொல்வதை அனுபவித்தவன் யான். சில ஆண்டுகளுக்கு முன்பு சுவாமி விவேகானந்தரின் யாழ். வருகை குறித்த நூற்றாண்டு விழாவில் இந்துக் கல்லூரியில் யான் பேசும்போது சுவாமி விவேகானந்தர் நின்றும், நடந்தும் பேசிய மண்டபத்தில் சிறியவனாகிய யானும் பேச வாய்ப்புப் பெற்றேன் எனக் கூறிய வரிகளை எல்லாம், சிக்காக்கோவில் நின்றபோது விவேகானந்தர் உரையாற்றிய இடத்தில் நின்ற சுவரை, இருந்த, இடத்தைத் தொட்டுத் தடவிய போது பெற்ற உணர்வு எனது உயிருள்ளவரை மறக்கமுடியாத ஒன்றாகும். சின்ன வயதில் சுவாமி விவேகானந்தர் பற்றிய பேச்சுப் போட்டியின் போது "சிக்காக்கோவில் கர்ஜித்த சிங்கம்" என எனது ஆசிரியர் யாழ்ப்பாணம்தேவன், பேச்சு எழுதித்தந்த பழைய நினைவுகளை நான் இரைமீட்டுக் கொண்டேன்.



அமெரிக்கா சிக்காக்கோ பெருந்தெரு. 'சுவாமி விவேகானந்தர் வீதி' என்ற பெயரில் பெயர்ப் பலகை.

ஆத்மீகவாழ்வு என்பது நாம் நினைப்பதை, நாம் சிந்திப்பதை, நாம்விரும்புவதை நோக்கி அழைத்துச் செல்லும் என்பது யான் பெற்ற அனுபவங்கள் எனக்கே பாடம் தந்தன. கிராமத்து ஆலயங்களில் 10, 15 பேர்முன் பேசத் தொடங்கிய யான் கண்டங்கள் கடந்து அமெரிக்க மண்ணில் உரையாற்றினேன் என்றால், எல்லாமே இறைவன் எனக்குத் தந்த இனிய சந்தர்ப்பம் என நினைத்துப் பார்க்கின்றேன். என்னுடைய அறிவு மிகமிகச் சிறியது. என்னைவிட நூறு மடங்கு அறிவுடைய பெரியோர் இந்நாட்டில் வாழ்வது எனக்குத் தெரிகிறது. ஆனால் இன்று இவ்வளவு தூரம் பெரியவர்களும், என்னை வழிகாட்டி யோரும் எனக்குத் தந்த அன்பும், ஆசீர்வாதமும் என்னை நெறிப்படுத்தியது என்ற உண்மையை நான் நன்றாக அறிய இலண்டன், கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் அன்பர்கள் மீண்டும் மீண்டும் என்னை அழைப்பது போல்,

## அமெரிக்கா நோக்கிய ஆன்மீகப் பயணம்...

அமெரிக்க அன்பர்கள் மீண்டும் அங்கு வருமாறு அழைத்த வண்ணம் உள்ளனர். நியூயோர்க்கில் வாழும் என் பள்ளித் தோழர்கள் உதயசங்கர், சுகந்தராஜ், ரகுநந்தன. சிவரூபன் கூட்டாக விடுத்த அழைப்பை ஏற்றுச் சிக்காக்கோவில் இருந்து அங்கு போகமுடியா மல், கந்த சஷ்டி உற்சவ உரைக்காக யான் அவசரமாகக் கனடா சென்றேன். இன்றுவரை என் இனிய நண்பர்கள் நியூயோர்க் கிற்கு வராத குறையைத் தமது ஏமாற்றத்தைச் சொல்லிய வண் ணமே உள்ளனர். அடுத்த வருட ஆரம்பத்தில் அங்கு வரவேண் டும் என கலிபோர்னியாவில் வாழும் பௌதிகத்துறைப் பேராசிரிய ரும், இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் காயத்திரிகணேசன் அவர்களின் புத்திரனுமாகிய பேராசிரியர் அமுதா அவர்கள் நேரடி யாக யாழ்ப்பாணம் வந்து

**ஆறு.திருமுருகன் எழுதுவது...**

தமது அழைப்பை வலியுறுத்தி விட்டுச் சென்றுள்ளார். எனவே, எனது இரண்டாவது அமெரிகக விஜயத்தை இறை அருளோடு அடுத்த ஆண்டு தொட ரும்போது அங்கு பெறு ம் புதிய அனுபவங்களை உங்களோடு பகிர்வேன் எனக் கூறி பயணக் கட்டுரையை நிறைவு செய்கின் றேன். இக்கட்டுரையை எனது வேண்டுகோளை ஏற்று யான் சொல்லச் சொல்ல எழு திய எனது அருமை மாணவனும், யாழ் பல்கலைக்கழக கலைப்பீட் ஆங்கில இலக்கிய சிறப் புக்கலை இறுதியாண்டு மாணவனுமாகிய இலட்சுமணன் ரமணன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

(முற்றும்)

# அடுத்த பிறப்பும் வேதனைப் புரிதலும்

என் காதலை
நீ நிராகரிக்கின்றாய்...

உள்ளத்துள் ஓயாது
துள்ளிக் குதிக்கும் உன்...
நினைவை அடக்க முடியாது
தினறும் கணங்களே...
பரிசாய்க் கிடைத்துள்ளது.

விதம் விதமான...
கனவுகள் நித்தம் நித்தம்
விஷ்வரூபம் கொண்டு...
நிறம் மாறா உன் நினைவை
ஏந்தி வந்தென்னுள் ...
ஏதேதோ மாயச் செயல் புரிந்து...
என் வாழ்வெங்கும்...
உன் ஞாபகமூர வைக்கிறது.

உனைக் காதலிக்க...
ஒரேயொரு தகுதி இல்லையென
நிராகரிப்புச் செய்கிறாய்

மதம் என்றால்
நான் மாறிடுவேன்
படி என்றால்
நான் படித்திடுவேன்
சா என்றாலும்
நான் செத்திடுவேன்
சாதி வேறென்று...
சாக்கடையுள் எறிகிறாயே.
நான் என்ன செய்ய...?

பிறப்புக் கோட்பாட்டிலேயே
நீ கைவைக்கிறாய்
நான் என்ன செய்ய?

என் 'காதல் முதல் வாதத்துக்கு'
நீ அன்னியமாவதிலேயே
அக்கறையாகிறாய்
சாதி முதல் வாதத்தில் நீ
ஒன்றிப் போகிறாய்
எனது வாய்ப்பான வாதங்களும் ...
உன்னிடம் வாய்ப்பிழக்கிறது
இப்போதெனக்கு...
சாவின் மீதே
அக்கறை திரும்புகிறது
ஒன்றை நீ மனதுள் தேக்கு ...
சாதி பிறப்பாய் இருப்பதனால்
அக் 'கறை' (?) நீக்க முடியா
அவல நினைவோங்கும்
மனத் தோடே நான் சாவேன்

என் மனசின் கொதிப்பு
உனக்குப் புரியும்
எப்போ தெரியுமா
நீ அடுத்த ஜென்மத்தில்
நானாயும் ...
நான் நீயாயும் பிறக்கையில் ...
நீ என்னை விரும்பும்போது...
என் வேதனை புரியுமடி.

-பரணதோழன்-

# ஆசிரியர் – பெற்றோர் – மாணவர்களது அந்தக்காலப் பிணைப்பு இறுக்கமானது



ஈழத்தின் மூத்த தமிழறிஞர் பண்டிதமணியின் மாணாக்கரான ஆசிரியர், உப அதிபர், ஆசிரிய தொழிற்சங்கச் செயலாளர் ஆகிய நிலைகளில் நின்று நீடித்துக் கல்விப் பணியாற்றியவர் ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம்.

இலக்கியம் மற்றும் ஆன்மீகத் துறைகளில் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர். சமூகப் பணிசார் பொது மன்றங்களில் பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். பல்துறைசார் அனுபவம் கொண்ட ஆசிரியமணி அவர்கள் இந்த வாரம் 'முத்தான மூத்தவர்கள்' பகுதியை அலங்கரிக்கிறார். அவருடன் நடத்திய நீண்ட செவ்வியில் வெளிப்பட்ட அனுபவப் பகிர்வு இது.

**❐ கேள்வி: முதலில் தங்களது வாழ்க்கை வரலாற்றுப் பின்னணி குறித்துத் தெரிவிப்பீர்களா?**

❍ **பதில்:** நான் 1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி உரும்பிராயில் பிறந்தேன். எனது தந்தையார் இளையதம்பி அருணாசலம். தாயாரின் பெயர் இரத்தினம். இன்னும் சில நாள்களில் எனக்கு 77 வயது பூர்த்தியாகிறது.

எனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் மேற்கொள்ள நேர்ந்தது. இடைநிலைக் கல்வியைத் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் மேற்கொண்டு, 1944ஆம் ஆண்டில் சி.பா.த. பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தேன். அதையடுத்து ஈராண்டுகள் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்விகற்றேன்.

1947ஆம் ஆண்டில் புத்தளம் அரசினர் ஆண்கள் பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த நான் தொடர்ந்து ஈராண்டுகள் அப்பாடசாலையில் கற்பித்தல் தொழிலை மேற்கொண்டேன். அவ்வேளையில், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி மேற்கொள்ளும் பொருட்டுத் தெரிவானதையடுத்து 1949, 1950 ஆகிய இரு வருடங்களும் ஆசிரியப் பயிற்சியை மேற்கொள்ள நேர்ந்தது.

அவ்வேளையில், சைவாசிரிய கலாசாலை அதிபராக விளங்கிய கல்விமான் மயிலிட்டி சி.சுவாமிநாதன், உப அதிபர் அறிஞர் அளவெட்டி பொ.கைலாசபதி மற்றும் தமிழ் விரிவுரையாளராகவிருந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை உள்ளிட்ட பெரியோர்களிடம் கல்வி கற்கும் தவ வாய்ப்புக் கிட்டியது.

ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறிய நான், 1951ஆம் ஆண்டு தை மாதம் முதல் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிக ஆசிரியராக இணைந்துகொண்டேன். தொடர்ந்து எட்டு மாதங்களின் பின்னர் நிரந்தர உதவி ஆசிரியராக நியமனம் பெற்றேன். தொடர்ந்து இருபது ஆண்டுகள் அப்பாடசாலையிலேயே ஆசிரியராகக் கடமையாற்றிய நான், 1972ஆம் ஆண்டில் ஐந்தாந்தர உப அதிபராக அப்பாடசாலையிலேயே நியமனம் பெற்றேன். 15 ஆண்டுகாலம் அப்பாடசாலையின் உப அதிபராகச் சேவையாற்றிய நான், 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அப்பாடசாலையின் அதிபராகத் தரமுயர்த்தப்பட்டேன். எனது 60 வயதைப் பூர்த்திசெய்த காரணத்தால் அதே ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதியுடன் நான் ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாற நேர்ந்தது. உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த செல்வி ஈஸ்வரியை 1961ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டேன். ஆண் ஒருவர், பெண்கள் மூவருமாக எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

**❐ கேள்வி: கற்பித்தல் பணியில் 37 ஆண்டுகள் என்ற நீண்டதொரு காலம் அதுவும், தங்களது சொந்த ஊரிலுள்ள பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றியுள்ளீர்கள். தங்களது ஆசிரியப் பணி அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளமுடியுமா?**

❍ **பதில்:** மூன்று சந்ததியினருக்குக் கல்வி போதித்த பாக்கியம் நான் பெற்றுள்ளேன். அதாவது, ஆரம்பத்தில் என்னிடம் கல்விகற்ற மாணவர்களின் பேரக்குழந்தைகளை நான் இளைப்பாறும் காலத்தில் பாடசாலையில் அனுமதித்து வழிகாட்டி நெறிப்படுத்தியுள்ளேன்.

நான் ஆசிரியராகச் சேவையில் சேர்ந்த காலத்தில் நவராத்திரி விழாக் காலத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து வீடுவீடாகச் சென்று நவராத்திரித் துதிப்பாடல்களைப் பாடிப் பெற்றோர்களை மகிழ்விப்பதுண்டு. அதற்காகப் பெற்றோர் வழங்கும் நன்கொடைகளை மூலதனமாகக் கொண்டு அப்போதைய வித்தியாலயக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வித நடைமுறைகள் மூலம் அக்காலத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஊரவர்கள் மத்தியில் புரிந்துணர்வும், இறுக்கமான ஒட்டுறவும் நிலவிவந்தது. அந்நிலைமை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியது.

## முத்தான மூத்தவர்கள் 8

எனது பணிக்காலத்தில் சக ஆசிரியர்கள், பிரமுகர்கள் மற்றும் பொது மக்களுடன் வளர்த்துக் கொண்ட நல்லுறவின் காரணமாகச் சகல தரப்பாரின் முழுமையான ஒத்துழைப்புடன் இவ்வித்தியாலயத்தின் வைரவிழா மற்றும் பவளவிழா என்பவற்றை முறையே 1975 மற்றும் 1992 ஆகிய ஆண்டுகளில் வெகு சிறப்பாகக் கொண்டாடமுடிந்தது.

சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பணிபுரிந்த 37 வருடங்களும் எனது வாழ்க்கையின் பொற்காலமாகும். தினமும் பாடசாலை வளாகத்தில் பல நூற்றுக் கணக்கான நெஞ்சில் வஞ்சனையற்ற மாணவர்களுடன் பழகியதன் மூலம் பெற்ற ஆனந்தநிலை சொல்லில் வடிக்கமுடியாதவை;

என்னிடம் பயின்ற மாணவர்களில் பலர் இன்று மேற்கத்திய நாடுகள் பலவற்றிலும் பரவி வாழ்ந்து வருகின்றனர். அவர்களைச் சந்திக்க நேரும் சந்தர்ப்பங்களில் அவர்கள் என்மீது காட்டும் மரியாதையும் அன்பும் எழுத்தறிவித்தவன் இறைவனாகக் கருதப்படுவான் என்பதை மனதில் பதியவைக்கிறது.

**❐ கேள்வி: தாங்கள் ஆசிரியப் பணி செய்த வேளையில் ஆசிரிய தொழிற்சங்க செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டதாகக் கேள்விப்பட்டோம். அவை பற்றிய விவரங்களை வாசகர்களுக்கு அறியத் தரமுடியுமா?**

❍ **பதில்:** உதவி நன்கொடைபெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கென அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமெனவும், அரசினர் பாடசாலை ஆசிரியர்களுக்கென அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கமெனவும் இரு வேறு ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஆரம்பத்தில் இயங்கிவந்தன. ஆரம்பத்தில் கிளைச் சங்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்துவந்த நான், சில



ஆண்டுகள் தாய்ச் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளேன். அவ்விதம் நான் செயலாளராகக் கடமையாற்றிய 1974ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க வெள்ளிவிழா கொண்டாடப்பட்டு வெள்ளிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

1960ஆம் ஆண்டில் சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றதையடுத்து இவ்விரு ஆசிரிய சங்கங்களும் ஒன்றிணைய வேண்டி ஏற்பட்டது. அவ்விதம் உருவானதே இன்று பலம்மிக்க ஆசிரிய தொழிற்சங்கமாக விளங்கும் இலங்கைத் தமிழாசிரியர் சங்கமாகும். இவ்விரு சங்கங்களின் இணைவுக்காக உழைத்தவர்களில் எனக்கும் கணிசமான பங்குண்டு.

## அனுபவங்களைப் பகிர்கிறார் ஆசிரியமணி பஞ்சாட்சரம்

அதேவகையில், ஆசிரியர்களின் நலன் கருதி ஸ்தாபிக்கப்பட்ட வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்திலும் பல தரப்பட்ட பதவிகளை வகித்துச் செயற்பட்டதுடன், சில ஆண்டுகள் அச்சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளேன்.

**❐ கேள்வி: ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பண்டிதமணி ஐயா வாழ்ந்த காலம் பொற்காலம் என்பது இலக்கியத்துறைசார் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் சகலரதும் ஒருமித்த கருத்தாகும். 1949இல் மாணவனாகப் பண்டிதமணி ஐயாவுக்கு அறிமுகமான தாங்கள் 1986இல் அவர் புகழுடம்பு எய்தும் வரையிலும் அவருடன் மிகமிக நெருக்கமாகச் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது. குருவுக்கு நல் மாணாக்கனாக, உற்ற நண்பனாக - பணிவிடை புரியும் தொண்டனாக - அவரையே நிழல்போல் தொடர்ந்து வாழ்ந்ததன் மூலம் நாவலருக்குப் பின் அருகிக் காணப்பட்ட குரு சிஷ்ய உறவைப் பண்டிதமணி ஐயா காலத்திலும் தொடர்ந்து நிலைபெற வைத்ததாக, அவருடன் தாங்கள் கொண்டிருந்த உறவைப் பல அறிஞர் பெருமக்கள் விவரித்துள்ளனர். எனவே, இது பற்றித் தாங்கள் வாசகர்களுக்கு வெளிப்படுத்த விரும்பும் விவரங்கள் யாவை?**

❍ **பதில்:** திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் அவரது மாணவனாகச் சேர்ந்த நாள்முதல் 1986இல் அவர் மறையும் வரை ஐயா எனக்குக் கண்கண்ட தெய்வமாகவே விளங்கினார். தமிழ் விரிவுரையாளர் அவரது மாணவன் என்ற வகையில் ஆரம்பித்த எமது உறவு காலப்போக்கில் தந்தை – மகன் என்ற வகையில் ஒருவர்பால் மற்றவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டமை தெய்வ சங்கல்பம் எனவே கருதுகின்றேன். ஆரம்பகால முதல் பண்டிதர் ஐயா என விளித்தே அவரை அழைக்க ஆரம்பித்த நான் அவர் மறைவுக்குப் பின்னரும் – இன்றும் அவ்விதமே அவரைக் குறிப்பிட்டு அழைக்கிறேன். ஐயா அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பிரமச்சரியத்தைக் கைக்கொண்டு ஒழுகியவர். ஆசிரிய கலாசாலையைவிட்டு நான் வெளியேறிய நாள்முதல் பெரும்பாலும் தினமும் நான் ஐயா தங்கியிருந்த திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று உதவி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். இவ்வழக்கம் ஐயா அவர்கள் மறையும்வரை இடை யீடின்றித் தொடர்ந்து இடம்பெற்றது.

பண்டிதமணி ஐயாவிடம் கட்டுரைகள், அணிந்துரைகள் மற்றும் வாழ்த்துச் செய்திகள் வேண்டி தினமும் கடிதங்கள் கிடைக்கப்பெறும்; நேரிலும் வந்த வேண்டிக்கொள்வர். அவர் எழுதி வைப்பவற்றைப் பிரதிசெய்து உரியவர்களுக்கு நான் அனுப்பி வருவதுண்டு. இலங்கையில் அக்காலத்தில் வெளிவந்த அனைத்துப் பத்திரிகைகளிலும் ஐயாவின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இதன் காரணமாகவே பத்திரிகையாளர்கள், இலக்கியத்துறைசார் அறிஞர்கள் ஆகியோரின் தொடர்புகள் எனக்கு வாய்த்தன.

பேராசிரியர்களான டாக்டர் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், அ.வி.மயில்வாகனம், அ.சின்னத்தம்பி, க.கைலாசபதி பெ.கனகசபாபதி, சு.வித்தியானந்தன், நீதியரசர் வி.சிவசுப்பிரமணியம் என்போர் உட்பட மற்றும் பல அறிஞர்களின் தொடர்பு எனக்குக் கிட்டியதற்கான காரணம் பண்டிதமணி ஐயாவுடன் நான் கொண்டிருந்த தொடர்பேயென்பேன்.

ஐயா அவர்கள் கலந்துகொள்ளும் சகல இலக்கியக் கூட்டங்களுக்கும் நானும் அவருடன் செல்வேன்.

1951இல் பண்டிதர் ஐயாவுக்குத் தினகரன் பத்திரிகை, 'பண்டிதமணி' எனப பட்டம் சூட்டிக் கௌரவித்தது. அதனையடுத்து திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் மயிலிட்டி சுவாமிநாதன் தலைமையில் உருவான பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் செயலாளராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. பண்டிதமணி ஐயாவின் கட்டுரைகளை நூல்வடிவில் வெளியிடும் நோக்கம் கொண்டு அமைக்கப்பட்ட சபையே இதுவாகும். இன்றும் நானே செயலாளராகப் பணியாற்றும் இச்சபை இதுவரையில் பண்டிதமணியின் 26 நூல்களில் பெரும்பாலானவற்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

பண்டிதர் ஐயா எழுதிய கந்தபுராண தக்ஷண காண்ட உரை நூலை பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வெளியிட்டதையொட்டிய நிகழ்வில் சைவாசிரிய கலாசாலையில் படித்த காலம்முதல் நான் தன்னை நிழல்போல் தொடர்ந்து தனக்கு உதவிகள் புரிவதாகப் பண்டிதமணி ஐயா குறிப்பிட்டமை எனக்குக் கிடைத்த பெரும் பேறாக நான் கருதுகிறேன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தால் கொழும்பில் வைத்து பண்டிதமணி ஐயாவுக்கு வழங்கப்பட்ட இலக்கியக் கலாநிதி கௌரவப்பட்டத்தை அவர் நேரில் பெற்றுக்கொள்ள இயலாத நிலையில் தனது சார்பாக என்னைப் பங்கு கொள்ள வைத்தமை எந்த அளவுக்கு பண்டிதர் ஐயாஅவர்கள் என்மீது பாசமும், பற்றும், நம்பிக்கையும் வைத்திருந்தார் என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்தது. குறித்த சான்றிதழ் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் அவர்களால் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மாபெரும் விழாவில் வைத்து அவரால் பண்டிதமணி ஐயாவிடம் கையளிக்கப்பட்டது.

பண்டிதமணி ஐயாவுக்கு இலக்கியக் கலாநிதி கௌரவப்பட்டம் வழங்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டும் வகையில் யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களால் வீரசிங்கம் மண்டபத்தில் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் நன்றியுரை நிகழ்த்திய பண்டிதமணி ஐயா "ஆசிரியர் பஞ்சாட்சரம் எனக்கு வாய்த்த அனுமன்" எனக் குறிப்பிட்டு என்னைப் பெருமைப்படுத்தியமை எனது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரும்பாக்கியமாகக் கருதுகின்றேன்.

**❐ கேள்வி: தங்களது இலக்கியத்துறை வெளிப்பாடுகள் மற்றும் பங்களிப்புகள் குறித்துத் தாங்கள் தெரிவிக்கவிரும்பும் தகவல்கள் யாவை?**

❍ **பதில்:** பண்டிதமணி ஐயா உயிர் வாழ்ந்த வரை அவரைப் பற்றிய பேச்சுக்களை மட்டுமேயன்றி, இலக்கிய சம்பந்தமான பேச்சுகள் எதனையும் நான் மேற்கொண்டதில்லை. அவரது மறைவுக்குப் பின்னரே பொது மேடைகளிலும், வானொலி நிகழ்ச்சிகளிலும் பல இலக்கியப் பேச்சுக்களை நான் நிகழ்த்தியுள்ளேன்.

**செவ்வி கண்டவர்: வீயெஸ்ரி**

அந்தவகையில், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தில் முக்கியபங்கு வகித்தவரும், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய ஸ்தாபகருமான ஏழூர் இராசரத்தினத்தின் நூறாவது அகவை விழாவை அவ்வித்தியாலயம் கொண்டாடிய வேளையில் அவரது நினைவுப் பேருரையை நான் நிகழ்த்தும் பாக்கியம் பெற்றேன.

அந்தவகையில், மேலும் "இந்து போர்ட்" ஸ்தாபகர்களில் ஒருவரான சு. இராசரத்தினம் அவர்கள் நினைவாகத் திருநெல்வேலியில் சிலைநிறுவி எடுத்த பெருவிழாவில் அவரது சேவை குறித்த நினைவுப்பேருரையை நிகழ்த்தும் பாக்கியம் எனக்கு வாய்த்து.

நான் நிகழ்த்திய பேச்சுக்களில் பெரும்பாலானவை நாவலர் பெருமான் பற்றியதாகவே அமைந்தன. இவை தவிர ஊர்ப் பொதுமக்கள் என்மீது கொண்டிருந்த அபிமானம் காரணமாக உரும்பிராய் பகுதிகளில் அமைந்துள்ள ஆலயங்களில் இடம்பெற்ற திருவிழாக்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு வேண்டிக் கொண்ட சந்தர்ப்பங்களில் அவர்களது வேண்டுகோள்களை நிறைவேற்றும் நோக்கில் சொற்பொழிவுகள் மேற்கொண்டதுண்டு.

இலங்கையில் பிரசுரமான பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளேன். இவற்றில் அதிகமான கட்டுரைகள் 'தினகரன்' பத்திரிகையிலேயே வெளிவந்துள்ளன. பண்டிதர் ஐயா பற்றிய எனது கட்டுரைகள் நூல் வடிவு பெறத்தக்கவை என்பது அடியேனின் நம்பிக்கை.

சுமார் 40 ஆண்டு காலமாகப் பண்டிதர் ஐயாவின் பல்வகைப்பட்ட எழுத்துக்களை நூல் வடிவம்பெறச்செய்யும் முயற்சிகளில் நான் முன்னின்று செயற்பட்டுவந்தது மட்டுமன்றி, தற்போதும் அதே நோக்குடன் இயங்கிவருகின்றேன். ✳

# யாரொடு நோவோம்...?

இப்போது பாடசாலை அனுமதிகளின் காலம் பிரபலமான - வசதியான - பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளைச் சேர்க்கும் ஆவலில் பெற்றோர்கள் அலைகிறார்கள். முன்வழியால் சென்று, பாதை அடைபடும் நிலையில் பின்கதவால் நுழைந்து எவரொருவரது காலைப்பிடித்தாவது அனுமதிபெற்றுவிடப் பிரயத்தனப்படுகிறார்கள் அவர்கள்.

பாடசாலைகளும் தமது 'செல்வாக்கை' நிலைநிறுத்தும் காலமும் இதுதான். தமது பல்வேறு தேவகைளுக்குமான நிதியினை இந்தப் பெற்றோர்களிடம் கோரப்படும் 'நன்கொடை' மூலமாக ஈடுசெய்யவே பாடசாலைகள் முயல்கின்றன. பல பாடசாலைகள் அடுத்த ஆண்டுக்கான நன்கொடைத் தொகையை நிர்ணயித்துவிட்டன.

இதில் தனியார் பாடசாலைகள்தான் முன்னணியில். எந்தெந்தப் பாடசாலைகள் எவ்வளவு நன்கொடையைக் கோரியுள்ளன என்ற விவரங்கள் ஓரளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், பாடசாலை அனுமதியின் பொருட்டு எந்தவிதமான அறவீடுகளும் செய்யப்படக்கூடாதென கல்வியமைச்சு ஏற்கனவே 'சுற்று நிருபம்' அனுப்பியுள்ளது. அதைக் கருத்திலெடுக்கும் நிலையில் எந்தப் பிரபல பாடசாலைகளும் இல்லை. அதற்கும் காரணமுண்டு. தமது பாடசாலைகளின் 'தரத்தை' - அந்தஸ்தை - நிலை நிறுத்தும் அளவுகோலாக இதைக் கொள்வது ஒரு காரணம். மாறிவரும் புதிய கல்விசார், பாடசாலைசார் தேவைகளைக் கல்வித் திணைக்களம் வழங்காத நிலையில் அதை இத்தகைய நிதியினைப் பயன்படுத்திச் செய்ய எண்ணுவது மற்றொரு காரணம். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தம் உடைத்து நொருக்கிய பாடசாலைகளின் கட்டுமானங்கள் சரிவரச் செய்துமுடிக்கப்படவில்லை. ஆளணித் தேவைகள் பூர்த்தியாக்கப்படவில்லை. எனவே, அவற்றைப் பூர்த்தியாக்குவதற்குப் பாடசாலைகள் பயன்படுத்தும் ஒருவழி இத்தகைய நன்கொடைகளே!

பெருமளவில் பெற்றோர்கள் படையெடுத்து அனுமதிக்காக அலையும் நிலையில், அவர்களைத் தடுத்து நிறுத்தப் பாடசாலைகள் பயன்படுத்தும் கவசமும் இந்த நன்கொடைகளே!

பிரபல பாடசாலைகளில் அனுமதியின் போது இரண்டு விதமான தரப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. அனுமதிப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அனுமதியளிப்பது ஒன்று. இது தமது பாடசாலைகளின் உயர்ந்த பெறுபேற்று இலக்கினை முதன்மைப்படுத்தியதாக அமைகிறது எனலாம். மற்றது வசதி படைத்த, செல்வந்தப் பிள்ளைகளுக்கு அனுமதியளிப்பது. இங்கு யார் அதிக நன்கொடையளிக்க முன்வருகிறாரோ அவருக்கு முதலிடம் கிடைத்துவிடும்.

மறுபுறத்தில் பெற்றோர்கள், குறிப்பாக அரச உத்தியோகம் பார்க்கும் நடுத்தர வர்க்கத்தினர் எப்பாடுபட்டாவது பிரபல பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளைச் சேர்ப்பதே 'தம் தலைக்கடன்' என எண்ணுகின்றனர். அதிலும் இடைநிலை வகுப்புகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக அவர்கள் படும்பாடு சொல்லுந்தரமன்று. வறிய மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கும் புலமைப்பரிசில் பரீட்சையை இந்த நடுத்தர வர்க்க 'உத்தியோகக்குழாம்' அதிகம் கருத்தில் எடுத்திருப்பதற்கு ஒரு காரணம் பெருமைப்படுதல் என்றால், மறுகாரணம் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதே. அதைவிட வேறெந்த நன்மையும் புலமைப்பரிசில் பரீட்சையால் இவர்களுக்குக் கிட்டாது.

பெரும்பாலான பெற்றோர்கள் பாடசாலைகளை பெறுபேறுகளைப் பிரசவிக்கும் நிலையங்கள் என்றே எண்ணுகின்றனர். பாடசாலைகளும் தமது பெறுபேற்றுக் கவர்ச்சியினையே அதிகம் முதன்மைப்படுத்துகின்றன. உண்மையில், இலங்கை அரசால் சகல விதமான வளங்களும் சரியான முறையில் ஏற்றசெயல் ஒழுக்கங்களுக்கு ஊடாக எல்லாப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டால், பங்கீடுசெய்யப்பட்டால் இத்தகைய பிரச்சினைகள் பெருமளவுக்கு எழாது.

நகரப்புறப் பாடசாலைகள் மீதான கவர்ச்சிக்குக் காரணம் அங்கு பல்வேறு வசதி, வாய்ப்புகள் கட்டமைக்கப்பட்டிருப்பதே. பிரதேச ரீதியாக வளங்கள் சரியான முறையில் காய்தல், உவத்தல் இன்றி எல்லாப் பாடசாலைகளுக்கும் கல்வி அதிகாரிகளால் வழங்கப்படுமானால் அனுமதி நெருக்கடிகள் குறைக்கப்படலாம். கூடவே, பிரதேசப் பாடசாலைகளது பெறுபேற்றுக் கவர்ச்சியும் அதிகரிக்கும். அவ்வகையில், ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தபடி, பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் இரு தேசிய பாடசாலைகள் அமைக்கப்படுமானால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.


இந்த அனுமதி தொடர்பில் இன்னொரு பக்கமும் உண்டு. முன்னர் பிரபலமாக இருந்த பல பாடசாலைகள் இன்று தமது மாணவர் தேவையைப் பூர்த்திசெய்ய 'ஆள் பிடிக்க' வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. எப்பாடு பட்டாவது மாணவர்களைச் சேர்க்க இப்பாடசாலைகள் பிரயத்தனப்படுகின்றன. நகர மயப்பட்ட 'மாணவர் புலப்பெயர்வு' கிராமப்புறப் பெரிய பாடசாலைகளையே பரிதாபத்திற்குள் தள்ளிவிட்டன என்கின்றன தகவல்கள்.

அதேவேளை, கிராமங்களில் புலமைப்பரிசில் சித்திகளை முதன்மைப்படுத்தி சில பாடசாலைகள் தமது மாணவர் எண்ணிக்கையைப் பெருக்க முற்படுகின்றன. இதனால், அயல் பிரதேசங்களிலும் அவை தமக்கான மாணவர்களைத் திரட்ட முயற்சிக்கின்றன. விளைவு வேறு சில பாடசாலைகளில் மிகக்குறைந்த எண்ணிக்கையான பிள்ளைகளே சேர வேண்டியேற்படுகின்றது.

ஆக, பாடசாலை அனுமதியென்பது எதிரும் புதிருமான பல சுவாரசியமான சங்கதிகளுடன் தொடர்கின்றது.

- ஏகலைவன்.

# யாழ். பாணம்



# குளிக்கப் போய்.....

ஒரு புறம் தனக்கு முத்தோன் கருணாகரனாய்த் துணையிருக்க, மறுபுறம் அன்னையாம் பர்வதவர்த்தனி அருளாட்சி புரிந்திருக்க, - நடுநாயகமாய் வீற்றிருந்து அடியாருக்கு அருள் பாலிக்கும் அழகுத் தெய்வம் முருகனின் ஆலயம் ஈது.

வரலாற்றுப் பெருமைமிகு தலங்கள் இவ்விதம் அருகருகே அமைவது அபூர்வம். அவ்வூரில் அவ்விதம் வாய்ந்திருப்பது அவ்வூர் மக்களின் பூர்வஜென்ம புண்ணியபலன்.

மண்வளமும், நன்னீர் வளமும் சிறந்து வாய்த்ததால் விவசாயத்திலும், சிறந்த கல்விக்கூடங்கள் வாய்க்கப்பெற்றமையால் கல்வி கேள்விகளிலும், சிறந்த அவ்வூர்ப் பொதுமக்கள், ஆழ்ந்த தெய்வபக்தியும், நல்லொழுக்கப் பண்பாடும் கொண்ட ஒரு நற் சமுதாயம்.

ஏனைய சில கிராமங்களுக்கு முன்னுதாரணமாகவும், ஏனைய ஒரு சில கிராமங்களுடன் போட்டி போடும் வகையிலும் இக்கிராமத்துப் பொதுமக்கள் தமது ஆத்மீக ஈடுபாட்டை பக்தி பூர்வமாகவும், உற்சாகத்துடனும் வெளிப்படுத்தி வருவது பல்லாண்டுகளாகத் தொடரும் செயற்பாடுகள்.

அந்தவகையில், குறிப்பிட்ட ஆலயங்களின் நித்திய பூஜைக் கருமங்களும் சரி, திருவிழாக்களும் சரி, ஆகம விதி முறைகளுக்கமைவாக, பக்திபூர்வமாக சிறப்பாக நடந்தேறும். தம்மை நாடிவரும் அடியவர்கள் குறை களைந்து, அருள் சுரந்து வாழவைப்பதால் அன்னையும் மைந்தர்களும் அவ்வூர் மக்களுக்குக் கருணைத் தெய்வங்கள்.

இந்த ஆலயங்களின் வருடாந்த உற்சவங்கள் மட்டுமன்றி விசேட உற்சவங்களும் ஊரையே கலகலப்பூட்டும் அளவுக்குக் களைகட்டும். பக்தி மணம் கமழும் ஆலயச் சூழலும் வழிபடு பக்தர்களின் ஆழ்ந்த தெய்வநம்பிக்கையுமே ஊரின் சிறப்புக்குக் காரணமென நான் பல சமயம் எண்ணியதுண்டு.

முருக வழிபாட்டில் கந்தசஷ்டி விரதம் சிறப்புமிக்கது. அந்த ஆலயத்திலும் அது அத்துணை சிறப்புடன் கொண்டாடப்படும். கடந்த பல ஆண்டுகளாய் ஆரம்பம் முதல் இறுதிவரை அந்த ஆறு நாள்களும் முருகனின் விழாக்கண்டு, அருள் மழையில் நனைந்து ஆனந்தித்திருக்கின்றேன்.

வழமைபோல் இம்முறையும் சூரபத்மனுடன் போரிட்டு வென்று அவனது அகந்தையை அடக்கி, முருகன் அடியவரைக் காத்து அருளும் சூரசம்ஹார விழாவில் அடியேனும் பிரசன்னம்.

ஓர் ஒழுங்கமைந்த பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் என எமது ஆத்மீக நாட்டம் பாரம்பரிய பெருமைமிக்கவை. ஆலய நடைமுறைகளும் செயற்பாடுகளும் அத்தகையவையே. உரிய இடத்தில் - உரிய வகையில் பக்திபூர்வமாக அவை கடைப்பிடிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே பக்தர்களுக்கு மன மகிழ்வும், மன நிறைவும் கிட்டும் என்பதோடு நிகழ்வும் சிறக்கும்.

நாதஸ்வரக் கலை சைவ சமயத்தினரின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த - அவர்களால் புனிதமாகப் போற்றப்படும் கலை. எத்தனை இடர் எதிர்ப்பட்டபோதிலும், தமிழ் மொழியும் சைவசமயமும் சாகாவரம் பெற்றுத் திகழ்வது போன்று, இவற்றுடன் நெருக்கமான சில கலைகளும் காலத்தால் அழியாத சிறப்புக் கொண்டவை. நாதஸ்வரக் கலை தமிழர் என்பதற்கு மேலாக சைவர்கள் வாழ்வுடன் நெருக்கம் கொண்டதொன்று.

இன்றைய வேகமான உலகியல் மாற்றத்துக்கேற்ப எமது வாழ்க்கை முறைகளிலும் மாற்றம் தவிர்க்கமுடியாததொன்று. ஆனால், பாரம்பரியம் மிக்க - அடிப்படைக் கட்டுக்கோப்புகள் கொண்ட - எமது கோட்பாடுகள் சிலவற்றை மாற்றிக்கொள்வதைச் சமூகம் இலகுவில் சீரணித்துக் கொள்ளாது.

பக்திபூர்வமான - மனமகிழ்வும், மன நிறைவும் அளிக்க வல்ல சூழலில் சூரபத்மவதம் இடம்பெற்ற வேளை புறச்சூழல் நிகழ்வுகள் மனதை நெருடச் செய்து விட்டனவே!... அண்மைக்காலமாக சினிமா உலகைக் கலக்கிவரும் திரைப் படத்துள்ளிசைப் பாடல்களை - புனிதமான - பக்திபூர்வமான, புறச்சூழலிலும் ஆத்மீக உணர்வுதூண்டப்படவேண்டிய வேளையில் அதனைக் கெடுத்துவிடும் வகையில் நாதஸ்வரக் கலைஞர்கள் இசைத்ததன் மூலம் வேண்டுமானால் இளஞ் சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கலாம். ஆனால், அது ஒட்டுமொத்த ஆன்மீக ஈடுபாடு வேண்டப்பட்ட அந்த வேளையில், அந்த இடத்தில் பக்தர்களின் மனதை நோகடிப்பதாய் அமைந்துவிட்டது. போதாததற்குச் சூரபத்மனின் உருவைக் காவிச்சென்ற பக்தர்கள் நாதஸ்வரத்தில் இசைக்கப்பட்ட அத்துள்ளிசைக்கேற்ப சூரபத்மனின் உருவை மேலும் கீழும் பக்கவாட்டிலும் ஆட்டி அசைத்து பக்திபூர்வமான அந்நிகழ்வு வெறும் கேளிக்கை நிகழ்வு போலத் தோற்றமுறவைத்தனர்.

நமது ஐம்புலனும் பெரும்பாலும் கட்டுக்கடங்காது தறிகெட்டு இயங்குபவை. அவற்றை ஒரு நிலைப்படுத்தி ஆண்டவன் பால் செலுத்தி வழிபடுவதற்குப் புறச்சூழல் சில சமயம் பாதிப்பாக அமைந்து விடுவதுண்டு. காலம், இடம், சூழ்நிலை சந்தர்ப்பத்துக் கேற்ப வெளிப்படுத்தப்படும் கலை வெளிப்பாடுகளே மக்களை மகிழ்ச்சியுற வைக்க வல்லன. அவர்களின் மதிப்பைப் பெற்றுத் தரவல்லன. இதனை நாதஸ்வரக் கலைஞர்கள் மட்டுமன்றி ஏனைய தரப்பினரும் உணர்வது எப்போது?



# பனை நினைவு

நேற்றெங்கள் முற்றத்தில்
நீண்டு வளர்ந்து நின்று
காற்றோடு பேசிய அக் கரிய பனை இன்றில்லை!
காவல் நிலை அரணில் -
வேற்றான் உயிர் தறிக்க விழ்ந்த அதன்
வெற்று உடல்!
ஊற்றாய் எழும் நினைவில் ஊறித் திளைக்கையில் ...

உச்சி முகில் தழுவ உயர்ந்த மரம்
உதிர்த்த பழங் காவோலை
வெட்டி அதன் மட்டையினை வேறாக்கி
வேலியினில்
கட்டி 'வரிச்சடித்தம்'
காங்கில் அடுப்பெரித்தும்
புட்டவித்தம்;
புது ஓலை வெட்டி வெயில் காட்டிப்
பெட்டிகளும் பாய்பலவும்
பின்னிப் புளங்கித்தம்!
வட்டினிலே தட்டி அதில் ஊறிய கள் ஒன்றாக்கி
முட்டியினிற் சேர்த்து மூக்குவரை குடித்தம்;
நுங்கின் ருசி நுகர்த்தம்;
நுனியிலிருந்து 'பொத்'தென்று விழும்
பழம் பொறுக்கிக் களி பிசைந்து
பணியாரம்
சுட்டுச் சுவைத்திருந்தம்! - களி
தட்டிப் பனாட்டு செய்தம்...
...எங்களது சீவியத்தில் ஒன்றாகச்
சாங்கமித்த அந்தக் கரிய பனை
இங்கின்று இல்லைத்தான்!
- என்றாலும்
அதன் நினைவாய்ப் போட்ட
பனம் பாத்தியிலே
பொலிந்து புதுசா எழுந்த 'வடலி' கண்டு
எந்தன் மனந்தேறும்.

- ஜெ.பிறேம்குமார்.

# நீயிருப்பதை நீயறியமாட்டாய்!

விரிகிறதென் பயணங்கள்...!
நீயிருக்கும் இடம் நோக்கியென்
மனதின் இலக்கு
வீறுடன் பயணிக்கிறது

தினமும் நான்
நிமிரும் கணமொன்றின் நினைப்போடே
விரிகிறதென் பயணங்கள்!

உன்னை ஆராதித்து...
எனது மௌன வழிபாடு
இன்னுமின்னும் நினைவு வரம் வேண்டி
உடையாது தொடர்கிறது -
நீயெனக்கருள்வது தெரியாமலே
வரங்கள் பெற்று
இன்னுமின்னும் நான்
நிமிர்ந்து நிலைக்கிறேன்

உனது நினைவு வரங்களின்
"அசாதாரணம்" ஓர் ஆத்மீக பலமாய்
என்னை வளைத்துப் பிடித்து ஆள்கிறது.
என்னை ஆள்பவளாய்...
எனக்கு அருள்பவளாய்...
என்னை நடத்துபவளாய்...
நீ இருப்பதை நீயறியமாட்டாய்
உன் நினைவுப் பலம் நீயறியமாட்டாய்
நான் மட்டுமே அறிவேன்.



- த.அஜந்தகுமார்.